E-mail : omsakthieditorial@gmail.com
https://archive.org/search.php?query=omsakthi
நவம்பர் 2020
விலை ரூ.15

ஓம் சக்தி

நிறுவனர் :
நா. மகாலிங்கம்



திருமலை திருப்பதியில் பிரம்மோற்சவம்

சுரங்கம்

டாக்டர் நா. மகாலிங்கம்



சுதந்திர இந்தியா மேலும் சுடர் வீசுகின்றதென்றால், அதற்குக் காரணம் அதன் ஜனநாயகம்தான். உலகிலேயே 30 கோடி மக்களைக் கொண்ட அமெரிக்காவை ஜனநாயக தேசம் என்பார்கள். 130 கோடி மக்களைக் கொண்ட முதல் ஜனநாயக தேசம் இந்தியாதான்.

தேர்தல் மூலம் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இந்திய ஜனநாயகம் ஆட்சியை 16 முறை 70 ஆண்டுகளாகப் புதுப்பித்துள்ளது. இந்தியத் தேர்தல் முறையைக் கண்டுவியந்த ஐ.நா. ஸ்தாபனம், ஆப்கானிஸ்தானில் தேர்தலை நடத்தித் தருமாறு இந்தியாவை அணுகியது. அதேபோல ஈராக்கில் தேர்தல் நடத்த உதவுமாறு இந்தியத் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொள்ளப்பட்டதை நினைவுகூரலாம்.

ஆரோக்கியமான இந்திய ஜனநாயகத்தில் நோயாக இருப்பது அளவுக்கு அதிகமான கட்சிகளின் எண்ணிக்கைதான். அந்த எண்ணிக்கையைக் குறைப்பதற்கு உரிய ஆலோசனைகளை அருட்செல்வர் 1999-லேயே கட்டுரையாக எழுதியிருந்தார். அவர் எழுதி 21 ஆண்டுகளில் இந்தியக் கட்சிகளின் எண்ணிக்கை மேலும் அதிகமாகிவிட்டன என்பது ஒரு நகைமுரண்.

இந்தப் பின்புலத்தில், சென்ற அக்டோபர் 14-ஆம் தேதி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை, அரசியல் கட்சிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு யோசனைக் கூறியுள்ளது. அந்த யோசனை, ‘லெட்டர் பேடு’ கட்சிகளுக்குத் தடைவிதிக்க வேண்டும். 25 ஆயிரம் உறுப்பினர்களுக்கு அதிகமாக இருந்தால்தான் ஒரு கட்சியைத் தேர்தல் கமிஷன் பதிவுசெய்ய வேண்டும். இவற்றைப் போல யோசனைகளை 21 ஆண்டுகளுக்கு முன்பே அருட்செல்வர் கூறியுள்ளவற்றை வாசகர்கள் பரிசீலிக்கலாம்.

– இ.ஆர்.



இத்தனை கட்சிகள் எதற்காக?

இன்றைய உடனடித் தேவை நிலையான ஆட்சிதான். 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப் படுகின்ற ஆட்சி 5 ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டும்.

கவிழ்ப்பதற்கான காரணங்களை நியாயப் படுத்துவதையோ, கவிழ்ப்பதை ஒரு கடமையாகக் கருதுவதையோ கட்சிகள் அனைத்துமே கைவிட முடியாவிட்டாலும், 5 ஆண்டுகளுக்கு ஒத்திப் போடவாவது உறுதி கூறவேண்டும்.

ஏனெனில், இந்த 5 ஆண்டுக்காலத்தில் சில முக்கியமான கடமைகளை நாம் நிறைவேற்றி முடித்தாக வேண்டும்.

சென்ற 10 ஆண்டுகளில் நமக்குக் கிடைத் துள்ள கசப்பான படிப்பினைகளைக் கொண்டு முதலில் நமது அரசமைப்புச் சட்டத்தின் சில அம்சங்களை மறுசீரமைப்புக்கு உட்படுத்தியாக வேண்டும்.

நமது அரசமைப்புச் சட்டம் அநேகமாக தோற்றுப் போய்விட்டது என்று அரசியல் சிந்தனை யாளர்கள் மத்தியில் ஒரு கருத்து நிலவுகிறது. அது உண்மைதான் என்பதை நிரூபிக்கும்

வகையில் நாள்தோறும் புதுப்புதுக் கட்சிகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன.

மக்களவைத் தேர்தலில் கலந்து கொள்ளும் கட்சிகள் போட்டியிடும் தொகுதியில் 10 சதவிகித வாக்குகளைக்கூடப் பெற முடியவில்லை என்றால், அக்கட்சிகளை இயங்குவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் ஒரு சரியான யோசனை தெரிவித்துள்ளார்.

காளான்களைப் போலக் கட்சிகள் மலிந்து வருவதைக் கண்டு காஞ்சி சங்கராச்சாரியார்கூட சற்றுக் கடுமையாகவே குறிப்பிட்டு, அவசரச் சட்டம் கொண்டு வந்து மூன்று பெரிய தேசியக் கட்சிகளைத் தவிர, மற்ற பிராந்தியக் கட்சிகளை மத்தியில் ஆட்சி செய்வதற்குத் தடைவிதித்துவிட வேண்டும் என்று கூறியுள்ளார்.

மாநில மற்றும் பிராந்தியக் கட்சிகள் தேசியக் கட்சிகளுக்கு ஆதரவளிக்க மட்டும் அனுமதிக்கலாமே தவிர, மத்திய அரசில் இடம்பெற அவற்றை அனுமதிக்கக்கூடாது என்கிறார்.

ஆன்மீக ஞானியாகிய சங்கராச்சாரியார்கூட, தேசத்தில் அமைதி இருந்தால்தான் அபிவிருத்திகள் நடக்கும் என்று நம்புகிறார்கள். அதற்கு மாறாக நிலையற்ற அரசு அமைந்தால் குழப்பமும் தேக்கமும்தான் ஏற்படும் என்று கவலைப்படுகிறார்கள்.

ஓர் அரசியல் கட்சி, தாம் போட்டியிட்ட எல்லாத் தொகுதிகளிலும் மொத்தம் பதிவான ஓட்டுகளில் 5 சதவிகித அளவைக்கூட எட்டவில்லையானால் – அக்கட்சியின் வேட்பாளர்கள் ஒரு சிலர் ஜெயித்திருந்தாலும்கூட – அக்கட்சி மக்களவைக்கோ, சட்டப்பேரவைக்கோ செல்லும் உரிமையை இழந்து விடுமாறு செய்ய வேண்டும்.

அந்தத் தொகுதிகளில் 2–ஆவது அதிகபட்ச ஓட்டு வாங்கியவர்களை வெற்றி பெற்றதாக அறிவிக்க வேண்டும். ஆனால், அந்தக் கட்சியும் 5 சதவிகிதத்திற்கு அதிக ஓட்டுக்களை அனைத்துத் தொகுதிகளிலும் பதிவான வாக்குகளில் வாங்கியிருக்க வேண்டும்.

இது ஜெர்மனியில் நடைமுறையில் உள்ளது. கட்சிகளின் எண்ணிக்கை அதிகமாகாமல் தடுக்க இந்த முறை அங்கே கடைப்பிடிக்கப் படுகிறது.

இந்தியாவில் ஏறக்குறைய 700 அரசியல் கட்சிகள் உள்ளன. சாதிச் சங்கங்கள் ஒவ்வொன்றாகத் தங்களை அரசியல் கட்சிகளாக அறிவித்துக் கொண்டு வருகின்றன. கட்சிகளின் இந்த எண்ணிக்கையைக் குறைக்க ஒரு வழி கண்டாக வேண்டும்.

சுதந்திரம் அடைந்த ஒரு தேசத்தில் சுபிட்சத்திற்கான அபிவிருத்தி வேலைகள் ஆயிரக்கணக்கில் இருக்கும்போது, சாதிக்கொரு கட்சி என்று அமைத்துக்கொண்டு விமர்சனம் செய்து கொண்டிருப்பது ஒரு வகையில் பொறுப்பற்ற செயலாகும்.

எந்த ஒரு நாடும் தனது சுதந்திரத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமானால், அந்த நாட்டின் ராணுவ பலத்தைவிடப் பொருளாதாரப் பலம்தான் அதிகமான அளவில் இருக்க வேண்டும். உண்மையில், நமது ராணுவம் எண்ணிக்கையில் பெரிய ராணுவம்தான். ஆண்டுக்கு ரூ. 52 ஆயிரம் கோடி அதற்காக நாம் செலவழிக்கிறோம். அப்படியென்றால், நமது பொருளாதாரப் பலம் ராணுவ பலத்தைவிட அதிகம் உள்ளதா என்றால், நிச்சயமாக அப்படி இல்லை.

இன்னும் வறுமைக் கோட்டிற்குக் கீழே 50 சத மக்கள் வாழ்கிறார்கள். 60 சத மக்களுக்கு இன்னும் கல்வி வசதி இல்லை. மருத்துவ வசதி இல்லை. பஞ்சத்திலிருந்து பற்றாக்குறை நிலைக்குத்தான் நாம் வளர்ந்திருக்கிறோமே தவிர, இன்னும் உபரி நிலைக்கு உயரவில்லை.

20 கோடி டன் உணவு தானியத்தை நாம் உற்பத்தி செய்து சாதனைப் புரிந்திருக்கிறோம். 1.5 கோடி டன் சர்க்கரையை உற்பத்தி செய்து சாதனைப் புரிந்திருக்கிறோம். ஆனாலும், வறுமைக் கோட்டுக்குக் கீழே 50 சதவிகித மக்கள் இன்னும் இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு 3 வேளை உணவு இல்லை. காரணம், வாங்கும் சக்தி இல்லை. ஆண்டில் 365 நாட்களில் 120 நாட்களுக்குத்தான் அவர்களுக்கு வேலை கிடைக்கிறது.

இத்தகைய பின்தங்கிய ஒரு நாட்டில் அசுர வேகத்தில் அபிவிருத்திப் பணிகள் நடந்தால்தான் சுதந்திரமே சுகமாக இருக்கும்.

இன்றைக்கு நாட்டில் அதிகமாகப் பேசப் படுவது அரசியலும், திரைப்படமும்தான். நமது தொலைக்காட்சி நிறுவனங்களும் தினசரி, வார, மாதப் பத்திரிகைகளும் ஏராளமாகச் சம்பாதிக்கின்றன. நாம் சரியான திசையில் செல்லவில்லை என்பதற்கு இது ஓர் அடையாளம்.

அதிகாரக் குவியல்முறை கூடவே கூடாது. பரவல்முறைதான் நமது நாட்டில் அமலாக்கப்பட வேண்டும் என்று காந்தியடிகள் சுதந்திர இந்தியாவுக்குரிய சூத்திரத்தைத் தொடக்கத்திலேயே வகுத்துக் கொடுத்தார்.



ஆனால், இந்த 2 ஆண்டுகளாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற நகரசபைகள், பஞ்சாயத்துக்கள் முதலிய உள்ளாட்சிகளுக்குக்கூட நிதி ஆதாரங்களும் நிர்வாக அதிகாரங்களும் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை.

நாடாளுமன்ற உறுப்பினராக விரும்புபவர்களுக்குக் கல்வித்தகுதியையும் வயது வரம்பையும் இனியாவது நாம் நிர்ணயித்தாக வேண்டும். அனுபவம் இல்லாத, கல்வியறிவும் இல்லாத நபர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் படுவார்களானால், மக்கள் பிரச்சனைகளைப் பேசக்கூடிய மனத்துணிவு அவர்களுக்கு வராது.

நாடாளுமன்றம் என்பதே விவாத அரங்கம்தான். விவாதத்திற்குத் தேவை விஷய ஞானமும், மொழிப்புலமையும்தான். வெறும் படிப்பறிவு சரியான அணுகுமுறைகளைத் தராது. படிப்பறிவோடு அனுபவ அறிவும் சேர்ந்தால்தான் உறுப்பினர்களின் அணுகுமுறையும் வாதமும் வரவேற்கத்தக்கதாக அமையும்.

ஆகவே, நாடாளுமன்ற உறுப்பினர்களின் வயது 45–க்குக் குறையாமல் இருக்க வேண்டும். 70 வயதுக்குப் பிறகு அவர்கள் தேர்தலில் போட்டியிடக் கூடாது. இதேபோல மாநிலங்களவை (ராஜ்ய சபா) உறுப்பினர்களின் வயது 50 முதல் 80 வரை என நிர்ணயிக்கலாம்.

மக்களவையில் நடைபெறும் விவாதங்கள் கட்சிக் கண்ணோட்டத்தோடும், சற்றுச் சூடு பறக்கும்படியாகவும் நடப்பதைத் தவிர்ப்பது கொஞ்சம் சிரமம்தான். அதேசமயம், மாநிலங்களவையில் எந்தவொரு மசோதாவும் கட்சி எல்லைகளைத் தாண்டிச் சற்று நிபுணத்துவத்தோடு விவாதிக்கப்படும்.

இதற்கு ஓர் உதாரணமும் சொல்வார்கள். ‘கப் & சாஸரில்’ தேநீர் ஊற்றப்பட்டு வழங்கப்படும்போது கோப்பையில் உள்ள தேநீரைப் பருகினால் அதிகச் சூடாக இருக்கும். அப் போது சாஸரில் (பீங்கான் தட்டில்) ஊற்றிப் பருகுவார்கள். கோப்பையில் உள்ள சூடு சாஸரில் இருக்காது.

மக்களவை விவாதம் கோப்பையிலுள்ள தேநீரைப் போல, மாநிலங்களவை விவாதம் சாஸரிலுள்ள தேநீரைப் போல என்பார்கள்.

மாநிலங்களிலுள்ள சட்டப்பேரவை உறுப்பினர்களின் வயதை 35 ஆக நிர்ணயிக்கலாம். பஞ்சாயத்து ஒன்றியம், நகரசபை, மாநகர சபை ஆகியவற்றின் தலைவர்களின் வயது 30–க்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கலாம்.

உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் +2 வரையிலாவது படித்திருக்க வேண்டும். அதற்குக் குறைவாகப் படித்துள்ள யாரையும் பிரதிநிதிகளாகப் போட்டியிட அனுமதிக்கக்கூடாது. அதேசமயம் எம்.பி.–க்கள் பட்டதாரிகளாக இருக்க வேண்டும்.

பிரதிநிதிகளுக்குக் கல்வித்தகுதியை நிர்ணயிக்கும்போது சில அனுபவங்களையும் கல்வித் தகுதிக்குச் சமமானதாக எடுத்துக் கொள்ளலாம். பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக ஏற்கெனவே இருந்திருந்தால், அவர் எம்.பி.–யாகவோ, எம்.எல்.ஏ.–வாகவோ போட்டியிட்டால், அவர் பட்டதாரியாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

+2 படித்து, பஞ்சாயத்து யூனியன் சேர்மன் பதவியில் அவர் பெற்ற அனுபவமே அவருக்குப் போதும். ஏற்கெனவே எம்.எல்.ஏ.–வாக இருந்த ஒருவர் பட்டதாரியாக இல்லாவிட்டாலும், எம்.பி. தேர்தலில் போட்டியிட அனுமதிக்கலாம். எம்.எல்.ஏ.–வாக அவர் பெற்ற அனுபவமும் ஒரு தகுதிதான்.

தேர்தல் ஆணையம் இப்போதெல்லாம் ஆட்சி கவிழ்ந்த பிறகு, 3 மாதங்களுக்குள் தேர்தலை நடத்துவதற்கான முயற்சியில் இறங்கி விடுகிறது. அது மழைக்காலமாக இருந்தாலும் அதைப்பற்றித் தேர்தல் ஆணையம் பரிசீலிப்பதாகத்



ஜனாதிபதி தேர்தல் நடந்து கொண்டிருக்கிறது. இதைத் தள்ளிப்போடுவதோ, தாமதப் படுத்துவதோ முடியாது. இதேபோல் நமது நாட்டுத் தேர்தலும் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மார்ச் மாதத்தில் நடக்குமாறு செய்யலாம்.

ஏனெனில், மார்ச் மாதம் தான் நாடு முழுவதும் ஒரே மாதிரி சீதோஷ்ண நிலை நிலவி வருகிறது. ஜூலை மாதம் என்றால், மழைக் காலம். தேர்தலை நடத்த மார்ச் மாதத்தை நிர்ணயிப்பது வரவேற்கத்தக்கது.

இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது எம்.பி., எம்.எல்.ஏ. பதவிகளை 6 ஆண்டுக் காலமாகச் செய்ய வேண்டும் என்றும், பஞ்சாயத்துக்கள், நகரசபை உறுப்பினர்களின் பதவிக் காலத்தை 3 ஆண்டுகளாகச் செய்ய வேண்டும் என்றும் ஒரு கருத்தைச் சொன்னார். அதையும் கூடப் பரிசீலிக்கலாம்.

நமது நிதிநிலை அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் மாதத்தையும் இப்போதுள்ள மார்ச் மாதத்திலிருந்து அக்டோபர் மாதத்திற்கு மாற்றிக் கொள்ளலாம். அப்படியென்றால், நமது நாட்டின் நிதி ஆண்டைக்கூட ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை என்று இருப்பதை மாற்றி, அக்டோபர் 1 முதல் செப்டம்பர் 30 வரை என்று வைத்துக் கொள்ளலாம். தென்மேற்குப் பருவமழை ஜூலை, ஆகஸ்டில் இருப்பதால், அதை அனுசரித்து பட்ஜெட் போடுவது சுலபம்.

அகில இந்திய அளவில் செயல்படும் அரசியல் கட்சிகள் தங்களைத் தேசியக் கட்சிகளாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றால், அக்கட்சிகள் தேர்தலில் 100 இடங்களுக்குக் குறையாமல் நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட வேண்டும்.

100 இடங்களுக்குக்கூடப் போட்டியிட முடியாத ஒரு கட்சியைத் தேசியக் கட்சியாக அங்கீகரிக்கக்கூடாது.

இந்த அம்சங்களையெல்லாம் நாம் கணக்கில் எடுத்துக்கொண்டு பரிசீலிப்பது நமது ஜனநாயகத்தைச் சரியாகப் பராமரிப்பதற்குப் பயன்படும். ●

தெரியவில்லை. மக்களுக்குத்தான் அதனால் சிரமம்.

ஆகவே, இதிலும் ஒரு தீர்மானம் செய்யலாம். 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு 1 அல்லது 2 ஆண்டுக் காலத்திற்குள் பதவி விலகுமானால் அல்லது கவிழ்க்கப்படுமானால், அந்த 5 ஆண்டுக் காலத்தில் மீதமுள்ள காலத்திற்கு மட்டும் தேர்தலை நடத்தி, அந்த ஆட்சியின் ஆயுள் காலத்தைக் குறைத்துவிட வேண்டும்.

அவ்வாறு செய்வதன் மூலம் 5 ஆண்டுக்கு ஒருமுறை நடைபெற வேண்டிய தேர்தல் எந்த மாற்றமும் இல்லாமல் இயல்பாக நடைபெறும். 1999 செப்டம்பர் – அக்டோபரில் தேர்தல் நடந்தால், அதனை அந்த ஆண்டு முடிந்த தருவாயில் நடந்த தேர்தலாகவே கருதலாம். ஆகவே, அடுத்த 15–வது மக்களவைத் தேர்தல் 2005–இல்தான் நடக்க வேண்டும்.

5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நாடாளுமன்றத் தேர்தல் நடக்கின்றபொழுது, அதே காலத்தில் சட்டப்பேரவைத் தேர்தலும், பஞ்சாயத்து ஒன்றியத் தேர்தலும், நகரசபைத் தேர்தலும் நாடாளுமன்றத் தேர்தலோடு சேர்ந்து நடக்கும்படிச் செய்ய வேண்டும்.

நான்கு தேர்தல்களும் ஒரே நாளில் நடக்குமானால், தேர்தல் செலவுகள் குறையும். கட்சிகளுக்கும் பார்லிமெண்ட் முதல் பஞ்சாயத்து வரை ஒரே சமயத்தில் கட்சிக்காரர்கள் பலருக்குப் போட்டி போட வாய்ப்பு ஏற்படும்.

அமெரிக்காவில் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நவம்பர் மாதம் முதல் செவ்வாய்க்கிழமை



பொள்ளாச்சியில்
அருட்செல்வரின் நினைவேந்தல்

பொள்ளாச்சியிலுள்ள டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரியின் முன் வளாகத்தில் உருவாகி வருகிற அருட் செல்வரின் எண்கோண வடிவச் சமாதியில், அவருடைய 6-வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி 2.10.2020 அன்று நடந்தது.

அந்நாளில், கொரோனாத் தொற்றுக் காரணமாகத் திரளானக் கூட்டம் தவிர்க்கப்பட்டு காலையில் சமாதி வழிபாடும், மாலையில் அருட் செல்வரின் நினைவேந்தல் நிகழ்வும் நடந்தன. 6 சன்மார்க்கிகள் அருட் பெருஞ்ஜோதி அகவல் ஓதினார்கள்.

அருட்செல்வரின் குமாரர் சக்தி பைனான்ஸ் நிர்வாக இயக்குநர் திரு. ம. பாலசுப்பிரமணியம் அவர்களும், கல்லூரிச் செயலர் டாக்டர் சி. இராம சாமி அவர்களும் நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

அருட்செல்வரின் திருவுருவப் படத்திற்கு அவருடைய குமாரர் திரு. ம. பாலசுப்பிரமணியம் அவர்கள் தீபாராதனை செய்தார். அவருடைய துணைவியார் திருமதி விநோதினி பாலசுப்பிரமணியம் அவர்கள் மற்றும் ஒருசில உறவினர்களும் கலந்து கொண்டனர்.

– ந.நி.



சென்னையில் "அருட்செல்வர் நா.மகாலிங்கம் மாளிகை"

அருட்செல்வர் ஐயா அவர்களின் பாரம்பரியமே தேசப்பற்று மிகுந்த குடும்பமாகும். அருட்செல்வர் ஐயா அவர்களுடைய பாட்டனார் அமரர் பழனிக் கவுண்டர் அவர்களும், அருட்செல்வர் ஐயா அவர்களின் தகப்பனார் திரு. நாச்சிமுத்துக் கவுண்டர் அவர்களும் கொங்குநாட்டு மக்களுக்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொண்டவர்கள்.

அருட்செல்வர் ஐயா அவர்கள் கொங்கு சமுதாய மக்கள் உயரிய நிலையை அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். அருட்செல்வர் ஐயா அவர்கள் ஆரம்பித்த தொழில் கல்வி நிறுவனங்களும் கிராமப்புற ஏழை மக்களின் நலன் சார்ந்ததாகவே அமைந்திருந்தன.

பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினராக 3 முறை இருந்தபொழுது ஆழியாறு திட்டம் நிறைவேறப் பாடுபட்டார்.

பொள்ளாச்சியில் கூட்டுறவு வீட்டுவசதி வாரியத்தின் தலைவராக இருந்த பொழுது, அவர் செய்த பல நல்ல திட்டங்களை இன்றும் பொள்ளாச்சி மக்கள் நன்றியுடன் நினைவு கூறுகின்றனர்.

பல்வேறு பரிமாணங்களின் அடையாளமாகத் திகழ்ந்த அருட்செல்வர் ஐயா அவர்கள், தலைநகர் சென்னையிலும் கொங்கு மக்களின் பங்களிப்பு அதிகமாக இருக்க வேண்டும் என்ற பெருநோக்கில் 'கொங்கு நாடு அறக்கட்டளை' என்ற அமைப்பை நிறுவினார். அதன் தலைவராகவும் பொறுப்பேற்றார்.

இதன் தொடர்ச்சியாக சென்னை கிண்டி கத்திப்பாரா மேம்பாலத்திற்கு அருகில் சக்கரபாணி தெருவில் பல்லாண்டுகளுக்கு முன்னால் கொங்குநாடு அறக்கட்டளையின் சார்பில் அருட்செல்வர் முயற்சியால் வாங்கப்பட்ட ஒன்றே முக்கால் கிரவுண்டு இடத்தில் கொங்கு நாடு அறக்கட்டளையின் அலுவலகமும், பெண்கள் தங்கும் விடுதியும் கட்டப்பட்டன.

குறிப்பாக, கொங்குநாட்டுப் பகுதிகளான கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல், திண்டுக்கல், நீலகிரி போன்ற இடங்களில் இருந்து கல்வி கற்பதற்காக வரும் பெண்களுக்கும், வேலைக்குச் செல்லும் பெண்கள் தங்கிப் பணிபுரிவதற்கும் ஏற்ற வகையிலும் அவ்விடுதிகள் குறைந்த வாடகையில் இருந்தன.

அருட்செல்வர் ஐயா அவர்களுக்குப் பிறகு கொங்குநாடு அறக்கட்டளையின் தலைவராக மூத்த வழக்கறிஞர் திரு. இரா.காந்தி அவர்கள் பொறுப்பேற்றார்கள். திரு.டி.கே.சுப்பிரமணியம் அவர்களும், திரு.அப்பாவு அவர்களும் செயலாளர்களாக இருந்து செயல்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கொங்குநாடு அறக்கட்டளையின் பழைய கட்டடத்தை இடித்து விட்டுக் கட்டப்பட்ட புதிய மூன்று அடுக்கு மாளிகைக்கு 'அருட்செல்வர் நா.மகாலிங்கம் மாளிகை' என்று அவர் மறைந்த அக்டோபர் 2-ஆம் தேதி பெயர் சூட்டப்பட்டு அவருடைய நினைவுநாள் நிகழ்ச்சி (02.10.2020) நடைபெற்றது.

திரு.ரவி அவர்கள் தக்க தருணத்தில் இதனை அறக்கட்டளைத் தலைவருக்கு நினைவூட்டியதும் பொருத்தமாக அமைந்தது.

– ந.நி.



சொ.சொ.மீ. சுந்தரம்

தீவினை மாற்றும் திருமந்திரம் 13

அந்தக் காலத்தில் கிராமப் பொருளாதார வளர்ச்சியில் மாட்டு வண்டிகள் பெரும் பங்குபெற்றன. திருமணமாகி மணமக்கள் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு மாட்டு வண்டியில் போவார்கள். பத்துப் பதினைந்து மாட்டு வண்டிகள் சலங்கைச் சத்தத்துடன் வேகமாக ஓடுவது காதுக்கு இனிமையாக இருக்கும்.

“மாட்டுவண்டி கட்டிக்கிட்டு
மாப்பிள்ளையைக் கூட்டிக்கிட்டுக்
காட்டுவழி போறவளே கன்னியம்மா! – உன்
காசுமாலை பத்திரமாப் பாத்துக்கம்மா”

என்று தெம்மாங்குப் பாடுவது காதை விட்டு மறையாது.

நம்முடைய வாழ்க்கைக்கும் இந்த மாட்டுவண்டிகளுக்கும் தொடர்புண்டா என்றால் நிச்சயமாக உண்டு. கணவன் – மனைவி என்ற இரண்டு மாடுகளும் இணைந்து இழுத்தால்தான், குடும்ப வண்டி குடைசாய்ந்து விடாமல் இருக்கும். இந்த மாடுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பக்கம் இழுத்தால், நீதிபதி வந்து பிரித்துவிட வேண்டிய நிலைமை உண்டாகிறது.

இதுபோல நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையும் ஒற்றை மாட்டுவண்டியாகவே இருக்கிறது. ஒற்றை மாட்டுவண்டியை ஒரு மாடு இழுப்பதுபோல, நம் உடம்பு என்ற வண்டியை உயிர் என்ற மாடு இழுக்கிறது. இந்த இரண்டையும் இணைத்து வைத்த இறைவன் இவ்வண்டியை விதிக்கப்பட்ட காலம் வரை ஓட்டுகிறான்.

வண்டி தன்னை மாட்டுடன் இணைத்துக் கொள்ளாது. மாடும் தானாக வந்து வண்டியில் பூட்டிக் கொள்ளாது. மாட்டுக்கு உயிர் உண்டு. ஆனால் வண்டிக்கு உயிர் இல்லை. அது மாதிரி நம் உயிருக்கு உணர்வுண்டு. உடம்புக்கு ஆற்றல் இல்லை. அது ஜடப்பொருள். உயிர் இல்லாவிட்டால் உடம்பு இயங்காது.

வண்டியையும் மாட்டையும் இணைக்க ஒருவன் இருப்பது போல, உடம்பையும் உயிரையும் இணைக்க ஒருவன் வேண்டுமல்லவா? அவனுக்குத்தான் இறைவன் என்று பெயர். மாட்டை, வண்டியில் நல்ல தாம்புக் கயிற்றால் கட்டி ஓட்டும் வண்டிக்காரனைப் போல, நம்



திருமூலர்

தொடர்ச்சி : 14–ம் பக்கம்

கட்டுரை

20

பழகிப் பார்த்ததில் இவர்கள்...



ஜி.கே.எஸ்.

மரபின் மைந்தன் முத்தையா

கம்பன் அறநெறிச் செல்வர் திரு. ஜி.கே.எஸ். அவர்களை என் பிஞ்சுப் பருவத்தில் பீனாவின் தாத்தா என்றுதான் முதலில் தெரியும். ஜி.கே.எஸ். அவர்களின் மகள் வயிற்றுப் பேத்தி பீனா என்னுடன் ஏ.எல்.ஜி. மெட்ரிகுலேஷன் பள்ளியில் உடன் பயின்றவர். அந்தக் காலகட்டத்தில் திருக்கடவூருக்கு ஜி.கே.எஸ். அவர்கள் தன் மணி விழாவுக்காக எங்கள் பாட்டனார் வீட்டிற்கு வந்து தங்கி இருந்ததும் அனைவருமாக இணைந்து ஆலயத்திற்குச் சென்றதும் மங்கலாக நினைவிருக்கிறது.

எட்டாம் வகுப்பில் மணி மேல் நிலைப் பள்ளியில் வந்து சேர்ந்த போது, என் இலக்கியத் தாகத்திற்கான கதவுகள் திறக்கும் விஷயம் எனக்குத் தெரியாது. அன்றையக் காலகட்டத்தில், எங்கள் பள்ளி மைதானத்தில் பந்தல் போட்டு மூன்று நாட்கள் கோலாகலமாகக் கம்பன் விழா நடக்கும்.



எங்கள் பள்ளியின் தலைவரும் லட்சுமி மில்ஸ் அதிபருமான கம்பர் 'அறநெறிச் செல்வர்' திரு. ஜி.கே. சுந்தரம் அவர்கள்தான் கம்பன் கழகத்தின் தலைவர்.

அன்று நான் தொலைவிலிருந்து மட்டுமே பார்த்த அறிஞர்கள் பலரும் இன்று நெருக்கமாகப் பழகும் நிலைக்கு இறையருள் கைப்பிடித்துக் கூட்டி வந்து விட்டிருக்கிறது என்பதை நினைக்கும் போதெல்லாம் வியக்கிறேன்.



கம்பனடிப்பொடி சா. கணேசன்

ஜி.கே.எஸ். அவர்களுடன் சட்டையில்லாத திருமேனியுடன் வந்திறங்கிய பெரியவரைச் சுட்டிக்காட்டி, இவர்தான் கம்பனடிப் பொடி சா. கணேசன் என்று என் தமிழ் ஆசிரியர் புலவர் க.மீ. வெங்கடேசன் அறிமுகம் செய்து வைத்தார். பேராசிரியர் ராதாகிருஷ்ணன், பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன், 'கல்விக்கடல்' கம்பராமன், அருட்கவி அரங்க சீனிவாசன் என மூத்த முதிர்ந்த தமிழ்க் கனிகள் பொழிந்த தமிழ்ச்சாறு பருகிய திருத்தலம் மணி மேல்நிலைப் பள்ளி.

அந்தப் பள்ளியில் நான் படித்துக் கொண்டிருந்தபோது, எங்கள் தாளாளர் திரு. என். சின்னசாமி நாயுடு மறைந்தார். நான் அவருக்கு ஓர் அஞ்சலிக் கவிதை எழுதி தமிழாசிரியர் வெங்கடேசன் அவர்களிடம் காட்டினேன். பத்து நிமிடங்களில் தலைமையாசிரியர் பத்மநாபன் கைகளில்



ஜி.கே.என்.எம்.
மருத்துவமனை

அந்தக் கவிதை சென்று சேர்ந்தது.

"விடிவெள்ளி விடைபெற்றுச் சென்றதோ – இனி

வாழுங்கள் என்வழியில் என்றதோ

அடிவேரும் அடியோடு சரிந்ததோ

அரியதொரு சரித்திரமே முடிந்ததோ"

என்று தொடங்கும் அந்தக் கவிதை.

உடனே அவர் பள்ளி ஓவிய ஆசிரியர் திரு. தண்டபாணி அவர்களை அழைத்து, கிருஷ்ணசாமி நாயுடு அவர்களைக் கோட்டோவியமாக வரைந்து என்னுடைய கவிதையைத் தூரிகையில் எழுதிக் காட்சிக்கு வைக்கச் சொன்னார். மறுநாளே கருப்பு வண்ண அட்டையில் வெண்ணிற ஓவியத்திலும் எழுத்துகளிலும் திரு. தண்டபாணி தன் கைவண்ணத்தைக் காட்ட, அந்தக் கவிதை எல்லோர் கண்களையும் ஈர்க்கும் விதத்தில் பள்ளியின் மையத்தில் இடம்பெற்றது.

பள்ளி சார்பாக நடந்த இரங்கல் கூட்டத்தில் பள்ளி நிர்வாகம் சார்பில் திரு. ஜி.கே.எஸ். உரை நிகழ்த்த, ஆசிரியர்கள் சார்பில் தலைமையாசிரியர் உரை நிகழ்த்த மாணவ, மாணவிகள் சார்பில் நான் கவிதை வாசித்தேன்.

தங்களில் ஒருவன் கவிதை வாசித்த மகிழ்ச்சியில் மாணவர்கள் கரவொலி எழுப்ப, ஜி.கே.எஸ். அவர்கள் சிரித்துக்கொண்டே ஒலி பெருக்கிப் பிடித்து, இரங்கல் கூட்டத்தில் கை தட்டக் கூடாது என அறிவுறுத்தினார்.

அதன்பிறகு மணி மேல்நிலைப் பள்ளியின் புகழ்பெற்ற நானி பல்கிவாலா கலையரங்கம் முன்னாள் மாணவர்களின் முயற்சியில் உருவாக, கம்பன் விழாக்கள் கலையரங்கில் தொடர்ந்து நடைபெற்றன.

தன்னார்வத் தொண்டனாக – கம்பன் விழாப் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவனாக – பின்னர் பேச்சாளனாகக் கம்பன் கழகத்தில் முற்றத்தில் நான் முளைத்து மலர்ந்து வளர்ந்தவிதம் எத்தனையோ படிநிலைகளைக் கடந்தது.

விழாவில் பங்குபெறுபவர்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பார்வையாளர்களுக்கும் ஜி.கே.எஸ். அவர்கள் இல்லத்தில் தரப்படும் விருந்துக்கு என்று அச்சடிக்கப்பட்ட பிரத்தியேக அழைப்பிதழ்கள் தரப்படும். அந்த அழைப்பிதழைத் தொடர்ந்து பெறுபவனாக நான் இருந்தேன்.

விழா ஏற்பாடுகளில் ஜி.கே.எஸ். காட்டிய அக்கறை, நேரடிக் கவனம் ஆகியவற்றை இன்றைக்கு நினைத்தால் வியப்பாக இருக்கிறது.

ஒருமுறை கம்பன் விழாவில் பங்குபெறுபவர்கள், தங்கள் காலணிகளை அரங்கிற்கு வெளியிலேயே விட்டுவிட்டுக் கலையரங்கில் கீழே விரிக்கப்பட்ட விரிப்புகளில் அமர்ந்து கேட்கலாம் என்னும் முறை ஒரே ஒரு வருடம் அறிமுகப்படுத்தப்பட்டது.

விழா முடிந்து நான்கு நாட்களுக்குப் பிறகு ஜி.கே.எஸ். அவர்களுக்குப் பார்வையாளர் ஒருவர் கடிதம் எழுதியிருந்தார். "கம்பனுக்கு

மரியாதை செய்வது மிகவும் நல்ல காரியம். ஆனால், அடுத்த ஆண்டி லிருந்து காலணிகள் விடுகிற இடத்தில் தனி டோக்கன் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள். என்னுடைய காலணி கள் தொலைந்துவிட்டன" என எழுதியிருந்தார்.

அந்தக் கடிதத்தைக் கம்பன் கழகச் செயலாளரான புலவர் வெங்கடேசன் அவர்களிடம் கொடுத்த ஜி.கே.எஸ். "என்ன செய்வதாக உத்தேசம்" என்று கேட்டார். "அடுத்த ஆண்டிலிருந்து டோக்கன் கொடுக்கலாம்" என்றார் செயலாளர்.

"அடுத்த ஆண்டில் டோக்கன் கொடுப்பதெல்லாம் இருக்கட்டும். இப்போது இவருக்கு 250 ரூபாய் பணம் அனுப்புங்கள். நம் விழாவுக்கு வந்ததால் அவருக்கு இழப்பு ஏற்பட்டு இருக்கிறது அல்லவா?" என்றார் ஜி.கே.எஸ்.

அப்போதெல்லாம் சென்னைத் தொலைக்காட்சி தூர்தர்ஷன் மட்டுமே இருந்தது. கம்பன் விழாக் களை ஊர் ஊராகச் சென்று ஒளிப் பதிவு செய்து பின்னர் ஒளிபரப்புவார் கள். அப்படி சென்னைத் தொலைக் காட்சியில் இருந்து வந்த ஐந்தாறு பேர்களுக்கு அவர்கள் புறப்படும் முன், லட்சுமி மில்ஸ் சார்பில் அன் பளிப்பாக ஒவ்வொருவருக்கும் ஒரு செட் பேண்ட், சட்டைத் துணிகளும் புடவைகளும் தரப்பட்டன.

அவற்றை ஜி.கே.எஸ். தன் கை களாலேயே கொடுத்து அத்துடன் நிற்காமல், ஒவ்வொருவரிடமும் ஓர் அட்டையும் கொடுத்தார். கொடுத்து விட்டுச் சொன்னார், "உங்களுக்கான பேண்ட், சட்டை மற்றும் உங்கள் இல்லத்தரசிக்கானப் புடவை ஆகி யவை இந்தப் பையில் இருக்கின்றன. ஒருவேளை உங்கள் மனைவிக்கு இந்தப் புடவைப் பிடிக்காவிட்டால், சென்னையில் இருக்கும் லட்சுமி மில்ஸ் ஷோரூமில் இந்த அட்டை யைக் காண்பித்து அவர்களுக்கு விருப்பமானப் புடவையை மாற்றிக் கொள்ளச் சொல்லுங்கள்" என்றார்.

இதுதான் ஜி.கே.எஸ். பாணி என்று புலவர் வெங்கடேசன் சொல்லிச் சொல்லி மகிழ்வார்.

கோடை விடுமுறையில் பெரிய கோவிந்தசாமி நாயுடு அறக்கட்டளை சார்பில் நான்கு நாட்கள் சிறந்த சொற் பொழிவுகள் ஏற்பாடு செய்யப்படும். அனைத்துமே வைணவ இலக்கியம் குறித்து நிகழும். அவையெல்லாம் ஜி.கே.எஸ். அவர்களின் ஏற்பாடுதான்.

தமிழகமெங்கும் நடைபெறும் கம்பன் விழாக்கள் பலவற்றிலும் தவ றாமல் பங்கு கொள்வார். புதுவைக் கம்பன் விழாவில் கலந்துகொள்ளத் தனி விமானத்தில் அவர் சென்று வந்தது நினைவிருக்கிறது.

கோவை கம்பன் கழகம் சார்பில் 'நிலாமுற்றம்' என்ற பெயரில் ஒவ்வொரு பௌர்ணமியன்றும் கம்பன் சார்ந்த சொற்பொழிவு மற்றும் இரவு விருந்து அவரால் தொடர்ந்து ஏற்பாடு செய்யப்பட்டு வந்தது.

பிரிட்ஜ் என்னும் நுட்பமான சீட்டு விளையாட்டில் அவருக்கு ஆர்வம் உண்டு. அதற்கென்று அவர் தொடங்கிய பிரிட்ஜ் கிளப்பில் கோவையின் பிரமுகர்கள் பலரும் அங்கத்தினர்கள். என் தந்தை திரு. மருதவாணன் கடைசிவரையில் அதில் அங்கத்தினர் ஆகவும், குறிப்பிட்ட காலம் செயலாளராகவும் பொறுப்பி லிருந்தார்.

அந்தக் காலகட்டத்தில் கம்பன் அறநிலை சார்பில் வெளிவந்த கம்ப ராமாயண உரைத் தொகுதிகள் ஒரு செட் ஜி.கே.எஸ். அவர்களின் அன் பளிப்பாக அவர் கையொப்பமிட்டுத் தந்த நூல்கள் என்னிடம் இன்றும் உள்ளன.

நல்ல புத்தகங்களைப் பெரும் எண் ணிக்கையில் வாங்கிக் குறிப்பிட்ட சில ருக்கு அனுப்புகிற வழக்கத்தை எனக்குத் தெரிந்து கோவையில் இருபெரும் ஆளுமைகள் தொடர்ந்து கடைப் பிடித்து வந்தனர். ஒருவர் கம்பன் அறநெறிச் செல்வர் திரு. ஜி.கே. சுந்தரம். இன்னொருவர் அருட்செல் வர் டாக்டர் நா. மகாலிங்கம்.

கவிஞர் வைரமுத்து அவர்களின் 'சிகரங்களை நோக்கி' எனும் நூலை கோவையில் வெளியிட 1992–இல் ஒரு திட்டம் உருவானது. அப்போதுதான் கவிஞருடன் எனக்கும் அறிமுகம் ஏற்பட்ட புதிது. அருட்செல்வர் தலைமையில் அந்த நூலை ஜி.கே.எஸ். அவர்கள் வெளியிட வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம்.


முறைப்படி ஜி.கே.எஸ். அவர்களை அழைக்க அவருடைய இல்லத்திற்கு கவிஞர் வைரமுத்து அவர்களுடன் விழாக் குழுவினர் சென்றிருந்தோம். அவருக்குச் சந்தனமாலை அணிவித்துக் கவிஞர் வைரமுத்து தன்னுடைய மரியாதையைத் தெரிவித்தார். பேசிக் கொண்டிருந்தபோது கவிஞர் வைரமுத்து மெல்ல ஒரு கேள்வி கேட்டார். "ஐயா, கடைசியா என்ன படம் பார்த்தீங்க?" அடுத்த விநாடி பதில் வந்தது, "1941–இல் மீரா பார்த்தேன்."

எல்லோருக்கும் தூக்கிவாரிப் போட்டது. உரையாடலின் போக்கில் கவிஞர் வைரமுத்து சொன்னார், "ஐயா, அந்தக் காலத்தில் உங்கள் கோவையில்தான் சென்ட்ரல் ஸ்டூடியோ, பட்சிராஜா ஸ்டூடியோ எனப் படப்பிடிப்பு நிலையங்கள் பலவும் இருந்து சினிமாக் கலையை நன்கு வளர்த்தன."

உடனே ஜி.கே.எஸ். சொன்னார், "நாங்கள்தான் பின்னால் அவற்றையெல்லாம் மூடச் செய்தோம். தொழிலில் கவனம் இளைஞர்களுக்கு வராமல் போய்விடுமோ எனக் கருதி, அந்த ஸ்டூடியோக்கள் எல்லாம் மூடப்பட வேண்டும் என முடிவெடுத்தோம்" என்றார்.

அந்த உரையாடல் அத்துடன் முடிந்து இருக்கும் என்பதை நான் சொல்லத் தேவையில்லை.

என்னுடைய சகோதரர் திரு. ராஜன் கனகசபை திருமணம் கோவை விக்னேஷ் மஹாலில் நடைபெற்றபோது, திரு. ஜி.கே.எஸ். வந்து வாழ்த்தினார். புறப்பட்டுச் செல்கையில் என்



மூதறிஞர் ராஜாஜி



அருட்செல்வர் மகாலிங்கம்

தந்தையாரிடம் என்னை சுட்டிக்காட்டி "அடுத்த மாப்பிள்ளைத் தயாராக இருக்கிறார்" என்று வேடிக்கையாகச் சொல்லி விடைபெற்றார்.

90 வயது ஆகும்போது கூட கோவை பந்தயச்சாலையில் தொடர்ந்து நடைப்பயிற்சி மேற்கொண்டவர் அவர். அருட்செல்வர் மகாலிங்கம் அவர்களுடன் அவருக்கிருந்த ஆழமான நட்பு காவியக் கால நட்புகளுக்கு இணையானது.

தொழில்துறையில் இலட்சுமி குழுமம் கோவையின் வளத்திற்கான தளம் அமைத்தது. குப்புசாமி நாயுடு மருத்துவமனை இன்றும் கோவையின் கொடைத் தன்மைக்கோர் அடையாளமாகக் கொடிகட்டிப் பறக்கிறது.

கோவையின் தொழில் துறை, கல்வித் துறை, மருத்துவத் துறை, கலை, இலக்கியத் துறை, ஆன்மீகத் துறை என அத்தனை தளங்களிலும் தன் முத்திரையைப் பதித்து, அரசியலில் ராஜாஜியின் வலதுகரமாக விளங்கி, வாழ்வாங்கு வாழ்ந்த பெரியவர் ஜி.கே.எஸ். அவர்களின் புகழ்மிக்க வாழ்வு பளிங்கு போல பவித்திரம் ஆனது.

எனவேதான் அவரைவிடப் பல மடங்கு இளையவனான என்னாலும் அருகில் இருந்து பார்த்த சில தருணங்களிலேயே அவரது புகழ் பூத்த வாழ்வின் இயல்புத் தன்மையை உணர முடிகிறது.

எல்லா வகையிலும் முன்னுதாரணமாக விளங்கிய மாமனிதர்களின் வரிசையில் திரு. ஜி.கே. சுந்தரம் அவர்கள் முக்கியமானவர்.

●

9–ம் பக்கத் தொடர்ச்சி

உயிரையும் உடம்பையும் 'அறம், பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி' அழகாக ஓட்டுபவன் இறைவன். அவனைக் குற்றாலக் குறவஞ்சியில்,


"சாட்டிநிற்கும் அண்டமெல்லாம் சாட்டையிலாப் பம்பரம்போல் ஆட்டுவிக்கும் குற்றாலத்து அண்ணல்" என்று பாடுகிறார் திரிகூடராசப்பக் கவிராயர்.

உடம்பு வண்டி. உயிர் மாடு. இரண்டும் சேர்ந்திருக்கும் போதுதான் உயிர் நல்வினை, தீவினைப் பயன்களை நுகர்ந்து கணக்கை முடிக்க முடியும். எனவே உயிர், உடம்பை வேண்டாம் என்று விட்டுவிட முடியாது. அந்த உடம்பை வளர்த்துத் தான் தீர வேண்டும்.

"காயமே இது பொய்யடா – வெறும்
காற்றடைத்த பையடா
மாயன் என்னும் குயவன் செய்த
மண்ணுப் பாண்ட ஓடடா"

என்று கழற்றிவிட முடியாது. இக் கருத்தை மிக அழகாகச் சொல்கிறார் திருமூலர்.

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்



வள்ளலார்

உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே" (708)

என்பது காயசித்தி உபாயம். உடம்பு அழியுமானால் அதைப் பற்றி நின்ற உயிரும் அழிந்ததுபோலச் செயலற்றுப் போய்விடும். அதன்பின்னர் தவம் செய்ய முடியாது. அறிவு வளர்ச்சி தடைப்படும். ஞானம் கிடைக்காது. அதனால் உடம்பு தேவை. சித்திரம் வரையச் சுவர் தேவை. "நான் உடம்பை வளர்க்கும் வழியை அறிந்தேன். உடம்பைப் பலகாலம் வளர்த்தேன்." எனவே உயிரையும் வளர்த்தேன் என்கிறார் திருமூலர். உடம்பு உறவுமல்ல. பகையும் அல்ல. அது உயிரை வளர்க்கும் கருவி. எனவே உடம்பைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பது அறிவுரை. பொய்யான உடம்பை நாம் மெய் என்று சொல்கிறோம்.

"நெடுநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு."

என்றார் திருவள்ளுவர்.

நீதிநெறி விளக்கத்தில் இந்த நிலையாமையை,

"நீரில் குமிழி இளமை; நிறை செல்வம்
நீரில் சுருட்டும் நெடுந்திரைகள்; – நீரில்
எழுத்தாகும் யாக்கை; நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று"

என்று பாடுகிறார் குமரகுருபரர்.

இருப்பது பொய். போவது மெய் என்பதை நாம் அறிவோம். அப்படியானால், இந்த உடம்பை மெய் என்று சொல்வது தவறல்லவா என்று நம் சிந்தனை ஓடுகிறது. இது பொய்யா, மெய்யா, இதைத் தள்ளலாமா? கொள்ளலாமா? என்ற வினாக்களுக்கு மிக அழகாக விடை கூறுகிறார் திருமூலர்.

சிறந்த சான்றோர்களுடைய நூற்களைப் பற்றிக் கேட்காத முற்காலத்தில், இந்த உடம்பை அழுக்கு

மட்டுமே நிறைந்த உடம்பு எனக் கருதி இழிவாக நினைத்தேன். அதன்பிறகு இந்த உடம்புக்குள்ளே சிறந்த பொருளான சிவத்தைக் கண்டேன். இந்த உடம்புக்குள்ளே இறைவன் கோயில் கொண்டிருக்கிறார் என்று அறிந்தேன். அதனால் நான் இந்த உடம் பைப் பாதுகாத்துக் கொண்டி ருக்கிறேன் என்கிறார்.

"உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண்டான் என்று
உடம்பினை யான்இருந்து ஓம்புகின்றேனே" (701)

என்பது திருமந்திரம். உடம்பு உயிர் நலத்திற்குக் கருவியாக இருப்பதால், உடம்பைப் பேணி உயிரை வளர்க்க வேண்டும் என்பது அவர் தரும் அறிவுரை.

உடம்பில் ஆறு ஆதாரங்கள் உள்ளன. இவற்றை முறையாகத் தியானித்தால், உடம்பை வளர்த்து உயிரை வளர்க்கலாம். இவற்றைக் கீழக்கண்டவாறு விவரிக்கலாம்.

மூலாதாரம் : இது குதத்துக்கு இரண்டு விரற்கடை மேலேயும் குறிக்கு இரண்டு விரற்கடை கீழேயும் உள்ளது.

"எருவிடும் வாசற் கிருவிரல் மேலே
கருவிடும் வாசற் கிருவிரல் கீழே
உருவிடும் சோதியை உள்கவல் லார்க்குக்
கருவிடும் சோதி கலந்து நின்றானே." (572)

என்பது திருமந்திரம். மூலாதாரம் நான்கிதழ்த் தாமரை. நாற்கோண வடிவில் இருக்கும். ஐம்பூதங்களில் இது நிலத்துக்குரியது. முதுகந்தண்டாகிய வீணாத்தண்டின் அடிப் பாகத்தில் உள்ளது. இதற்குரிய தெய்வம் சித்தி, புத்திகளோடு வீற்றி ருக்கும் கணபதி. ஐந்தெழுத்தில் இதற் குரியது யநமசிவ. இதற்குரிய சக்தி வாமை. இதற்குரிய தலம் திருவாரூர்.



சேக்கிழார் பெருமான்


சுவாதிஷ்டானம் : இது குறிக்கும் உந்திக்கும் (கொப்பூழ்) இடைப்பட்ட இடம் இது. ஆறிதழ்த் தாமரை. பிறை வட்ட வடிவில் உள்ளது. ஐம்பூதங் களில் இது நீர். இதற்குரிய தெய்வம் சாவித்திரியோடும் காயத்திரியோடும் வீற்றிருக்கும் பிரம்ம தேவன். ஐந் தெழுத்தில் இது வயநமசி. இதற்குரிய சக்தி சேட்டை. தலம் திருவானைக்கா.

மணிபூரகம் : இது கொப்பூழ் பிரதேசம். வாயுவைக் கும்பிக்கும் இடம். இது பத்திதழ்த் தாமரை. முக் கோண வடிவில் உள்ளது. ஐம்பூதங்

ஐந்து முக முருகன்

கோவை – மேட்டுப்பாளையத் திற்கு அருகிலுள்ள ஓதிமலையில் வீற்றிருக்கும் முருகப்பெருமான் வித்தியாசமான தோற்றத்தில் காட்சி யளிக்கிறார். இங்கு முருகப்பெரு மான் ஐந்து முகத்துடனும், எட்டுக் கரங்களுடனும் அபூர்வமாகக் காணப்படுகிறார். பிரம்ம தேவரை இரும்புச் சிறையில் அடைத்த பகுதி என்பதால், இந்த இடம் 'இரும் பொறை' என்றும் வழங்கப்படு கிறது.

– நெ. இராமன்


திருவள்ளுவர்

களில் இது நெருப்பு. இதற்குரிய தெய்வம் பூதேவி, சீதேவி சூழ வீற்றி ருக்கும் திருமால். ஐந்தெழுத்தில் இது நமசிவய. இதற்குரிய சக்திகள் ரௌத் திரியும் காளியும். தலம் திரு வண்ணா மலை.

அனாகதம் : இது மனத்தின் இட மான இருதயத் தானம். இது பன்னி ரண்டு இதழ்த் தாமரை. அறுகோண வடிவில் உள்ளது. ஐம்பூதங்களில் இது ஆகாயம். இதற்குரிய தெய்வம் கௌரி யுடனும் அம்பிகையுடனும் வீற்றிருக் கும் ருத்ரமூர்த்தி. ஐந்தெழுத்தில் இது மசிவாயந. இதற்குரிய சக்திகள் கலவி கரணி, பலவிகரணி, பலப்பிரதமணி. தலம் தில்லையம்பலம்.

விசுத்தி : இது நாக்கின் அடிப் பாகத்தில் உள்ளது. தொண்டையில் உள் நாக்கிற்குக் கீழ் உள்ள பதினாறு இதழ்த் தாமரையாக இந்த ஆதாரம் அமைந்து உள்ளது. இது வட்ட வடிவ மானது. ஐம்பூதங்களில் இது காற்று. இதற்குரிய தெய்வம் உன்மனீ, வாக் வாதினீ என்ற இரண்டு சக்திகளுடன் வீற்றிருக்கும் மகேஸ்வரன். ஐந்தெ ழுத்தில் இது சிவாயநம. இதற்குரிய சக்தி மனோன்மணி. இது காளத்தித் தலத்தைக் குறிப்பது.

ஆக்ஞை : இது புருவ மத்தியில் உள்ளது. இரண்டு இதழ்த் தாமரை. இது அறிவிற்கு நிலைக்களம். முக் கோண வடிவம். இதில் தர்ம சக்தி யுடன் சதாசிவன் வீற்றிருக்கிறார். இதற் குரிய சக்தி ஆதிசக்தி. இது காசி யைக் குறிப்பது.

இந்த ஆறாதாரங்களில் மூலா தாரம், சுவாதிஷ்டானம் இரண்டும் அக்கினி மண்டலம் (பிரமக்கிரந்தி) எனப்படும். மணிபூரகம், அனாகதம், விசுத்தி மூன்றும் சூரிய மண்டலம் (விஷ்ணுகிரந்தி) எனப்படும். ஆக்ஞை யில் தொடங்கிப் பிரமரந்திரம் முடிய உள்ள நெற்றிப் பகுதி சந்திர மண்டலம் (ருத்ரக்கிரந்தி) எனப்படும்.

பிரமரந்திரம் என்பது உச்சந் தலையில் உள்ள ஆயிரம் இதழ்த் தாமரை. இதில் பராசக்தியுடன் பரம சிவன் வீற்றிருக்கிறார். இதுவே திருக் கயிலையாகும். இதை மேலைத் துவாரம் என்பார்கள். இதற்குமேல் உள்ள பன்னிரண்டு அங்குலப் பகுதிக்குத் துவாத சாந்தம் என்று பெயர். இதுவே மதுரை எனப்படும் ஆலவாய்த் தலமாகும்.

> "சோலைக் கிளியே! உயிர்த்துணையாம்
> தோன்றாத் துணைக்கோர் துணையாகித்
> துவாத சாந்தப் பெருவெளியில்
> துரியங் கடந்த பரநாத
> மூலத் தலத்து முளைத்த முழு
> முதலே முத்தம் தருகவே
> முக்கட் சுடர்க்கு விருந்திடும்மும்
>
> முலையாய் முத்தம் தருகவே"

என்பது மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ். மூலாதாரத்து நெருப்பைப் பிராணாயாமத்தால் எழுப்பி, இத்தனை ஆதாரங்களையும் தாண்டி பிரமரந்திரத்தை அடைய வேண்டும்.

அனாகதத்துக்கு வரும்பொழுது அட்டமாசித்திகளும் கிடைக்கும். அதையும் தாண்டினால் ஆக்ஞையில் அமுதம் கிடைக்கும். தன்னையறிந்த ஆன்மாவுக்குப் புருவ மத்தியில் உள்ள ஆக்ஞையில் அமுதம் கிடைக்கும். இது சந்திர மண்டலம் என்பதால்,

"தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே – ஒரு

தந்திரம் நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே"

என்று பாடும் இராமலிங்க வள்ளலார், இந்த இடத்தை அடைய வேண்டும் என்பதற்காக,

"நாதர்முடி மேலிருக்கும் வெண்ணிலாவே – அங்கு

நானும்வர வேண்டுகிறேன் வெண்ணிலாவே"

என்று பாடுகிறார்.

சைவ சமயத்தில் தோத்திரத் திரட்டாக விளங்கும் பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக வைக்கப்பெற்றது திருமந்திரம். தமிழ் எண்களில் 'ய' என்பது பத்தைக் குறிக்கும். நமசிவய என்ற ஐந்தெழுத்தில் 'ய' என்பது உயிரைக் குறிக்கும். எனவே உடம்பை வளர்ப்பதன் மூலம் உயிரை வளர்ப்பது திருமந்திரம் என்பது தெளிவாகிறது. 'திருமுறை' என்ற சொல் முதன்முதலில் திருமந்திரத்தில்தான் பயன்படுத்தப்பட்டது.

"ஏடங்கை நங்கை இறை எங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும்வெண் தாமரை
பாடும் திருமுறை பாப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய் தோத்திரம் சொல்லுமே."
(1050)

என்பது திருமந்திரம்.


திருமூலர் தம்நூலை ஆகமம் என்று குறிப்பிடுகிறார். இதற்கு அவர் வைத்த பெயர் 'திருமந்திர மாலை.' இதற்குச் சான்றாகக் கீழ்க்காணும் பாடல்கள் திகழ்கின்றன.

"நந்தி இணையடி நான் தலை மேற்கொண்டு
புந்தியி னுள்ளே புகப்பெய்து போற்றி செய்
அந்தி மதிபுனை அரனடி நாடொரும்
சிந்தைசெய் தாகமம் செப்பலுற் றேனே." (12)

"பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை

உறைப்பொடும் கூடி நின்று ஓதலும் ஆமே." (25)

வடமொழி ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களாக வகுக்கப் பெற்றுள்ளன. இவை திருமந்திரத்திலும் இடம்பெறுவதால் 'ஞானமுதல் நான்கும்மலர் நற்றிருமந் திரமாலை' என்று சேக்கிழார் குறிப்பிடுகிறார். ஆனால் இந்நான்கிலும் யோகம் பற்றிய செய்திகளே திருமந்திரத்தில் அதிகமாகப் பேசப்படுகின்றன. இது பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரத்தைக் காட்டிலும் விரிவானது. இது


குமரகுருபர
சுவாமிகள்

அட்டாங்க யோகத்தை விரித்துக் கூறுவதோடு, குண்டலினி யோகம், சந்திரயோகம், பரியங்கயோகம் ஆகியவற்றையும் சிவநெறிச் சார்புடன் சுட்டிக்காட்டுகிறது.

அட்டாங்க யோகத்தில் இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற எட்டு நிலைகளை விரிவாகக் கூறுகிறது. உடம்பை நோயின்றிக் காக்கவும் நீண்டகாலம் வாழ்விக்கவும் உரிய வழிகளை எடுத்துக் காட்டுகிறது. இந்த அட்டாங்க யோகத்தை இனி விரிவாகக் காணலாம்.

நல்வாழ்த்துக்களுடன்!



ஜோதி ஜோதி ஜோதி சுயஞ்

ஜோதி ஜோதி ஜோதி பரஞ்

ஜோதி ஜோதி ஜோதி அருள்

ஜோதி ஜோதி ஜோதி சிவம்

ஏ.பி.டி. இண்டஸ்ட்ரீஸ் லிமிடட்

சக்தி பைனான்ஸ் பில்டிங், டாக்டர் நஞ்சப்பா ரோடு,

கோயமுத்தூர் - 641 018 போன் : 0422-2233982, 2233983

சிறுமை கண்டு சினந்த பாரதி

கிருங்கை சேதுபதி

வாழ்க்கைப் போக்கில், தான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறதோ இல்லையோ, நடக்கிறது வேறொன்றாக இருந்து விடுகிறது. அப்படித்தான் பாரதி வாழ்விலும் நடந்தது.

இளசைபுர மன்னருக்கு (24.01.1897 –இல்) பாரதி எழுதிய கவிதை மடலுக்குப் பதிலும் பலனுமாக யாது கிடைத்ததோ, தெரியவில்லை. ஆனால், பாரதி பட்டபாடு மட்டும் அவர் நினைவைவிட்டு நீங்கவில்லை.



சரியாக 13 ஆண்டுகளுக்குப் பிறகு, இளமைப்பருவ நினைவுகளை மனக்கொண்டு, கவிதை வடிவில் சுயசரிதை பாடுகிறார். (சாதாரண வருஷம், கார்த்திகை மாதம் அதாவது, நவம்பர் 1910) அனுபவத்தில் இருந்து இப்பாடலின் வழியே பாரதி மீளவும் அனுபவித்துத் தந்ததுதான் புதுமை.

அவரே எழுதுகிறார்: "இச்சிறிய செய்யுள் நூல் விநோதார்த்தமாக எழுதப்பட்டது. இதன் இயல்பு தற்கூற்றெனப்படும். அதாவது, கதாநாயகன் தன் சரிதையைத் தான் நேராகவே சொல்லும் நடை. இக்காவிய முறை நவீனமானது."

நவீனமான இந்நூலில், நவீனமாய்த் தான்பெற்ற ஆங்கிலக் கல்வியின் பலாபலன்களையும், பெறமுடியாத தமிழ்க் கல்வியையும் தெளிவாக நினைவு கூர்கிறார்.

தந்தையார் பணிக்கத் தான் நெல்லைக்குச் சென்றது, 'ஊணர் கலைத்திறன் நேருதற்காக.' அது எப்படி இருந்தது பாரதிக்கு?



1. 'புல்லை உண்க' என்று இளஞ்சிங்கத்தைப் போக்கியது போல. 2. 'ஊன்விலை' வாணிபம் செய்வதற்குப் பார்ப்பனப் பிள்ளையை நாடுவிப்பது போல.

அப்படி என்னதான் அங்குக் கற்றார்? தன் வகுப்புகளுக்கான கால அட்டவணையைத் தன் காலத்து மாணவர்களுக்கானதாக்கிக் கவிதையாய்த் தருகிறார்.

"கணிதம் பன்னிரண்டாண்டு பயில்வர்; – பின்
கார்கொள் வானில் ஓர் மீன்நிலை
தேர்ந்திலார்;

அதற்கு அவர் இட்ட பெயர் 'கனவு.' முன்னொட்டாய் அவர் கைக்கொண்ட பாடல், பட்டினத்தார் பாடல்.

"பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போயினவே" என்பது பாரதி மேற்கோள் காட்டிய பட்டினத்தார் வாக்கு.

போனது போனதுதான். அது மீள வாராத பழையது என்றாலும் அது புகட்டிய ஞானத்தை, தன்



அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்;
வணிகமும் பொருள்நூலும் பிதற்றுவார்;
வாழும் நாட்டில் பொருள் கெடல் கேட்டிலார்;
துணியும் ஆயிரம் சாத்திர நாமங்கள்
சொல்லுவார்; எள்துணைப் பயன் கண்டிலார்."

இவற்றை விடவும், பாரதியார் கற்க நினைத்தவை எவை? அவற்றையும் தொடர் கவிதையிலேயே பட்டிய லிட்டுக் காட்டுகிறார். அது 'ஆங்கிலம் பயில் பள்ளியுள் போகுநர்' அறிந்திலாத பாடங்களின் பட்டியல். அவையாவன :

1. கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்தது. 2. காளிதாசன் கவிதை புனைந்தது. 3. வானத்துக் கோளையும் விண்மீனையும் பாஸ்கரன் ஓர்ந்து அளந்தது. 4. பாணினி இலக்கணம் வகுத்து அளித்தது. 5. ஆதிசங்கரர் வாழ் வின் இறுதி கண்டு உண்மை உரைத்தது. 6. சேரன் தம்பி (இளங்கோவடிகள்) சிலம்பை இசைத்தது. 7. தெய்வ வள்ளு வன் வான்மறை தந்தது. 8. பாண்டிய சோழர்கள் பார் அளித்தது; தர்மம் வளர்த்தது. 9. அசோகனார் பிழை படாது இந்தப் புவியைக் காத்தது. 10. வீரசிவாஜி மிலேச்சரை வீழ்த்தி வென்றது.

"அன்ன யாவினும் அறிந்திலர், பாரதத்து ஆங்கிலம் பயில் பள்ளியுட் போகுநர்" என்கிறார் பாரதி.

இவர்கள் ஒன்றும் இங்கிலாந்துக்குச் சென்று பயிலப் போகவில்லை. இந்த நாட்டில் இருக்கின்ற பள்ளிக்குத்தான் செல்கின்றனர். அது 'ஆங்கிலம் பயில் பள்ளி' என்ன அழகான தமிழ்ப்பெயர். ஆனால், அங்கே தமிழுக்குத்தான் இட மில்லை. அதைவிடவும் அதிசய உண்மை, அடுத்து அவர் உரைக்கிற அனுபவக் கணக்கும் அப்படியே இருப்பதுதான்.

செலவு தந்தைக்கு ஓராயிரம் சென் றது. சரி. ஆசைப்பட்டுச் சேர்த்தால், அப்படிச் செலவு செய்வது தக்கதுதான். அதனால், பாரதிக்குப் பலனாய் வந்தது, ஓராயிரம் அல்ல, பல்லாயிரமாம். என்ன? 'தீது'

"தீது எனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன."

நலம்?

"ஓர் எள் துணையும் கண்டிலேன்."

மெய்யாகவா?

"இதை – நாற்பதினாயிரம் கோயி லிற் சொல்லுவேன்."

இப்படிச் சத்தியம் செய்து சொல்கிற அளவுக்கு, பாரதியைப் பாதித்தது, அவர் பெற்ற கல்வி. அந்த வயிற்றெரிச் சல் முழுவதையும் வார்த்தைகளில் கொட்டிப் பாடல் புனைகிறார்; அதற்கு ஒரு நியாயமும் எடுத்துரைக்கிறார்.

"முன்னர் நாடு திகழ்ந்த பெற்றியும்
மூண்டிருக்கும் இந்நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியும் தேர்கிலார்"

என்று பாடிக் கொண்டே வந்தவர், 'பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்காள்' என்று சாடி நிற்கிறார். ஏன்?

"என்ன கூறி மற்றுஎங்ஙன் உணர்த் துவேன் / இங்கு இவர்க்கு எனது உள்ளம் எரிவதே?" என்று பதில் இறுக்கிறார்.

குடும்ப வறுமையும் தேச வறுமை யும் ஒருசேர அழுத்தும் மனநிலையில், நாட்டுப்பற்றுள்ள பதினாறு வயதுச் சிறுவனின் உள்ளம் பற்றி எரிந்ததன் வெளிப்பாடுதான் இந்தப் பாடல் வரி கள். இதற்காகத் தந்தையை நோகக்கூட, இத்தனயன் விரும்பவில்லை.

'அவர் சூதிலா உள்ளத்தர். தன் மகனுக்கு நல்லது செய்வதாக நினைத் துத்தான் இந்தப் பணியைத் தனக்குத் தந்தை விதித்தார்' என்கிறார் பாரதி. பள்ளிக்கு அனுப்புவதாக நினைத்து, 'வாதும் பொய்யும் என்ற விலங்கினம் வாழும் வெங்குகைக்கு இவரை வழங்கி விட்டாராம்.'

அந்த வேதனையும் வாதனையும் பொறுக்கமாட்டாமல், தான் பட்ட பாட்டை இன்னுமொரு பாட்டாக்கி அதில் பதிவிடுகிறார் பாரதி.

"ஐயர்என்றும் துரைஎன்றும் மற்று எனக்கு
ஆங்கிலக் கலை என்று ஒன்று உணர்த்திய
பொய்யருக்கு இது கூறுவன், கேட்பீரேல்,
பொழுதெலாம் உங்கள் பாடத்தில் போக்கி நான்
மெய் அயர்ந்து விழி குழிவு எய்திட
வீறு இழந்து எனது உள்ளம் நொய்து ஆகிட
ஐயம் விஞ்சி, சுதந்தரம் நீங்கி என்
அறிவு வாரித் துரும்பு என்று அலைந்ததால்"

பொய்யர் உணர்த்திய ஆங்கிலக் கலையினால், விஞ்சிய ஐயம் ஒருபுறம் இழுக்க, நீங்கிய சுதந்திரம் மறுபுறம் இழுக்க, இடையில் சிக்கிக் கொண்ட அறிவானது, அலைகடலில் அகப்பட்ட துரும்பாய் அலைந்ததாம். (இப்படித் தொடங்கிய அலைபடுவாழ்க்கை அவர் காலம் முழுக்கத் தொடர்ந்து கொண்டே இருந்தது இலக்கியப் பெருஞ்சோகம்.)

இவ்வளவையும் தாக்குப்பிடித்துக் கொண்டு பாரதி தன்னிலை தவறாமல் இருந்தது எப்படி?

அதற்கு இரண்டு காரணங்கள் இருக் கின்றன என்கிறார். ஒன்று, முன்செய்த நல்வினைப் பயன்கள் சில. மற்றொன்று, 'பாரததேவியின் நல்லருள்.'

*முன்னது, இளசைபுர மன்னரது அரண்மனையில் புலவர்களுடன் உரை யாடியும் பயின்றும் பாடியும் பெற்ற தமிழ்ப்பயன் என்றுமட்டும் கொள்ள முடியாதபடி அவர் தன் பாடலில் சொற்களை அமைக்கிறார். அது, **'சில முன் செய் நல்வினைப் பயன்'** என்று வருகிறது.*

இத்தொடர் கவனிக்கத்தக்கது. இதில், 'முன்செய் நல்வினைப் பயன் சில, என்று சொல்ல வேண்டியதை, 'சில' என்ற சொல்லை முன்னர் வைத்து, 'முன்'னைப் பின்னே வைத்து, அதன் பின் 'செய்நல்வினைப் பயன்' என்று சொல்கிறார். எனவே, இந்த 'முன்', நெல்லைக்கு வருமுன் வாய்த்த நல்வினைப் பயன் மட்டுமல்ல, இங்கு வந்த பிறகும் வகுப்பறைக்கு வருமுன் செய்த சில நல்வினைப் பயன் என்றும் பொருள் கொள்ளலாம்.

வகுப்பறைச் சூழலின் வெக்கையைத் தணித்துக்கொள்ளச் சிற்சில புலவர் சந்திப்புகளை, தமிழ் உணர்வுப் பரிமா ற்றங்களை அவர் நெல்லையில் பெற் றிருக்கிறார். அந்த உணர்வு, அவருக்கு முன்னதாகித் தற்காத்திருக்கிறது; 'ஆங்கிலம் பயில் பள்ளியுட் போகுநர்' அறியப்படாத பாடப் பகுதிகளை அவர் அறியத் தந்திருக்கிறது. 'தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டதால் அவர் தெளிவுகொண்டார்' என்றே சொல்ல வேண்டும். தடம் மாறினாலும் தடு மாறாமல் தமிழ் காத்தவிதம் இது.

*அந்த நல்வினைப் பயன் ஒரு புறக் காரணி என்றால், 'பாரததேவியின் நல்லருள்' அகக்காரணியாக இருந் திருக்கிறது. அதையும் முந்தைய தொடர் போலவே, உணர்ச்சிப்பெருக்கில் மாற்றியமைக்கிறார். **'நம் தேவி பாரதத்து அன்னை அருள்'** என்கிறார்.*

இது பாரதிக்கு வாய்த்த வரம். பத்தோடு பதினொன்றாய் எடுத்த பிறவி அல்ல, இது. கலியுகத்தை மாற்றிக் கிருத யுகம் சமைப்பதற்கென்றே இயற்கை கொடுத்த பிறவி. அதனால்தான் இது பாரத அன்னையின் அருள் என்று குறிக்கிறார். அதுவும் 'நம் பாரதத்து அன்னை' என்று சொல்வதில் ஓர் அழுத்தம் இருக்கிறது.

'இந்த அருள் தனக்கு மட்டும் வாய்த் தது இல்லை; தன்னை ஒத்த தமிழர் களுக்கு – இந்தியர்களுக்கு எல்லாருக் குமே வாய்த்தது. வாய்ப்பை நழுவ விட்டு அடிமையாகிப் போனவர்கள் அநேகர் என்பதை நுட்பமாக, 'நம்' என்ற சொல் கொண்டு உணர்த்தி விடுகிறார் பாரதி.

யாப்பு ஒழுங்குக்குத் தக்கவாறு இத்தொடர்கள் அமைந்தன என்றொரு காரணம் இருந்தாலும், வாக்கு அவரிட மிருந்து இவ்வாறு வெளிப்படுதற்கு, அவருள் மிக்கொளிரும் தேசப்பற்று தான் முக்கியக் காரணம் என்பது தெளிவாகிறது.

மேலும், பாரதியின் 'முன்செய் நல்வினைப் பயன்' என்ற தொடரை,

வில்லிபாரதத்தில் கண்ணனுக்குக் கர்ணன் கொடை கொடுக்கும்போது சொல்லும், **'யான்செய் புண்ணியம் அனைத்தும்'** என்ற தொடரோடு ஒப் பிட்டுப் பார்த்தால் இதன் உன்னதம் புரிபடும்.

ஆக, நெல்லைக்கு வரும் முன்பும் வந்த பின்னர் இந்த வகுப்பறைச் சூழலுக்கு இடையிடையேயும் இந்த நல்வினைப் பயனைச் செய்தும், செய்து கொண்டும் பாரதி இருந்திருக்கிறார். அவ்வாறு செய்த நல்வினையால் விளைந்த அவர்தம் செய்யுட்கள் பாதுகாக்கப்படாமையாலும் தக்கோ ரால் நினைவுகூரப் படாமையாலும் கிட்டாது போயின என்பதையும் இத் தொடர் நமக்கு நினைவுறுத்துகின்றது.

"சிலமுன் செய்நல் வினைப் பயனாலும் நம்
தேவி பாரதத்து அன்னை அருளினும்
அலைவுறுத்துநும் பேரிருள் வீழ்ந்து நான்
அழிந்திடாது ஒருவாறு பிழைத்ததே"

என்பது பாரதியின் வாக்குமூலம். இதிலும் அலைவுறுத்தல் சொல்லப்படு கிறது. முன்பு அலைவுறுத்தியது அலை கடல் என்றால், இதில் அலைவுறுத்தி வீழ்த்தியது பேரிருள். அலைகடலில் கரையாவது கண்ணுக்குத் தெரியும்; இருட்கடலில் மூழ்கிவிட்டால் என்ன தெரியும்?

பாரதிக்கு, பாரத அன்னையின் அருள் ஒளி அப்பொழுதே தெரிந்து விட்டிருந்தமையால், அவர் அழிவுறாது ஒருவாறு பிழைத்தெழுந்துவிட்டார்.

ஆறு நாட்டவரின் உழைப்பு

நாம் படிக்கும் புத்தகத்தில் ஆறு நாட்டவர் களின் உழைப்பு உள்ளது. சீனர்கள் காகிதத்தைக் கண்டுபிடித்தனர். கிரேக்கர்கள் எழுத்தைத் தோற்று வித்தனர். இத்தாலியர்கள் எழுத்துக்களைப் புத்தக உருவில் தயாரித்தனர். ஜெர்மானியர்கள் அச்சிடும் முறையைக் கண்டறிந்தனர். இங்கிலாந்தும், அமெரிக்காவும் புத்தகம் அச்சிடும் கலையை உலகிற்கு அறிமுகப்படுத்தினர்.

– ஆர்.கே.லிங்கேசன்

வாழ்வாங்கு வாழவேண்டியவர், வாழவிடாது பின்னிழுத்துத் தள்ளி விடுகிற வெங்கொடுமைக்கு ஆளாகி, வீழ்ந்துவிட்டார்; எனினும் பிழைத்துக் கொண்டு எழுந்துவிட்டார். வாழ்தல் வேறு. பிழைத்தல் வேறு. வாழ்தலில் நேர்கிற பிழையினால் வருவது பிழைப்பு. நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு என்று வேறோர் இடத்தில் பாரதியே பாடியிருக்கிறார் அல்லவா? அது புகழுக்கு உகந்தது அல்ல.

எனவே, இப்படிப்பட்ட பிழைப்பில், வாழ்விக்க வந்தவருக்கு எப்படி நாட்டம் இருக்க முடியும்? அதனால்தான் அனல் மிகு சொற்கள் இந்தப் பாடலில் கனல் உகுத்து எழுகின்றன. 'அருவருக்கத்தக்க அல்லல் மிக்கதோர் மண்படு கல்வி' என்று தொடங்கி, 'அற்பர் கல்வி' என்று முடிக்கும் இடம் வரை உள்ள பாடல் வரிகளைப் படிக்கிறபோதெல்லாம் அவர் நெஞ்சம் படபடத்துத் துடிக்கிற ஓசையைச் செவிமடுக்க முடியும்.

இதெல்லாம் மொழி வெறுப்பால் உமிழ்ந்த நெருப்பு வரி என்று கருதி விட லாகாது; அடிமைச் சுருளுக்கு ஆளாக் கும் மிடிமைக்கல்வியின்மீது கொளுத்தி எறிந்த தீப்பந்தம் எனக் கொள்வதே பொருந்தும். சிறுமை கண்டு பெருகிய அறச்சீற்றத்தின் இலக்கியப் புலப்பாடு.

வீட்டு வறுமையும் நாட்டு வறுமை யும் ஒருசேர வந்து இந்தச் சின்னஞ் சிறுவனைச் சூழ்ந்து தாக்கும்போது, அந்தக் கொடுமையை அஞ்சாது எதிர்க் கும் நெஞ்சுரத்தைத் தமிழ் தந்திருக்கிறது என்பதையும் அதை, ஆங்கிலக் கல்வி, அறியவிடாமல் தடுத்து நிற்கிறது என்பதையும் வேறு எப்படி கவியுளம் காட்ட முடியும்?

இதில்கூட 'ஆழ்ந்திருக்கும் கவி யுளம்' அறியாதவர்கள்தான் பாரதியை இன்னமும் குறைகூறிக் கொண்டிருக் கிறார்கள். அவர்களுக்கு, மெய்யான கல்வியின் திறத்தையும் தரத்தையும் விளக்கிச் சொல்வதற்கு மீளவும் ஒரு வாய்ப்பை, நம் பாரதிக்கு, இந்தப் பள்ளி தான் தந்திருக்கிறது. அதுவும் அறிய வேண்டிய ஒரு வரலாறு. ●

கட்டுரை



சித்திவளாகத் திருமாளிகை



வள்ளலார்

வடலூருக்குத் (பார்வதிபுரம்) தெற்கே 5 கிலோ மீட்டர் தொலைவில் – அதாவது வடலூர் – நெய்வேலி நெடுஞ்சாலையில் வடலூரிலிருந்து 2 கி.மீ. சென்று தெற்கே செல்லும் பாதையில் 3 கி.மீ. தொலைவில் மேட்டுக்குப்பம் உள்ளது.

இவ்வூரின் மேற்குப்புறம் அக்காலத்தில் வைணவ குருமார்கள் வந்து உபதேசம் செய்யும் "திருமாளிகை" என்னும் குடிசை வீட்டில், மேட்டுக்குப்பத்தில் வாழும் மக்களின் வேண்டுகோளினை ஏற்றுச் சன்மார்க்க நெறிகளைப் போதிக்கச் சென்ற வள்ளல் பெருமான், தம்முடைய அருள் வாழ்க்கையினை முற்றிலுமாக அங்கேயே வாழ்ந்து வையத்தில் பெருநெறியைப் பரப்பினார்கள்.

"தேர்ந்தேன் தெளிந்தேன் சிவமே பொருள் எனஉள் ஓர்ந்தேன் அருளமுதம் உண்கின்றேன்" என்று பாடிய வள்ளல் பெருமான், சென்னை வாழ்க்கையில் தேர்ந்ததும், கருங்குழி, வடலூர் வாழ்க்கையில் தெளிந்ததும், பின் ஞான வாழ்க்கையில் அருள்நிலை பெற்று மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றதும் இச்சித்திவளாகத் திருமாளிகையில்தான்.

"சித்திவளாகம்" என்பது அடிகளார் இட்ட பெயர். சித்தி – வீடுபேறு; வளாகம் – இடம்; வீடுபேற்றை நல்கும் இடம் என்பதாகும். சமயவாதிகள் முக்தியே முடிவான பேறு என்பர்.

கருமசித்தி, யோகசித்தி, ஞானசித்தி ஆக மூவகைச் சித்தியின் முடிவுகள் முழுவதும் அருள வேண்டிய வள்ளல் பெருமான், "முக்தி என்பது நிலைமுன் உறு சாதனம் / அத்தக என்றவென் அருட்பெருஞ்சோதி" என்றதன் மூலம், முக்தியை அடைய முன்உறும் சாதனமாகத்தான் சித்தி என்று கூறியுள்ளார்.

பிரம்ம தண்டியோகம் : சித்திவளாகத் திருமாளிகையில் தமது திருவறையில் தீச்சட்டிகளுக்கு முன் அமர்ந்து யோகம் செய்வார் அடிகளார். உலகோகத் துண்டு ஒன்றையோ அல்லது வெள்ளி நாணயம் ஒன்றையோ உள்ளங்கையில் வைத்து மூடித்திறந்தால் அவை உருகி ஓடும் அளவுக்கு அகச்சூடு உடையவர் அடிகளார். தீச்சட்டியினின்றும் நெருப்புத் துண்டுகள் சிதறி அடி

பின்னலூர்
மு. விவேகானந்தன்

களாரின் மீது விழுந்தபோதும், அடிகளின் திருமேனிக்கு ஊறு நேரிடுவதில்லை. ஞானக்கனல் நிறைந்த அத்திருமேனியைத் தீக்கனல் ஒன்றும் செய்ய முடியாதாம்.

“வெம்மை பேரின்ப லாபம் அடைந்தவரைச் சுடாது; புறத்தே நெருப்பிற் சுடினும் அவர் தேகத்தில் சூடும் வடுவும் தோன்றுவனவல்ல” என்பது வள்ளலாரின் உரைநடை வாசகம். அவரது மேனி கற்பூர மனம் கமழ்ந்தது.

சன்மார்க்க சங்கம் – சாலை – சபை: 1870–இல் திருமாளிகைக்கு வந்தபின் அடிக்கடி வடலூர் சென்று வந்த பெருமான், தன்னுடைய சிந்தனையில் உருவான “சத்திய ஞானசபை”யினை, மேட்டுக்குப்பத்தில் இருந்து கொண்டே நிர்மாணம் செய்தார். ஞானசபையின் முதல் ஜோதி தரிசனத்தை 25.01. 1872–இல் சித்தி வளாகத்தில் இருந்த படியே காட்டுவித்தார்கள்.

சித்திவளாகத்தில் இருந்து கொண்டே 09.3.1873–இல் சத்திய தருமச்சாலையில் உள்ளவர்களுக்கு “ஒழுக்கக்கட்டளை” ஒன்று வரைந்து விடுத்தார்.

“அருட்பெருஞ்சோதி அகவல்” என்னும் ஒப்புயர்வற்ற ஞானப் பொக்கிஷத்தைச் சித்திவளாகத் திருமாளிகையில் திருவறையிலிருந்து 18.4.1872–இல் சித்திரை மாதம் 8–ஆம் நாள் ஒரே இரவில் 1596 அடிகளை எழுதி அருளினார்கள்.

இம்மாளிகையில் இருந்து கொண்டே சத்திய ஞானசபையில் உள்ள அகண்ட தீபத்தையும் கண்ணாடியையும் வைத்து, ஒரு மண்டலம் அக்கண்ணாடிக்கு மகத்துவத்தை ஏற் படுத்தி, ஞானசபையில் பொருத்தி வைத்தார்கள். சித்திவளாகத் திருமாளிகையில் இருந்துதான் பற்பல கட்டளைகள், விண்ணப்பங்கள், உபதேசங்கள் யாவும் அடிகளாரால் அருளப்பட்டன.

மகா காரணமும் மகா சந்நிதானமும் : “இந்த உலகத்தில் எத்தனையோ புண்ணிய பூமிகள் இருக்கின்றன. இருந்தாலும் காரியப்பாடு டைய புண்ணிய பூமி எது? அது மதுரை திருத்தலம். அதனால் இறைவன் அந்தப் பூமியில் தோன்றி, அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் புரிந்திருக் கிறார்.


காரிய காரணமுடைய புண்ணிய பூமி எது? அது தில்லைச் சிற்றம்பலம் என்னும் சிதம்பரம். அதனால்தான் எல்லாம்வல்ல கூத்தன் அந்தப் புண்ணிய பூமியில் தோன்றி ஆனந்தத் தாண்டவம் புரிந்து கொண்டிருக்கிறார்கள். காரணமுடைய புண்ணிய பூமி எது? அது வடலூர். வடலூர் உத்தர ஞான சிதம்பரம். அதனால் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் அந்தப் புண்ணிய பூமியில் தோன்றி அருள்நடனம் புரிந்து வருகின்றார்.

மகா காரணமுடைய புண்ணிய பூமி எது? அது சித்திவளாகம். ஆகையால்தான் இந்தப் புண்ணிய பூமி திருவடியைக் காட்டுகிறது. திருவருளைக் காட்டுகிறது. திருமேனியைக் காட்டுகிறது. திருவருட் சமூகத்தைக் காட்டுகிறது. இயற்கைத் திருவண்ணத்தைக் காட்டுகிறது.

இந்த இடத்தில் மகா உபதேசம் எழுந்து இருப்பதனாலும், மகாமந்திரம் ஒலித்து இருப்பதனாலும், இந்தப் புண்ணிய பூமி எவ்வுலகத்துக்கும் மகா சந்நிதானமாகத் திகழ்கிறது.

சத்திய ஞான தீபம் : வள்ளல் பெருமான் தன்னுடைய திருவறையில் தடைபடாது விளங்கிய தீபம் சத்திய ஞானத்தை வழங்கியதுபோல், உலக மக்களும் சத்திய ஞானத்தைப் பெற வேண்டும். மரணமில்லாப் பெருவாழ்வில் வாழ வேண்டும் என்பதற்காகவே, தம்முடைய திருவறையிலிருந்து அத்தீபத்தை எடுத்து 1873 ஸ்ரீமுக ஆண்டு, கார்த்திகை மாதம் முழு நிலா நாளன்று சித்திவளாகத் திருமாளிகையின் வாயில் புறத்தில் வைத்தருளி, திருவாயில் கதவைச் சாத்தித் தாளிட்டு, அனைவரையும் நோக்கி, “ஆண்டவர் இப்பொழுது தீப முன்னிலையில் விளங்குகிற படியால் உங்களுடைய காலத்தை வீணிற் கழிக்காமல், நீங்கள் எல்லாரும், “நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே, நிறைந்து நிறைந்து...” என்னும் தொடக்கமுடைய 28 பாசுரங்கள் அடங்கிய ‘ஞானசரியை’ என்ற பதிகத்தில் கண்டபடி தெய்வ பாவனையை இந்தத் தீபத்தில் செய்யுங்கள்” என்று திருவாய் மலர்ந்து அருளினார்கள்.

திருக்காப்பிட்டுக் கொள்ளுதல் : சித்திவளாகத் திருமாளிகையில் நம் அடிகளார், யாருமே பெற முடியாத



சுத்த, பிரணவ, ஞான வடிவமென்னும் முத்திறன் வடிவத்தைப் பெற்று அருட்பக்குவம் பெற்றார்கள். 30.01.1874 ஸ்ரீமுக ஆண்டு தை மாதம் 19–ஆம் நாள் புனர்பூசமும், பூசமும் கூடும் சமயம் வெள்ளிக்கிழமை இரவு, பனிரெண்டு மணிக்கு, கடகத்தில் சந்திரனும், சூரியனும் பூரணமாக விளங்கும் ஞான நிறைவைக் குறிக்கும் நன்னாளில் பின்வருமாறு சன்மார்க்க சங்கத்தாருக்குக் கட்டளையிட்டார்கள்.

"நான் உள்ளே பத்துப் பதினைந்து தினமிருக்கப் போகிறேன். பார்த்து அவ நம்பிக்கை அடையாதீர்கள். ஒருகால் பார்க்க நேர்ந்து பார்த்தால், யாருக்கும் தோன்றாது வெறும் வீடாகத் தானிருக் கும்படி ஆண்டவர் செய்விப்பார். என்னைக் காட்டிக் கொடார்." வள்ளல் பெருமானின் கட்டளைப்படி கத வானது பூட்டப்பட்டது. பெருமான் திருக்காப்பிட்டுக் கொண்டார்.

"பிச்சுகலர் மெச்சப் பிதற்றிநின்ற பேதையனேன்
இச்சைஎலாம் எய்த இசைந்தருளிச் செய்தனையே
அச்சமெலாம் தீர்ந்தேன் அருளமுதம்
உண்ணுகின்றேன்
நிச்சலும்பே ரானந்த நித்திரை செய் கின்றேனே"

என்று திருவாய் மலர்ந்தருளிய நம்பெரு மான், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவ ராகி அருட்பிரகாச வள்ளலாய் எங்கும் நிறைந்து உன்னத நிலையை எய்தினார்.

ஆங்கிலேயே அதிகாரி காணிக்கை : வள்ளல்பெருமான் திருக்காப்பிட்டுக் கொண்டதற்குப் பின் சில நாள்கள் கழித்து அரசு ஆணைப்படி, தென்ஆர்க் காடு மாவட்டக் கலெக்டர் ஜெ.ஹெச். கார்ஸ்டின், ரெவின்யூ போர்டு உறுப் பினர் ஜார்ஜ் பென்ஃபூரி, தாசில்தார் வேங்கடராமய்யர் ஆகியோர் மருத் துவர் ஒருவருடன் வந்து காவல்துறை யினருடன் சேர்ந்து ஒரு விரிவான விசா ரணையை மேற்கொண்டனர். தாசில் தார் வேங்கடராமய்யர் மட்டும் தனது அதிகாரத்தைக் காட்டும் வகையில் அங்கிருந்த அன்பர்களை அதட்டி, மிரட்டி பலவகை இழிமொழிகளைக் கூறிக் கதவைத் திறக்கச் சொன்னார்.

ஆங்கிலேயர்களான அந்த இரு அதிகாரிகளும் குதிரையைவிட்டுக் கீழே இறங்கி, சுவாமிகள் திருக்காப்பிட்டுக் கொண்டு மறைந்த அந்தக் குடிசை யைச் சுற்றிச் சுற்றி வந்து பார்த்துவிட்டு, "பெரியோர் களைப் பற்றி நாம் ஒன்றும் குறை கூறுதல் கூடாது" என்ற உயரிய நோக் கில், ஐயத்திற்குரிய வகையில் ஆதாரம் ஒன்றுமில்லை என்று உணர்ந்து, வள்ளல் பெருமானைப் போற்றும் வகையில், அன்னதானச் செலவுக்காக அன்பர்களிடம் ரூ.20/– காணிக்கையாக வழங்கிச் சென்றனர்.

முணுமுணுத்துக் கொண்டே வந்த வேங்கடராமய்யர், குதிரையின் மிரட்சி யால் முட்புதரில் விழுந்தார். வள்ளல் பெருமான் பற்றிய இழிமொழிகளுக்குக் கிடைத்த தண்டனைதான் என்று கூறி அவரைப்பின் கட்டை வண்டியில் அழைத்துச் சென்றனராம்.

மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றுத் திருமேனியைத் திருமாளிகை யில் மறைத்துக் கொண்ட சித்தி வளாகமும் (மேட்டுக்குப்பம்) அருட் பெருஞ்சோதி ஆண்டவராய்க் காட்சிதரும் உத்திர ஞான சிதம்பரமும் (வடலூர்) வள்ளல் பெருமானின் பெரு மைகளால் பறைசாற்றும் புண்ணிய பூமிகளாய் விளங்குகின்றன.

ஒவ்வோர் ஆண்டும் தைப்பூசத் திருநாள் அன்று வடலூர் சத்தியஞான சபையில் ஆறுகாலம் ஜோதி தரிசனம் காட்டப்படுகிறது (மாதப் பூசத்தின் போது இரவு ஒரு கால ஜோதி தரிசனம் மட்டும் காட்டப்படும்). மூன்றாம் நாள், மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகையில் 'திருஅறை தரிசனம்' நிகழ்வு சிறப்புற நடைபெறுகிறது.

வள்ளல்பெருமான் அவதரித்த மருதூர், நெடுநாள் தங்கி திருஅருட்பா யாத்து தண்ணீர் விளக்கெரித்த கருங் குழி, நீரோடை, மேட்டுக்குப்பம் (சித்தி வளாகம்) வடலூர் இவை யாவும் சுமார் 8 கி.மீ. சுற்றளவிலேயே அமைந்துள்ள தால், வள்ளல் பெருமான் வாழ்ந்த இடங்களைக் கண்டு தரிசித்து வர வேண்டியது சைவர்களாகிய நம் அனை வரது கடமையுமாகும்.

சிறுகதை

மு. பழனி இராகுலதாசன்

வயிறு



பெரிய தம்பியை வேலைக்குப் போகச் சொல்வது தவிர வேறு வழியில்லை என்று அன்னத்தாயி தீர்மானமாக ஒரு முடிவுக்கு வந்தாள். திடீரென்று எடுத்துவிட்ட முடிவு இல்லை இது.

கணவன் சுப்புராசு கட்டட வேலை பார்த்த போது உச்சியிலிருந்து வழுக்கி விழுந்து இறந்த போய் இரண்டு மாதங்கள் ஓடிவிட்டன. இந்த இரண்டு மாதங்களில் இரவும் பகலுமாய் யோசித்து யோசித்து, மனதுக்குள் அழுந்தி அழுந்தி பிறகுதான் இப்படி ஒரு முடிவுக்கு அவள் வந்தாள். பெரிய தம்பி ஏதாவது வேலைக்குப் போய், வீட்டு வயிற்றுப்பாட்டைக் கவனித்தால் தான் கைக்குழந்தையை வளர்க்கலாம்... நாலு எழுத்துப் படிக்க நேரம் வரும்போது படிக்க வைக்கலாம்.

சுப்புராசு இறந்துபோன பிறகு நாகராசு மாமா தான் அடிக்கடி வந்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார். ‘‘ஏங்க தாங்கலுக்கு எதுன்னாலும் கேளு அன்னத்தாயி, தாரேன்’’ என்பார். அவர் வந்து திண்ணையில் உட்காருவதே அன்னத்தாயிக்கு ஒரு பெரிய நிழல் கூட்டுவதாக அமையும். கடைக்குப் போய் வருகிற வழிதான் அவருக்கு.

சில நாள்களில் அவர் சிறிது தாமதமாக வர நேர்ந்தால் ‘அண்ணனை இன்னம் காணோமே’ என்று மனசுக்குள் மருகிப் போய், வாசல் வரைக்கும் ஓடிவந்து தெருப்பக்கம் ஒருமுறை பார்த்துக் கொள்வாள். அவர் வந்து திண்ணையின் ஓரமாய் உட்காருவார். தாகமோ, தண்ணீர்த் தேவையோ எதுவும் இல்லாத நிலையிலும், உட்கார்ந்து கொள்கிற அடுத்த நிமிடமே, ‘‘அன்னத்தாயி, ஒரு சொம்பு தண்ணி கொடு’’ என்று கேட்பார். அவர் தண்ணீர் கேட்பதற்கு உள்ளுக்குள், ‘‘நான் இருக்கிறேம்மா, கவலைப்படாதே’’ என்று ஓர் அர்த்தம் படிந்து கிடக்கும்.

உள்ளே ஓடிப் போய் லாடஞ்செம்பு நிறைய தண்ணீர் எடுத்துக்கொண்டு திண்ணைக்கு வந்து ‘‘அண்ணே’’ என்று அவரிடம் அன்னத்தாயி கொடுப்பாள். அப்படிக் கொடுப்பதற்கும், கொடுத்து விட்டுச் சிறிது கண்கலங்கி நிற்பதற்கும் உள்ளுக்குள் ஒரு பொருள் உண்டு. இவையெல்லாம் எந்த உரைகளுக்கும் அடங்கி விடாத உள்ளுறைகள்.

> ‘‘சரி, அன்னத்தாயி, தம்பியை என் கடைக்கு வரச்சொல்லு, வேலையும் பழகிக்குவான், ஒரு சம்பளமும் போட்டுத் தாரேன்’’

திண்ணையில் உட்கார்ந்து கொண்ட நாகராசு மாமா, ‘‘அன்னத்தாயி, சாப்பிட்டாயா, குழந்தை என்ன செய்யுது...? பயல் எங்க...? வெளையாடப் போயிட்டானா...?’’ என்று பிரியமாய் விசாரித்தார். அன்னத்தாயின் முகம் பார்த்து நாகராசு மாமா விசாரிப்பைக் கொஞ்சம் கொஞ்சமாய் நகர்த்தி நகர்த்தி விஸ்தரிப்பார்.

‘‘நிய்யி, அந்த ரைஸ் மில்லிலதானே வேலை பார்க்குற?’’ என்பார். ‘‘அந்த வேலைய விட்டுப் பிடாதே தாயி’’ என்பார். இந்த விவரங்கள் ஏற்கனவே அறியப்பட்டவைதான் என்றாலும் விஸ்தரிப்புக்காக இவை மேலும் மேலும் தேவைப்படுபவை.

கைக்குழந்தையை நெஞ்சோடு அழுத்தி அணைத்துக் கொள்கிற அன்னத்தாயி, நிர்க்கதி யான தனது குடும்பத்து நிலையை ஒரு கணம் எண்ணிக் கண்கலங்கி ‘‘ஆகட்டும் அண்ணே’’ என்றாள்.

திண்ணையிலிருந்து இறங்கிக் கொள்கிற நாகராசு மாமா, ‘‘பிள்ளைக்கு என்னா பேரு?’’ என்றார்.

‘‘அவரோட ஆத்தா பேரு, முருகாயின்னு வச்சாரு’’ என்றாள் அன்னத்தாயி.

‘‘முருகாயி, ஆமா, ஆமா, முருகாயி, எனக் கும் சட்டென்று மறந்துபோச்சு... என்னோட ஆத்தா பேரும் முருகாயிதான்’’ என்றார் நாகராசு மாமா. நெஞ்சத்தின் கசிவுகளுக்கு மூலமும் இல்லை, முடிவுகளும் இல்லை போலும்.

ஒருநாள்; நாகராசு மாமா தன் கடைக்குப் போகிற வழியில் அன்னத்தாயி வீட்டு வாசலில் நொடிநேரம் நின்றார்; நின்றபடியே உள்ளே பார்த் தார்; இந்த நிற்றலுக்கும், உள்ளே பார்த்தலுக்கு மான உள்பொருள், ‘நான் இருக்கேன் அன்னத் தாயி’ என்பதாகவே இருக்கும்.

வாசலில் நாகராசு மாமாவின் நிழல்படிகின்ற நொடி நேரத்தில் அன்னத்தாயி வாசலுக்கு ஓடி வந்து நிற்பாள். பேச்சு மொழிகளுக்கு அப்பாற்பட்ட அந்த நேரங்களில் நாகராசு மாமாதான் சற்றுக் குரலை ‘‘ம்க்கும்’’ என்று தாழ்ந்த ஓசைப் பரவலில் செருமிக் கொள்வார். அவள்தான் முன்கூட்டிப் பேச வேண்டும் என்று அவர் நினைப்பதில்லை; ‘‘நான் வந்துட்டேன், நீ, பிள்ளைகள் எல்லாம் நல்லா இருக்கீங்களா, நான் கடைக்குப் போறேன்’’ என்ற விவரிப்புக்களின் ஒட்டுமொத்தமான சொற்களாக, வாசலின் ரோட்டுப் பக்கம் வலது கையை நீட்டியவாறு, ‘‘கடைக்குப் போறேன், அன்னத்தாயி’’ என்று மட்டும் மிக மெல்லிதாகச் சொல்வார்.

உள்ளே இருந்து தட்டுத்தடுமாறி, கைக் குழந்தையை இடுப்போடு ஒட்டிப் போட்டுக் கொண்டு, ‘‘சரி அண்ணே’’ என்று சொல்லிக் கொண்டே வழக்கமாக விரைவாக வாசலை நோக்கிக் கால்பாவி வரும் அன்னத்தாயி, இப் போது வாய்திறந்து ஒன்றும் பேசாமல் வந்தாள்.

வாசலை நோக்கிய அவளது மௌன விரைவு வேறு ஏதோ ஒரு புதுச் சேதியைத் தெரிவிப்பதற் காக இருக்குமோ என்று தோன்றியது.

‘சரி அண்ணே’ என்ற மிக மெதுவான வார்த் தைகள் இல்லாமல், சிறிது கூடுதலான விரை வோடும், அதன்மீது மேவிக்கிடக்கும் படபடப் போடும் வந்த அன்னத்தாயை நாகராசு கூர்ந்து பார்த்தார். பக்கத்தில் வந்ததும் அன்னத்தாயிக்குச் சொல்லாடல் அடைபட்டுவிட்டது.

‘‘அன்னத்தாயி என்னவோ சொல்ல நினைக்குது, அதுவாகவே சொல்லட்டுமே’’ என்ற நிதானத்தில் நாகராசு அவளை உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தார். நாவடைத்த நிலையில் அவளது கண்களில் கண்ணீர் கொட்டியது. சிறிது படபடத்துப் போன நாகராசு, சட்டென்று திண் ணையில் உட்கார்ந்து கொண்டார்.

அப்படி அவர் உட்கார்ந்து கொள்ளுதல், ‘‘ஏம்மா இப்படி மனசைவிட்டு நிற்கிறே, அண்ணன் இருக்கேன், சொல்லும்மா’’ என்ற மனஓட்டத்தின் வெளிப்பாடாக அமைந்தது. பொங்கிப் பொங்கி நிற்கிற இரண்டு மனசுகளில் ஏதாவது ஒன்று, சில நிமிடங்களில் தாமதத்துக்குப் பிறகாவது வார்த்தையாடத்தானே வேண்டும்.

‘‘வாழ்க்கையின் கடைக்கோடி விளிம்பில் அடுத்தடுத்துச் செய்வதறியாமல் நிற்கிற அன்னத் தாயி பேசட்டும், என்ன பேசினாலும் கைகொடுக்க நான் இருக்கிறேன்’’ என்ற தீர்மானத் தெளிவின் காரணமாக நாகராசு எதுவும் பேசாமல் இருந்தார்.

‘‘அண்ணே’’

‘‘சொல்லு அன்னத்தாயி’’

‘‘பெரிய தம்பியை ஏதாவது வேலைக்கு அனுப்பலாம்னு பார்க்கிறேன் அண்ணே; பள்ளிக் கூடம் போகிற பிள்ளையைப் பாடுபடப் போடான்னு சொல்ல மனசு வரலை அண்ணே, கைக்குழந் தையை வச்சுக்கிட்டு, ரைஸ் மில்லு சம்பளத்தை மட்டும் வச்சுக்கிட்டு நான் என்ன பண்ணட்டும்’’ என்று எழுத்துக்களைக் கூட்டிக் கூட்டி, கூட்டி முடிந்த எழுத்துக்கள் எல்லாம் கண்ணீர்த் திவலை களோடு சேர்ந்து சேர்ந்து அன்னத்தாயி பேசுவதை நாகராசு இமைக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தார்.

‘‘வேண்டாம் அன்னத்தாயி, சின்ன வயசு, படிக்கிற வயசு, வேண்டாம் அன்னத்தாயி’’ என் றெல்லாம் மறுத்துச் சொல்ல அவரிடம் எந்த ஒரு வழியும் இல்லை, வாய்க்காலும் இல்லை.



அன்னத்தாயின் குடும்பச் சூழ்நிலை நாக ராசை அழுத்தி, அழுத்தி யோசிக்க வைத்தது. ஊரெல்லாம், பள்ளிக்கூடம்தான்; புத்தகம் எல் லாம், உடையெல்லாம் இலவசம்தான்; ‘‘சரி அன்னத்தாயி, அதுவும் சரிதான். சின்னதம்பி வேலைக்குப் போகட்டும்... அப்புறமா, போகப் போகப் பார்த்துக்கலாம்’’ என்றார் நாகராசு மாமா.

அடுத்து எங்கே போகச் சொல்வது? யாரிடம் வேலை? என்பதான புள்ளிவிவரங்களுக்குள் அன்னத்தாயி போக முடியவில்லை. ஆனால் நாகராசு மாமா யோசித்து ஒரு முடிவும் எடுத்து விட்டார். ‘‘சரி, அன்னத்தாயி, தம்பியை என் கடைக்கு வரச்சொல்லு, வேலையும் பழகிக்கு வான், ஒரு சம்பளமும் போட்டுத் தாரேன்’’ என்றார்.

நான்கு கண்களிலிருந்து கண்ணீர்த் திரை; முதலில் திரையாகி, பின்னர் தாரை தாரையாய் ஆயிற்று.

விடியாத வேளை என்றால் அடையாளம் புலப் படாது; விடிந்துவிட்டது என்றால் புலப்பட்டுவிடும்; அம்மாவுக்கும் கைப்பிள்ளை தங்கச்சிக்கும் இடைப்பட்டு நிற்கின்ற அண்ணன்காரன் அவன். ‘‘நேத்து நாகராசு மாமா வந்தார், அவரோட கடை யில உன்னைச் சேத்துக்குறேன் என்றார்; மாமா மாசா மாசம் சம்பளம் தருவார்’’ என்று சொல்லிக் கொண்டே வந்த அன்னத்தாய், அவனது படிப் புக்கு இடமில்லை என்பதை வாய்விட்டுச் சொல்ல மாட்டாதவளாய், ‘‘நீயும் நானுமாய் தங்கச்சிய பெரிய படிப்புப் படிக்க வைக்கலாம்’’ என்று மட்டும் சொன்னாள்.

தாயாருக்கும் தங்கைக்கும் இடைப்பட்டுக் கிடக்கும் அவன் 'சரிம்மா' என்றான்; அவன் வேறு என்னதான் சொல்ல முடியும்?

வழக்கமாக வரும் நேரம் மிகவும் கழிந்து போன பிறகே நாகராசு மாமா வந்தார். பத்து நாள் வெளியூர் வேலை என்றவர், திண்ணையில் உட்கார்ந்து, திண்ணைத் தூணில் சாய்ந்து தன்னைச் சிறிது ஆசுவாசப்படுத்திக் கொண்டார்.

மூன்றுநாள் அன்னத்தாய் மகன் செல்வம் கடைக்கு வரவில்லை. அவன் கடைக்கு வந்து சேர்ந்த முதல் நாளிலேயே, கடையில் இருந்த இன்னொரு வேலைக்காரனிடம், "தம்பீ, நீ பெரிய ஆளு, நாலு வருசமா கடையில இருந்து பழகிட்ட, எல்லா விவரமும் உனக்குத் தெரியும்... இப்ப வர்ற பையன் சின்னப் பையன், அன்னத்தாயி தங்கச்சி யோட பையன், ரொம்பக் கஷ்டப்படுற குடும்பம்; ஒரு சம்பளம் கொடுத்து அமர்த்தி வச்சிருக்கேன்; அப்பா இல்லாத பையன்... அவன் பயப்படுற மாதிரி எதுவும் சொல்லிப்புடாதே... நான் பாத்துக் குறேன்; செங்கல்லைச் சின்னப் பையன் எடுக்கும் போது கை தவறும், உடைஞ்சு போகும், ஏதும் சொல்லிப் புடாதே... நீ புதுசா வந்தப்போ எத்தனை செங்கல்லை உடைச்சுப் போட்டே, நினைவுக்கு வருதா... பாத்துக்க..." என்று பக்குவமாய் சொல்லியிருந்தார்.

பிறகு, ஏன் செல்வம் பையன் ரெண்டு நாலாய்க் கடைக்கு வரவில்லை? அந்த விசாரிப்புக்காகவே நாகராசு மாமா வீட்டுக்கு வந்து உட்கார்ந்தார்; இப்போது உட்கார்ந்திருக்கும் அழுத்தம், தூணின் மீதான சாய்மானம் எல்லாம் அன்னத்தாய் பையனுக்குத் தான் ஏதோ ஒரு வேலை கொடுத்து, உதவிகரமாய் இருந்துவிட்டோமே என்ற ஆசுவாச அழுத்தம்; சிறிது மனம் சமாதானம் அடைந்த சாய்மானம்.... ஏன், பயல் கடைக்கு ரெண்டு மூன்று நாட்களாய் வரவில்லை? என்று கேட்டுவிட்டு, கையோடு கடைக்குக் கூட்டிப்போய்விட வேண்டும் என்ற தீர்மானம்...

நாகராசு அண்ணன் திண்ணையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் வேகமாய் நடந்து வந்தாள் அன்னத்தாய். சூழ்நிலை எதுவானாலும் தானே முந்திக் கொண்டு பேசுவது வெப்பத்தைத் தவிர்க்கும் ஒரு மருந்து என்பதை நாகராசு மாமா அனுபவத்தில் உணர்ந்தார். அதிலும் தங்கை உறவாகி, மிக நெருங்கிவிட்ட அன்னத்தாயிடம் பேசுவதில் தயக்கத்திற்கு இடமே இல்லை. வழக்கத்திற்கும் கூடுதலான பாசத்தோடு, "ஏம்மா, தம்பி ரெண்டு மூணு நாளா கடைக்கு வரலையே, உடம்புக்கெல்லாம் நல்லா இருக்கா?" என்று கேட்டார்.

சற்றும் எதிர்பாராதவிதமாக நாகராசுவின் மிக நெருக்கத்தில் உட்கார்ந்துவிட்ட அன்னத்தாயி, தன் இரு உள்ளங்கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு கண்ணீர் கொட்டி அழத் தொடங்கிவிட்டாள்.

எதையும் அனுமானிக்க முடியாமல் நாகராசு அன்னத்தாயின் முகம்தொட்டு, நிமிர்த்தி, "சொல்லு தாயி, அண்ணன் நான் இருக்கேன்ல" என்றார்.

அவளால் எதுவும் சொல்லாட முடியவில்லை; நாகராசு பேசினார்.

"கடைக்கு வரப்பிடிக்கலைன்னு சொல்றானா?"

அன்னத்தாயி 'ஆமா' என்ற பாவனையில் தலை அசைத்தாள்.

"கடையிலேகூடச் சொல்லி வைத்திருந்தேனே, சின்னப் பையன், எதுவும் கடுமையா சொல்லிடாதீங்க என்று..."

தொடர்ந்து நாகராசு கேட்டார் : "தம்பி என்ன தான் சொல்றான்... வேலைக்குப் போக மாட்டேன்னு சொல்றானா?"

"மாட்டேன்னு சொல்லல்லே"

"பிறகு"

அன்னத்தாயிக்கு வார்த்தைகள் சிக்கிச் சிக்கித் தவித்தன; சட்டென்று வெளிவரவில்லை; வார்த்தைகளை மென்றும் விழுங்கியுமாய்ச் சொன்னாள் :

"அவன் சிநேகிதன் ஒருத்தன் ஓட்டலில் வேலை பார்க்கிறானாம்; நீயும் வாடான்னு கூப்பிட்டானாம்..."

"ம், சரி, அதற்கு" என்றார் நாகராசு.

"ஓட்டலிலே ரெண்டு வேளை நல்லா சாப்பிடலாம், நீயும் என்னோட வாடான்னு கூப்பிட்டானாம், அங்கே போகிறேன்னு சொல்கிறான் அண்ணே" என்றாள் அன்னத்தாயி.

அன்னத்தாயி சொன்ன வார்த்தைகள் நாகராசு மாமாவின் நெஞ்சுக்குள் ஒரு சுழற்சி செய்து, கீழே வயிற்றுக்குள் போய் வயிற்றையும் தொட்டு, அங்கேயும் ஒரு சுழற்சி செய்ய அனுமதிக்க மாட்டாதவராய் மிகவும் பலவீனம் அடைந்து மெதுவாக எழுந்து நின்றார்; தெருப் பக்கம் தனது பார்வையைச் செலுத்தி, "அன்னத் தாயி, பெரியதம்பி ஓட்டலுக்கே வேலைக்குப் போய் வரட்டும்" என்றார்.

●

கட்டுரை



சகோதரி நிவேதிதை இந்து மதத்தின் தாயகமாகிய இந்தியாவின் மீது பெரிதும் பக்தி கொண்டிருந்தார். அவர் பாரத நாட்டின் வரலாற்றுக்கே முதல் முக்கியத்துவம் அளித்தார்.

சகோதரி நிவேதிதை இந்து மதம், இந்தியப் பண்பாடு, இந்திய விளையாட்டுக்கள் முதலிய வகையில் அமைந்த இந்தியப் பாரம்பரியங்களைப் பாதுகாத்து வளர்த்து வருவதில் அதிக ஆர்வம் காட்டினார்.

அவர் 1902–ஆம் ஆண்டு துர்க்கா (நவராத்திரி) பூஜை சமயத்தில், நாக்பூருக்குச் சென்றிருந்தார். அப்போது 'மோரிஸ் கல்லூரி' (Morris College) நிர்வாகிகள், நிவேதிதையின் தலைமையில் ஒரு பரிசளிப்பு விழா நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அந்நாளில் இந்தியாவில் தேசிய சிந்தனை உடையவர்கள், சகோதரி நிவேதிதையை வீரப் பெண்மணியாகவே கருதினார்கள்.

இந்திய மாணவர்களுக்கு சகோதரி நிவேதிதையின் அறிவுரை

'வீராங்கனையாகிய நிவேதிதையின் சொற்பொழிவைக் கேட்க வேண்டும்' என்பதற்காகவே மோரிஸ் கல்லூரி நிர்வாகிகள், நிவேதிதையைப் பரிசளிப்பு விழாவுக்கு அழைத்திருந்தார்கள்.

இந்த விழா, நீல் நகரப் பள்ளிக்கூடத்தில் (Neil City School) நடைபெற்றது. நிவேதிதை விழாவிற்கு வந்து மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

அதன்பிறகு அவர், மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் ஒரு சொற்பொழிவு செய்தார். அந்தச் சொற்பொழிவில் நிவேதிதை பின்வரும் ஒரு கருத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறினார்:

"நீங்கள் இந்தக் கிரிக்கெட் விளையாட்டை, மிகவும் ஆர்வத்துடன் திறமையுடன் விளையாடிப்



சுவாமி கமலாத்மானந்தர்



பரிசுகள் பெறுவது குறித்து எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால், கிரிக்கெட் விளையாட்டு அந்நிய நாட்டு விளை யாட்டாகும். அந்நிய நாட்டு விளை யாட்டை விளையாடுவதில் இருக்கும் ஆர்வம் காரணமாக, நீங்கள் உங்கள் நாட்டு அதாவது இந்திய வீர விளை யாட்டுக்களை மறந்து புறக்கணித்துவிட் டீர்கள் – இது எனக்கு மிகவும் வருத்தம் தருகிறது.

“மேலும், ‘நீங்கள் அந்நிய நாட்டுக் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களுக்குப் பரிசளிப்பதற்காக என்னை அழைத் திருக்கிறீர்கள்’ என்று எனக்கு முன்பே தெரிந்திருந்தால் – நான் இந்த விழாவில் கலந்துகொள்ள ஒப்புக் கொண்டிருக்க மாட்டேன்.

“இந்த துர்க்கா பூஜை நாட்களில், நாம் ஆயுதங்களை வைத்து அன்னை துர்க்கா தேவியைப் பூஜிக்க வேண்டும். இப்படிப்பட்ட நேரத்தில் வீரம் மிகுந்த கத்தியை நீங்கள் எப்படி மறந்தீர்கள்? ஏன் மறந்தீர்கள்? இந்த ஆயுதபூஜை நாளில் மராட்டிய அரசர்கள், ஆயுதங் கள் கொண்ட வீர விளையாட்டுக் களையே பார்த்து மகிழ்ச்சியடை வார்கள். அப்படியிருக்கும்போது, நீங் கள் அத்தகைய வீர விளையாட்டுக் களை மறந்திருப்பது என் மனதிற்கு மிகவும் வருத்தம் அளிக்கிறது. உங்களு டைய பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நமது இந்தியப் பாரம்பரியத்திற்கு ஏற்புடைய வீர விளையாட்டுக்களைப் பார்ப்பதற்காகவே நான் இங்கு வந்தேன்” என்று சகோதரி நிவேதிதை வீராவேசத்துடன் கூறினார்.

அவர் அவ்விதம் கூறியதைக் கேட் டதும் கல்லூரி முதல்வரும் ஆசிரியர் களும் உடனே கத்திச்சண்டை, கபடி, சிலம்பம், மல்யுத்தம் முதலிய இந்திய விளையாட்டுக்களை விளையாடத் தெரிந்த மாணவர்களைத் தேட ஆரம் பித்தார்கள்.

முடிவில் அவர்கள் ஜி.வி.தேஷ்முக் என்பவரைக் கண்டுபிடித்தார்கள். அவர்கள் ஜி.வி. தேஷ்முக்கைக் கொண்டு கத்திச்சண்டை, சிலம்பம் முதலிய ஹிந்து ராஷ்டிரத்திற்கே உரிய வீர விளையாட்டுக்களை விளையாடிக் காட்டுவதற்கு ஏற்பாடு செய்தார்கள்.

மறுநாள் அத்தகைய ஹிந்து ராஷ் டிர வீர விளையாட்டுக்கள், சகோதரி நிவேதிதை மட்டும் பார்ப்பதற்கு ஏற் பாடு செய்யப்பட்டது. அவரது முன்னி லையில் மூன்று மணி நேரம் இந்திய வீர விளையாட்டுக்கள் நடைபெற்றன.

இவ்விதம் ஹிந்து ராஷ்டிர வீர விளையாட்டுக்கள் நடந்து முடிந்ததும், நிவேதிதை மிகவும் மகிழ்ச்சியுடன் ஜி.வி. தேஷ்முக்கை அருகில் அழைத்து, “நீங் கள் அனைவரும் கல்லூரி மாணவர்கள் தானே?” என்று வினவினார். ஆனால் உண்மையில் தேஷ்முக் ஒருவரைத் தவிர, மற்றவர்கள் அனைவரும் வெளியி லிருந்து அன்றைய தினம் இந்திய விளை யாட்டுகளுக்காக அழைத்து வரப்பட் டிருந்தார்கள்.

மூன்று மணி நேரம் இந்திய வீர விளையாட்டுக்களைச் சகோதரி நிவே திதை பார்த்து மகிழ்ந்தார். இந்த வீர விளையாட்டுக்கள் முடிந்ததும், அவர் மாணவர்களைப் பாராட்டும் வகையில் எழுந்து நின்று பேசியபோது இவ்விதம் கூறினார்:

“என்னுடைய இந்திய மாணவச் செல்வங்களே! நம்முடைய கல்லூரிகள் ஒவ்வொரு வருடமும் பட்டதாரிகள் பலரை உருவாக்கி வெளியே அனுப்பு கின்றன. ஆனால், அவர்களில் பெரும்பாலானவர்கள் உடல்வலிமை இல்லாதவர்களாகவும், வீரம் இல்லா தவர்களாகவும் இருக்கிறார்கள். அவர் கள் தங்களையும் தங்களுடைய தாய், சகோதரி, மனைவி ஆகியவர்களையும் தக்க சமயத்தில் பாதுகாக்கும் வலிமை இல்லாமலும், போர்த் திறமை, சண் டைப் பயிற்சி இல்லாமல் சக்தியற்று இருக்கிறார்கள்.

“வலிமையும் தேசபக்தியும் நிறைந்த மாணவர்கள்தான் இந்த நாட்டிற்கு இப்போது தேவைப்படுகிறார்கள். வீரம் மிகுந்த இளைஞர்களே நமது நாட்டிற்கு இப்போது வேண்டும். அப்படிப்பட்ட மாணவர்களை உருவாக்காமல், நாம் நமது நேரத்தையும் திறமையையும்



மென்மையான அந்நிய நாட்டு விளையாட்டுக்களில் வீணாக்கக் கூடாது.

“அந்நிய நாட்டு விளையாட்டுக்களைத் திறமையாக விளையாடி அதில் தேர்ச்சி பெற்று, அந்நிய நாட்டுக்குப் பெருமை தேடித் தருவதில் நமக்கு என்ன பெருமை இருக்கிறது? எனவே, ஆண்மை தரக்கூடிய வீர விளையாட்டுக்களையே நமது ஹிந்து ராஷ்டிரம் இப்போது வேண்டியிருக்கிறது. இந்திய வீர விளையாட்டுக்களை விளையாடும் திறமையுடைய மாணவர்கள்தான் பாரத ராஷ்டிரத்திற்கு இப்போது தேவைப்படுகிறார்கள். இனி, அத்தகைய வீர மாணவர்களை உருவாக்குவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும்!” என்று வீரமாதா நிவேதிதை வீரம் ததும்பக் குறிப்பிட்டார்.

சகோதரி நிவேதிதை, “மோரிஸ் கல்லூரி நிர்வாகிகளும், மாணவர்களும் தன்னைப் பரிசளிக்கும் விழாவிற்கு அழைத்திருக்கிறார்கள்” என்று மகிழ்ந்து, அவர்களைச் சம்பிரதாயத்திற்காகப் பாராட்டிப் பேசவில்லை. அவர் அவர்களைப் புகழ்ந்து பேசவில்லை என்பதுடன், உண்மையில் மாணவர்களுக்கு எது மிகவும் அவசியம் தேவைப்படுகிறதோ – அதையே அவர் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்திப் பேசினார்.

அன்றைய தினம் நிவேதிதை, ஹிந்து ராஷ்டிரத்தின் சிறப்பு அம்சங்களை வளர்ப்பதிலும் – அவற்றிற்கு முதல் முக்கியத்துவம் கொடுப்பதிலும் மாணவர்களுக்கு உள்ள கடமையை எடுத்துக் காட்டினார்.

“இந்திய மக்களிடம் தேசபக்திச் சிந்தனைகள் – தேசியச் சிந்தனைகள் எழுச்சி பெற வேண்டும்” என்று சுவாமி விவேகானந்தர் விரும்பினார். அவற்றுக்குச் செயல் வடிவம் தரும் பணிக்கு நிவேதிதை தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

“இந்திய மக்கள் எழுச்சி பெற வேண்டும், விழிப்புப் பெற வேண்டும், ஆண்மை பெற வேண்டும்” என்பதற்காகவே நிவேதிதை தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

நமது சொல், செயல், சிந்தனை அத்தனையும் நமது தாய்நாட்டிற்கும், நமது இந்தியப் பண்பாட்டிற்கும், நமது இந்து மதத்திற்கும், நமது மகான்களுக்கும், நமது நாட்டில் தோன்றிய வீரர்களுக்கும் பெருமை சேர்ப்பதற்காகவே இருக்க வேண்டும்.

முதலில் நாம் நமது தாய்நாட்டைப் பற்றியும், நமது ஹிந்து மதத்தைப் பற்றியும், நமது ஹிந்துப் பாரம்பரியங்களைப் பற்றியும் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும்; நம் கண்ணெதிரில் ஹிந்துப் பண்பாடுகள் சிதைவதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது.

நமக்குள் சிறிய சிறிய கருத்து வேற்றுமைகள் இருந்தாலும், அவற்றை நாம் மறந்து, குழிதோண்டி ஆழப் புதைத்து விட்டு, “நாம் அனைவரும் ஹிந்துக்கள்” என்ற சகோதரத்துவ உணர்வுடன் ஒன்றுபட்டு வாழ வேண்டும்.

நாம் முதலில், நமது சொந்தத் தாயாகிய நமது ஹிந்து மதத்தைப் பற்றியும், ஹிந்துப் பண்பாடுகளைப் பற்றியும் தெரிந்துகொண்டு – அவற்றை மென்மேலும் சிறந்த முறையில் வளர்ப்பதிலும், பாதுகாப்பதிலும் முழு அளவில் கவனம் செலுத்த வேண்டும். அதைச் செய்து முடித்தபிறகும் நமக்கு நேரம் இருந்தால் – அடுத்த வீட்டுக்காரியாக இருக்கும் பிற நாட்டு மதங்கள் – பண்பாடுகள் ஆகியவை பற்றித் தெரிந்து கொள்வது பற்றி, பிறகு யோசித்துக் கொள்ளலாம். ●





பொன்னடியான் என்னும் கவிதைப் போராளி!



நான்கு சுவர்களுக்குள் நாற்காலியில் அமர்ந்து வாசித்த கவிதையைக் கடலோர மணல்வெளிக்குக் கைத் தட்டலோடு அழைத்துச் சென்றவர். மீசை முளைக்காத பருவத்தில் கவிதை ஆசை முளைத்த இளைஞர்களுக்குத் தனது ‘முல்லைச்சரம்’ பத்திரிகை வாயிலாக முகவரி கொடுத்தவர்.

கால நதியில் அடித்துப் போகாத பல அற்புதமான திரைப்படப் பாடல்களைத் தமிழுக்குத் தந்தவர். பாரதிதாசன் பாட்டுவண்டி நகர அவருக்குப் பாதுகாவலனாய்... பணியாளனாய்... பயணித்தவர்... பாரதிதாசன் பாட்டுப் பரம்பரையில் வந்தவர்... ‘கவிஞர்களை வளர்க்கும் கவிஞர்’ என்று டாக்டர் கலைஞரால் பராட்டப் பெற்றவர்.

இப்படியான அடையாளங்கள் ஒருங்கே கொண்ட கவிஞர் பொன்னடியானை நிகழ்காலத்தில் இந்தத் தமிழ் உலகம் ஏனோ கண்டு கொள்ளவில்லை என்கிற வருத்தம் அவருக்கு நிறையவே உள்ளது. நமக்கும் அவ்வாறே தோன்றுகிறது.

நம் உடலுக்கு ஆரோக்கியத்தைத் தரும் பாரம்பரிய நெல்லான கிச்சடி சம்பா, கார் நெல் ரகங்களைப் புறம் தள்ளிவிட்டுப் பிணி தரும் பளபளப்பான இன்றைய வெள்ளை அரிசிகளை விரும்பி நாம் உண்ணுவது போல் இவரையும் இந்தத் தமிழ் உலகம் கண்டுகொள்ளாததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

பாரதிதாசன் வரலாற்றைப் புரட்டினால், கவிஞர் மறைவு வரை பொன்னடியான் என்கிற உதவியாளர் குடும்ப விசுவாசி எனப் பன்முகங்களோடு பயணிக்கிறார். அதேபோல் பொன்னடியானைப் படிக்கப் போனால் புரட்சிக்கவிஞர் வருகிறார்.

கவிஞர் முருகுசுந்தரம் தனது ‘பாவேந்தர் நினைவுகள்’ நுலின் ஆரம்பத்திலேயே எழுதுகிறார்...

“பாரதிதாசனைப் பார்ப்பதற்காக ஒருவித அச்சத்தோடு முதன்முதலாக அவரது இல்லத்திற்குச் செல்கிறேன். அவர் வீட்டின் முன்னால் உள்ள வரவேற்பறையில் ‘மெலிந்த ஒற்றை நாடி உடம்புக்கார இளைஞர்’ ஒருவர் சுறுசுறுப்பாய் எதையோ எழுதிக்

இரா. பொன்னாண்டான்

கொண்டிருக்கிறார். என்னைப் பார்த்ததும் 'யார்... என்னவேணும்' என்பது போல் பார்க்கிறார்."

'நான்... முருகுசுந்தரம். நான்...' என்று கூறுவதற்கு முன்பாகவே அவர் 'ஓ.. நீங்கள்தானா... தெரியுமே... உங்கள் பாட்டைக் குயிலில் அடிக்கடி பார்த்திருக்கிறேனே... நான்தான் பொன்னடியான்... இங்குக் கவிஞருக்குத் துணையாய் இருந்து பணியாற்றி வருகிறேன்' என்றார்.

மாணவப் பருவத்திலேயே பாவேந்தரைத் தம் வழித்தோன்றலாகக் கொண்ட பொன்னடியான், தனது இருபதாம் வயதில் முதன்முதலாகக் குளித்தலை நிகழ்ச்சி ஒன்றில் கவிஞரைச் சந்தித்தார். அதன்பின் அவர்களது சந்திப்பு அடிக்கடி நிகழ, பிறகு பாரதிதாசனோடு நிரந்தரமாகத் தங்க வைத்துவிட்டது.

பாரதிதாசன் நடத்திவந்த 'குயில்' பத்திரிகையில் வேலைக்குச் சேர்ந்தார். அவரது கவிதைகளைக் 'குயில்' பத்திரிகையில் வெளியிட்டுக் கவிஞர் அவர்கள் பொன்னடியானை மென்மேலும் எழுதத் துண்டினார்கள். அப்போது மிகுந்த சிரமத்திற்கிடையே தான் 'குயில்' பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. அவர்கள் இருவர் மட்டுமே சேர்ந்து பத்திரிகையைக் கொண்டு வந்தார்கள். அதைப் பற்றிப் பாரதிதாசனே ஒருமுறை குறிப்பிடும்பொழுது 'அங்கு நான் ஒருவன்; பொன்னடியான் ஒருவன்' என்று குறிப்பிட்டார்.

உலகக் கவிஞர்களை ஒன்று சேர்த்து ஓர் இயக்கமாக உருவாக்க நினைத்த பாரதிதாசன் 1962–இல் 'அனைத்துலகக் கவிஞர் பெருமன்றம்' என்ற அமைப்பைத் தொடங்கினார். அந்த மன்றத்திற்கு இன்றுவரை பொன்னடியான் பொதுச் செயலாளராக இருந்து வருகிறார்.

பாரதிதாசன் அவரது 'பாண்டியன் பரிசு' நுலை பாரதியாரின் வரலாற்றைத் திரைப்படமாக்க முயன்றபோது, அதற்கான நிறுவனத்தின் பொறுப்பாளராகப் பொன்னடியான் நியமிக்கப்பட்டார். பின்னாளில் பாரதிதாசனின் திரைப்பட முயற்சிகள் தோல்வியடைந்து விட்டன.

இவ்வாறாக, பாரதிதாசனுக்கும் பொன்னடியானுக்குமான தொடர்பு கவிஞரின் இறுதிக் காலம்வரை தொடர்ந்தது. கவிஞரின் எல்லாப் பணிகளுக்கும் பொன்னடியானே உறுதுணையாக இருந்தார்.


கவிதைகளோடும் கவிஞரோடும் வாழ்ந்துவந்த பொன்னடியான் அவரின் மறைவுக்குப் பின்னால் கவிதை, பத்திரிகை என்ற புதிய பரிமாணத்தை நோக்கிப் பயணம் செய்ய ஆரம்பித்தார். 'முல்லைச்சரம்' என்ற பத்திரிகையை 1966–இல் தொடங்கினார். புரட்சிக் கவிஞர் தோற்றுவித்த 'அனைத்துலகக் கவிஞர் பெருமன்றத்தை' வழிநடத்தினார். 'கடற்கரைக் கவியரங்கம்' என்ற புதிய முயற்சியை 1971–இல் தொடங்கினார்.

முல்லைச்சரம் : இன்றைக்குப் பிரபலமாக உள்ள பல கவிஞர்கள் முல்லைச்சரத்திலிருந்து முகிழ்த்தவர்கள் தாம். இவர்களது ஆரம்பப் படைப்புகள் இந்தக் குடிசை வீட்டிலிருந்துதான் புறப்பட்டன. கவிப்பேரரசு வைரமுத்து, மாலன், பாலகுமாரன், மஞ்சுளா ரமேஷ், பொன்மணி வைரமுத்து, பழநிபாரதி, ஜீவபாரதி என இந்தப் பட்டியல் நீளும்.

'முல்லைச்சரம்' பத்திரிகையை மிகச் செவ்வனே கடந்த 55 ஆண்டுகளாக நடத்தி வருகிறார். 'இந்த வாரக் கலாரசிகன்' என்ற பெயரில் தினமணி நாளிதழின் ஆசிரியர் திரு. கே.வைத்தியநாதன் கடந்த அக்டோபர் 2016 இதழில் இவ்வாறு எழுதுகிறார்:


"சில நிகழ்ச்சிகளுக்குப் போக வேண்டும் என்று மனது துடித்தாலும் வேலைப்பளுத் தடுத்துவிடுகிறது. அப்படிப் போக முடியாமல் போன நிகழ்ச்சிகளில் ஒன்று 'முல்லைச்சரம்' கவிதை இலக்கிய மாத இதழின் பொன்விழா நிகழ்வு. பாவேந்தரின் மறைவுக்குப் பிறகு அவரைப் போலவே இளம் கவிஞர்களை ஊக்குவிப்பதில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறார் பொன்னடியான். தொடர்ந்து அரை நுற்றாண்டுக் காலம் கவிஞர் ஒருவர் முழுக்க முழுக்கக் கவிதைக்காகவும், இலக்கியத்துக்காகவும் மாத இதழ்


கவிஞர் வாலி


பாலகுமாரன்


கவிஞர் புலமைப்பித்தன்


குன்னக்குடி வைத்தியநாதன்


கவியரசு கண்ணதாசன்

வெளிக்கொணர்வது என்பது எளிதானதல்ல.”

“யார் என்று தெரியாமலேயே, எந்த ஊர் என்று அறியாமலேயே இருந்த எனக்கும், என் படைப்புகளுக்கும் தொட்டில் கட்டித் தாலாட்டியவர் அண்ணன் பொன்னடியான்” என்கிறார் வார்த்தைச் சித்தர் வலம்புரிஜான்.

1967–இல் சிலப்பதிகாரம் பற்றிய கட்டுரைத் தொடர் ஒன்றை முல்லைச் சரத்தில் ஒருவர் புதிதாக எழுதி வருகிறார். பின்னாளில் அது புத்தகமாகத் தொகுக்கப்பட்டு வெளிவருகிறது. அந்தப் புத்தகத்தின் தலைப்பு ‘சிலம்பொலி.’ அவர்தான் பின்னாளில் பிரபலமான சிலம்பொலி செல்லப்பன்.

கடற்கரைக் கவியரங்கம் : இவரது பத்திரிகை வாயிலாக வெளியுலகிற்குப் பலர் தெரிய வந்ததுபோல், கடற்கரைக் கவியரங்கு மூலமாகவும் பலரை நமக்கு அறிமுகப்படுத்தினார்.

பின்னாளில் எழுத்தாளர் பாலகுமாரன் ‘கடற்கரைக் கவியரங்கில் முதன்முதலாக இவர் அளித்த வாய்ப்பை எழுத்துலகிற்கு எனக்குக் கிடைத்த முதல் சிம்மாசனமாகக் கருதுகிறேன்’ என்று தெரிவித்துள்ளார்.

திரு. கு.மா. பாலசுப்பிரமணியன், திருமதி சௌந்தரா கைலாசம், கா.மு. ஷெரிப், மருதகாசி, கண்ணதாசன், வாலி, புலமைப்பித்தன், வைரமுத்து, முத்துலிங்கம், வா.செ. குழந்தைசாமி, கு.சா.கிருஷ்ணமூர்த்தி, புத்தனேரி சுப்பிரமணியன், குன்னக்குடி வைத்தியநாதன், சுப.வீரபாண்டியன், பழநி பாரதி இவர்களெல்லாம் இவர் நடத்திய கவியரங்குகளில் கலந்து கொண்டவர்கள்.

“ஆடும் கடலலைகள் ஆனந்த
சுதி மீட்ட
பாடிவரும் தென்றல் பாவலரைத்
தாலாட்ட
கூடிவரும் கவியரங்கம் குன்றேறி
ஒளிவிடட்டும்”


என்று இவரது கடற்கரைக் கவியரங்கை கண்ணதாசன் பாடுகிறார்.

“காற்று வாங்கப் போனேன் ஒரு கவிதை வாங்கி வந்தேன்” என்று வாலி இதை மனதில் வைத்துத்தான் பின்னாளில் தான் பாட்டு எழுதியதாகச் சொல்லுவார்.

அனைத்துலகக் கவிஞர் பெருமன்றம் : பாரதிதாசனால் ஆரம்பிக்கப்பட்ட இம்மன்றத்திற்குப் பொதுச் செயலாளராக இருந்து இன்றுவரை நிர்வகித்து வருகிறார். 1967–ஆம் ஆண்டு பெரியார் திடலில் இதன் ஆண்டு விழாவை மாநாடு போல் நடத்தினர். அப்போது தமிழக முதல்வராக இருந்த அறிஞர் அண்ணா கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மேற்படி விழாவில் பொதுச் செயலாளர் என்ற முறையில் பொன்னடியான் படித்த தீர்மானங்களுக்குப் பதில் அளித்துப் பேசிய அண்ணா, ‘தலைநகரில் அறிஞர்கள், கவிஞர்கள் சிலை நிறுவுவோம். பாரதிதாசன் இல்லத்தை அரசுடைமையாக்குவோம்’ என்று அறிவித்து உலகத் தமிழ் மாநாடு மூலம் அவற்றை நிறைவேற்றினார்.

1975–ஆம் ஆண்டு சென்னை மயிலை கற்பகாம்பாள் திருமண அரங்கில் பெரிய மாநாடு நடத்தப்பட்டது. அன்றைய முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், ஆளுநர் கே.கே. ஷா முதலிய பெருமக்களும், கவிஞர்களும் கலந்து கொண்டார்கள். இந்த விழாவில் பல அறிஞர்களுக்குச் சிறப்பு விருதுகளும் கேடயங்களும் வழங்கப்பட்டன.

அந்த மாநாட்டில் ‘மேலவை உறுப்



பினர்களாக, அரசவைக் கலைஞர்களாகக் கவிஞர்களை நியமிக்க வேண்டும். பாரதி, பாரதிதாசன் பெயரால் பொற்கிழியுடன் கூடிய விருதுகள் வழங்கப்பட வேண்டும் என்பன போன்ற வேண்டுகோள்கள் அடங்கிய தீர்மானங்களைப் பொதுச் செயலாளர் என்ற முறையில் கவிஞர் பொன்னடியான் வாசித்தார். அதே மேடையில் முதல்வர் கலைஞர், ஆளுநர் கே.கே.ஷா இருவரும் மேற்படி தீர்மானங்களை நிறைவேற்று வதாக உறுதியளித்தனர்.

அதன் விளைவே இன்று பாரதி, பாரதிதாசன், திரு.வி.க. முதலியோர் பெயரில் பொற்கிழியோடு அறிவிக்கப் படும் விருதுகள். இப்படிப் பல வழிகளில் பாவேந்தரின் எண்ணங்கள், ஆசைகள் நிறைவேறக் காரணமாக இருந்தார். இதே பெருமன்றத்திற்குக் கவியரசு கண்ணதாசன் தலைவராக இருந்தார்.

திரைப்படப் பாடல்கள் : பாரதிதாசன் தனது பாண்டியன் பரிசைத் திரைப்படமாக்க முயற்சித்த போதே, அப்போது அவருக்கு உதவியாளராக இருந்த பொன்னடியான் திரைப்படப் பாடல்கள் எழுத முனைந்தார். ஜி.கே. வெங்கடேஷ் இசையமைத்த 'நெஞ்சிலே ஒரு முள்' திரைப்படம் மூலம் திரைப் படப் பாடலாசிரியராக அறிமுகமானார். அதன்பின் எம்.எஸ். விஸ்வநாதன், இளையராஜா, வி.குமார், சந்திரபோஸ், தேவா ஆகியோரின் இசையிலும் பாடல்கள் எழுதியுள்ளார். அவர் எழுதி ஹிட்டான சில படங்களும், பாடல்களும்.

"ராஜாதி ராஜா" – 'எங்கிட்ட மோதாதே நான் ராஜாதி ராஜனடா.'

"என் ராசாவின் மனசிலே" – 'போடா போடா புண்ணாக்கு.., போடாதே தப்புக் கணக்கு.'

"ஒருவர் வாழும் ஆலயம்" – 'மலையோரம் மயிலே... விளையாடும் குயிலே...'

"எல்லாமே என் ராஜாதான்" – வடிவேலு பாடிய 'எட்டணா இருந்தா... எட்டூருக்கென் பாட்டுக் கேட்கும்.'

இந்தப் பட்டியலும் நீளும். கவிஞர் பொன்னடியான் 'எனக்கு இலக்கண இலக்கியங்களைக் கற்பித்தார். அவை எனக்குப் பிற்காலத்தில் நான் பாடல்கள் எழுதுவதற்கும், வெண்பா மற்றும் கவிதைகள் புனைவதற்கும் உதவியாக இருந்தன என்று இசைஞானி இளையராஜா ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கவிதைத் தொகுப்புகள் : இவர் தனிக் கவிதைகள் ஏராளமாக எழுதியுள்ளார். 'பனிமலர்', 'ஒரு இதயத்தின் ஏக்கம்', 'ஒரு கைதியின் பாடல்கள்', 'பறக்கத் தெரியாத பட்டாம்பூச்சிகள்', 'நினைவலைகளில் பாவேந்தர்' முதலிய இவரின் கவிதை உரைநடை நூல்கள் 20–க்கும் மேல் வெளிவந்துள்ளன.

"ஒரு புல்முனை அளவான தீப்பொறி கிடைத்தாலும் பூமிக்கு ஒளி ஊட்டுவேன் – சிறு நெல்மணி கிடைத்தாலும் அதையே நான் விளைவாக்கி நிலமகள் பசி போக்குவேன்" என்று கவிஞர் பொன்னடியான் சூளுரைக்கிறார்.

இவரது 'நினைவலைகளில் பாவேந்தர்' நுலைப் பற்றி 30.8.2020 'தினமணி' நாளிதழில் கலாரசிகன் 'பாரதிதாசன் குறித்து ஆய்வு மேற்கொள்பவர்களால் தவிர்க்க முடியாத ஆவணப் பதிவு' என்கிறார்.

தமிழக அரசின் விருதுகளையும், தனியார் நிறுவன இலக்கிய விருதுகளையும் பொன்னடியான் பெற்றுள்ளார்.

பாவேந்தர் பாரதிதாசன் விருது (1990), கலைமாமணி விருது (2003), மகாகவி பாரதியார் விருது (2016), சி.பா. ஆதித்தனார் இலக்கியப் பரிசு (2003), தினத்தந்தி பொன்விழா விருது (1993) இவை இதில் அடங்கும்.

'பாவேந்தர் ஒரு பரம்பரையை உருவாக்கினார். பொன்னடியான் ஒரு தோப்பையே உருவாக்கினார்' என்று இவருக்குப் புகழாரம் சூட்டுகிறார் பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார்.

இன்றுவரை ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் கவிஞர் பொன்னடியான் பாவேந்தர் எனும் வரலாற்றுப் புத்தகத்தின் தவிர்க்க முடியாத பக்கங்கள் என்றே சொல்லலாம். இதுபோன்ற வரலாற்றுப் பொக்கிஷங்களைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். ●

கீழடி ஆய்வாளரின் இடமாற்றத்திற்குக் காரணம் என்ன?



கி.மு. 300 தொடங்கி கி.பி. 300 வரையில் என்கிற சங்க கால அளவை கி.மு. 650–க்கு முன் பின்னோக்கிக் கொண்டு போனது கீழடி அகழாய்வு.

குவிரன், ஆதன் என்கிற தமிழ்ப் பெயரைத் தாங்கிய பானை ஒடுகள் கீழடியில் கிடைத் துள்ளன. செங்கற்களால் ஆன நகரமயமாக்கம் தென்னிந்தியாவில் இருந்திருக்கிறது என்பதற்கும் கீழடிதான் தொடக்கமாக உள்ளது. தற்போது கீழடியில் இருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் முதுமக்கள் தாழிகள் எனப்படுகின்ற இடுகாடு களின் இடங்களில் இறந்தவர்களின் எலும்புக் கூடுகள் கண்டறியப்பட்டிருக்கின்றன.

இந்தியாவில் இருந்த ஆதிகுடிகள் யார்...? சிந்து சமவெளி நாகரிகத்தை அல்லது ஹரப்பா நாகரிகத்தை உருவாக்கியவர்கள் யார்? ஆரியர் கள் உண்மையிலேயே வெளியிலிருந்து இந்தியா வுக்கு இடம்பெயர்ந்து வந்தவர்கள்தானா? என்கிற கேள்விகளுக்கெல்லாம் இன்றைய மரபணு ஆய்வுகள் தக்க சான்றுகளுடன் விடையளித்துக் கொண்டிருக்கின்றன.

கீழடி வைகை நதிக்கரை நாகரிகம் சிந்து சமவெளி நாகரிகத்திற்கான தொடர்பா என்கிற கேள்விக்கான விடைக்குள் இருக்கும் கால வேறு பாடு கி.பி. 1000 முதல் 1600 ஆண்டுகள் மட்டுமே. சிந்து சமவெளி நாகரிகம் முடிவுக்கு வருகிற காலமும் தற்போது கீழடியில் கிடைக்கப்பெற்ற தொல்லியல் எச்சங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டவையாகவே உள்ளன என்பதைக் கீழடி யில் கிடைத்த எழுத்துக் குறியீடுகள் உணர்த்து கின்றன,

இந்தியத் தொல்லியல் துறையானது இதனை முழுமையாக ஆராயாமல் அகழாய்வுக் குழிகளை மூடிவிட்டுச் சென்றதற்குக் காரணமே, பூர்வீக மக்கள் யார்? என்பது வெளிப்படும் என்பதால், மத்தியத் தொல்லியல் துறை கீழடியை விட்டு நடையைக் கட்டியது.

இந்தியத் தொல்லியல் துறைக் கண்காணிப் பாளர்களாக இருந்த ஆர்.எஸ். பிஷ்ட், குஜராத்தில் 15 ஆண்டுக் காலம் தொடர்ந்து அகழாய்வு செய் திருக்கிறார். அதேபோல ஏ. சுப்பிரமணியன் ஆந்திராவில் நாகார்சுன கொண்டா என்னும் இடத்தில் 10 ஆண்டு களும், கே.பி. பூணாச்சா கர்நாடகாவில் 10 ஆண்டு களும், பி.பி. லால் ராஜஸ் தானில் 7 ஆண்டுகளும், எஸ்.ஆர். ராவ் குஜராத்தில் 6 ஆண்டுகள் எனத் தொடர்ந்து தொல்லியல் துறைக் கண்காணிப்பாளர் பொறுப்பில் இருந்து ஒரே இடத்தில் மாறுதலுக்கு ஆளாகாமல் ஆய்வு செய்துள்ளனர். இந்தியத் தொல்லியல் துறை தொடங்கிய 1861–ஆம் ஆண்டு முதல் தற்போது தான் ஒரு சட்டத் திருத்தம் செய்து அமர்நாத் ராமகிருஷ்ணாவை இடம் மாற்றினர்.



2016 செப்டம்பரில் இடமாற்றம் செய்வதற் கான விதிகள் (Ordinance) உருவாக்கப்படுகிறது. மூன்றாம் கட்ட அகழாய்வு அனுமதிக்காக அப் போது அமர்நாத் காத்திருக்கிறார். 2017 பிப்ரவரி யில் அனுமதி வழங்கப்படுகிறது. அடுத்த ஒரு மாதத்தில் அதாவது மார்ச்சில் அமர்நாத் அசா மிற்கு மாற்றப்படுகிறார்.

'எந்த வகையில் இந்த இடமாற்றம் நியாய மானது?' என மத்திய அரசு ஊழியரின் தீர்ப்பாயம் மட்டுமல்ல, மதுரை உயர்நீதிமன்றக் கிளையும் கேட்டது. ஆனால் எந்தப் பதிலும் இதுவரையில் இல்லை. தமிழ் நாட்டில் மட்டுமல்ல, தென்னிந் தியப் பகுதிக்கே வரவிடாமல் தற்போது கோவா மாநிலத்திற்கு அவரை இடமாற்றம் செய்திருக்கிறது.

கீழடி அகழாய்வைத் தொடங்கி வைத்த அமர்நாத் ராமகிருஷ்ணாவை மீண்டும் கீழடியில் பணியாற்ற அனுமதிக்க வேண்டும். பிரதமர் நரேந்திர மோடி நேரடியாக இதில் கவனம் செலுத்தித் தமிழரின் தொன்மை வரலாறு முழுமையாக வெளிச்சத்திற்கு வருவதற்கு உதவ வேண்டும். பிரதமர் தாம் செல்லும் இடங்களில் திருக்குறளையும், தமிழின் தொன்மை குறித்தும் பேசி வருகிறார். அதற்கேற்பத் தமிழக மக்களின் விருப்பத்திற்கு இணங்க, இந்தியத் தொல்லியல் துறையினை மீண்டும் கீழடிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

– நீ.சு. பெருமாள்

கட்டுரை

கம்பர் காட்டும் பண்பாடு

பதினெண்கீழ்க்கணக்கு நுல்கள் பதினெட்டனுள் ஐந்திணை நுல்கள் நான்கினுந் தலைசிறந்து விளங்குவது ‘திணைமாலை நூற்றைம்பது.’

இந்நுலின்கண் தொல்காப்பியர் கண்ட பல அரிய அகப்பொருள் துறைகள் செம்மணிகளெனத் திகழ்கின்றன. குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் எனப் பகுத்து, ஒவ்வொரு பகுப்பின் கண்ணும் முப்பது பாக்களாக ஐந்து பகுப்புகளிலும் நூற்றைம்பது பாக்களைக் கொண்டு திணைமாலை நூற்றைம்பது என்ற பெயருக்குப் பொருந்துமாறு விளங்குகின்றது.

இந்நுலின் கண்ணுள்ள பாலைத் திணையில் ஆசிரியர் கணிமேதாவியார் தந்துள்ள பாடல்,

“நண்ணிநீர் சென்மி னமரவ ராபவே
லெண்ணிய வெண்ண மெளி தரோ – வெண்ணிய
வெஞ்சுட ரன்னானை யான் கண்டேன் கண்டாளாந்
தண்சுட ரன்னாளைத் தான்”

உடன்போக்கினை மேற்கொண்ட தலைவன் – தலைவியைத் தேடிப் பாலைநில வழியே சென்ற செவிலித் தாய், எதிரே வந்த கணவன் – மனைவியைக் கண்டாள். அவர்களிடம் ‘நீர் வந்த வழியில் எனது மகள் காளை ஒருவனுடன் செல்வதைக் கண்டீரோ?’ என வினவ, ‘நீர் கருதிக் கொண்டு தேடி வருகின்ற வெய்ய பகலோனன்னானை எதிரே போகப் பார்த்தேன். குளிர்ந்த மதியையொத்த மாதரசியை இவள் எதிராகப் பார்த்தாளாம்’ என்று அருகில் நின்ற மனைவியைக் காட்டினான்.


கம்பர்

எதிரே வந்த பெண்ணை அவள் பார்க்க, அவளருகில் வந்த ஆடவனை அவள் பார்க்கவில்லை. அவன் பார்த்தான். இதனையே இப்பாடலில் கணிமேதாவியார் கூறுகிறார். இங்கே கூறிய ஆடவன் பிறன்மனை நோக்காப் பேராண்மையுடையவனாகலின் தன் மனைவியைத் தவிர வேறு பெண்ணை ஏறெடுத்தும் பாராதவன். ஆதலின் எதிரே வந்த பெண்ணை அவன் பார்க்கவில்லை.

இப்பாடல் சொல்லும் பண்பாடு தமிழினம் கைக்கொண்டு ஒழுகிய உயர்ந்த பண்பாடாகும். எனவேதான் வள்ளுவப் பேராசான் பிறன்மனை நோக்காத உயர்ந்த ஒழுக்கத்தைப் ‘பேராண்மை’ என்று போற்றினார்.

பனிரண்டாம் நுற்றாண்டில் கவிச்சக்கரவர்த்தி கம்பர் ராமாயணத்தை இயற்றினார். வடதிசையில் நடந்ததாகக் கதையைக் கூறினாலும் நூல் முழுவதும் தமிழினத்தின் பண்பாட்டைச் சொல்வதாகவே கதைப் போக்கினை அமைத்துள்ளார், அம்மாக்கவி.

மேலும் தமிழ்ப் பண்பாட்டை நூல் முழுவதும் கையாண்டு சிறப்பித்துள்ளார். திருக்குறள், திணைமாலை நுற்றைம்பது முதலிய நூல்களைக் கற்றறிந்த மாக்கவி கம்பர். எனவே, அத்தகைய நூல்களில் சொல்லியுள்ள உயர்ந்த தமிழ்ப் பண்பாட்டை ராமாயணத்தின் பற்பலவிடங்களில் கையாண்டு சிறப்பித்துள்ளார்.

ப. சோமசுந்தர வேலாயுதம்



இராமனுக்கு நடைபெற இருந்த முடிசூட்டு விழா நடைபெறாது போனது. இராமன் சீதாப்பிராட்டி யுடன் காடேகினான். இது எதுவும் அறியாது தாய்வழிப் பாட்டன் நாட்டி லிருந்து அயோத்திக்குத் திரும்பி வந் தான் பரதன். நடந்த நிகழ்வுகளை அறிந்து 'நீர்அறாத கண்ணினன்' ஆகினான்.

பின்னர் நகர மக்களை உடன் அழைத்துக் கொண்டு இராமனைச் சந்தித்து, அயோத்திக்கு அழைத்து வந்து முடிசூட்ட எண்ணி இராமன் உறையும் காடு ஏகினான். செல்லும் வழியில் கங்கைக் கரையில் குகனைச் சந்தித்தான். அங்குத் தங்கியிருந்து பின்னரே இராமன், இலக்குவன், சீதை மூவரும் வனம் சென்றனர் என்பதையும் அறிந்து கொண்டான்.

அண்ணன் இராமனும் அண்ணி சீதையும் தர்ப்பப் புல்லைக் கல்லின் மேல் பரப்பித் துயின்று இரவைக் கழித்தனர் எனக் குகன்வழி அறிந் தான். தன்னாலன்றோ அண்ணன் அண்ணிக்கு இத் துன்பம் நேர்ந்தது எனப் பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான்.

இராமனும் சீதையும் இரவைக் கழித்தபோது இலக்குவன் யாது செய்து கொண்டு இருந்தான் என்று பரதன் மேலும் வினவ, குகன் சொல்வ தாகக் கம்பர் தரும் கவி,

"அல்லை ஆண்டு அமைந்த மேனி
அழகனும் அவளும் துஞ்ச
வில்லை ஊன்றிய கையோடும்
வெய்து உயிர்ப்போடும் வீரன்
கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்
கண்கள் நீர் சொரிய கங்குல்
எல்லை காண்பு அளவும் நின்றான்
இமைப்பிலன் நயனம் என்றான்"

'மலையைக் கீழ்ப்படுத்திய உயர்ந்த தோள்களை உடைய இருளை ஒத்த கரிய திருமேனியையுடைய அழகிற் சிறந்த இராமனும் அவளும் (அந்தப் பிராட்டியும்) கல்லின் மேல் பரப்பிய புல்லில் உறங்க, இலக்குவன் வில்லின் மேல் வைத்த கையுடன் வெப்பமான மூச்சுடையவனாய்த் தன்னிரண்டு கண்களும் நீரைச் சொரிய முடிவான விடியலைப் பார்க்குமளவும் இமை கொட்டாமல் உறங்காத கண்களுடன் நின்று கொண்டே காவல் செய்தான்' என்றான்.

கங்குல் பகல் இலக்குவன் காத்த மையை இராமன் மீது கொண்ட பேரன்பினால் குகனும் இரவு முழுவ தும் விழித்திருந்து நோக்கினான் என் பது கவி சொல்லாமலே தெரிய வருகிறது.

'அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகன்' என்றெல்லாம் இராமனை வருணனை செய்த குகன், சீதாப் பிராட்டியை அவள் என்று மட்டும் சொல்லி முடித்துக் கொண்டான். சீதை பிறன் மனைவி என்பதால் அவளை ஏறெடுத்தும் குகன் காணவில்லை என் பதையும், பிறன் மனைவியின் அழகை வர்ணிப்பதும் தவறு என்னும் தமிழ்ப் பண்பாட்டைத் தழுவி நின்றான் குகன் என்பதையும் கம்பர் சொல்லி முடித்தார்.

எனவே 'அவள்' என்ற ஒரே வார்த்தை மட்டும் குகனது வாயி லிருந்து வந்தது. வள்ளுவர் கூறிய பிறன்மனை நோக்காத பேராண்மை கொண்டவன் குகன் என்பது கம்பர் கூறாமல் நமக்குக் கூறியது என்னும் நயம் பாராட்டத்தக்கது.

இவ்வாறு, தான் இயற்றிய ராமா யணத்தில் தமிழ்ப் பண்பாட்டை நூல் முழுமையும் கைக்கொண்டு தமிழினத்திற்குச் சிறப்பு செய்துள்ளார் கம்பர். ●

இந்த ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு சரிவா? செறிவா?



நோபல் பரிசு என்பது சுமார் ரூ. 8 கோடிக்குக் குறையாமல் பணமும், சிறப்பு விருதும் உள்ள பரிசாகும். இதற்கான தேர்வுக் குழு மிக மிகக் கவனமாக இப்பரிசைத் தெரிவு செய்கிறது. மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், இலக்கியம், அமைதி எனப் பல துறைகளின் வல்லுநர்களுக்கு ஆண்டுதோறும் இவை வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால், ஆச்சரியம் பொருளாதாரம், இலக்கியம் ஆகிய இரு துறைகளுக்கு வழங்கப்படும் இப்பரிசுகள் சரியானவையா என நினைக்குமாறும் சில உள்ளன.

சென்ற 2019–ஆம் ஆண்டு பொருளாதார நோபல் பரிசு, மூன்று அமெரிக்கர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் அபிஜித் பானர்ஜி, எஸ்தர் டுப்லோ ஆகியோர் கணவன் – மனைவி. மூன்றாமவர் மைக்கேல் கிரேமர். இம்மூவரில் அபிஜித் பானர்ஜி வங்காளி.





லூயிஸ் க்ளக்

வறுமை ஒழிப்பிற்கு இவர்கள் கண்டறிந்த புதிய ஆய்வு ஆர்.சி.டி. (RCT - Randomized Controlled Trails) என்ற ஆய்வு முறையாகும்.

ஆர்.சி.டி. ஆய்வு முறை எனப்படுவது குலுக்கல் முறையில் (Random) தேர்வு செய்யப்படும் திட்டமாகும். இந்தத் திட்டம் கட்டுப்படுத்தப்பட்ட சோதனைகளுக்கு உட்பட்டது. இதைப் புரிந்து கொள்ள ஓர் உதாரணம்:

மருந்துக் கம்பெனிகள் புதிய புதிய மருந்துகளைக் கண்டுபிடித்து வெளியிடுகின்றன. அந்த மருந்துகளின் தரத்தைச் சோதனை செய்ய இந்த ஆய்வு முறை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. எப்படி?

நோயாளிகளுக்குத் தெரியாமலேயே நோயாளிகளைத் தேர்வு செய்து, இரண்டு பிரிவுகளாக அந்த நோயாளிகளைப் பிரிப்பார்கள். ஒரு பிரிவிற்கு ‘கன்ட்ரோல் குரூப்’ (Control - C) என்று பெயர். இன்னொரு பிரிவிற்கு ‘ட்ரீட்மென்ட் குரூப்’ (Treatment - T) என்று பெயர்.

இந்த இரு பிரிவினருக்கும் மருத்துவம் பார்க்கிற டாக்டர்கள் இருப்பார்கள். மருத்துவர்களுக்குத் தெரியாமலேயே அந்த மருத்துவர்களும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதைத்தான் ‘கட்டுப்படுத்தப்பட்ட ஆய்வு’ என்கிறார்கள்.

‘T’ குரூப் நோயாளிகளுக்குச் சரியான மாத்திரைகள் தரப்படுகின்றன. இதே போல ‘C’ குரூப் நோயாளிகளுக்கும் மாத்திரைகள் தரப்படுகின்றன. இந்த மாத்திரைகள் போலி மாத்திரைகள்.

குறிப்பிட்ட சில நாட்களுக்குப் பிறகு இரண்டு

பிரிவு நோயாளிகளும் சோதனை செய்யப்படு வார்கள். அவ்வாறு செய்யப்படும்போது T குரூப் நோயாளிகள் குணமடைந்திருப்பார்கள். போலி மாத்திரைகளைச் சாப்பிட்ட C குரூப் நோயாளி களுக்கு எந்த குணமும் ஏற்பட்டிருக்காது.

இதிலிருந்து, T குரூப் நோயாளிகளுக்குத் தரப்பட்ட மாத்திரைகள் உண்மையிலேயே வீரியம் நிறைந்த, பயனளிக்கிற மாத்திரைகள் என்ற முடிவு எடுக்கப்படுகிறது. 1940–இல் செய்யப்பட்ட இந்தச் சோதனையை, 1970–இல் அமெரிக்கப் பொரு ளாதார நிபுணர் ஜோஷ்வா ஆங்கிரிஸ்ட் என்பவர் தமது துறையிலும் கையாண்டார்.

இதில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம், **பேராசிரியர் ஆங்கிரிஸ்ட் என்பவர், அபிஜித் பானர்ஜியின் மனைவி டுப்லோயின் ஆசிரியர்.** நோபல் பரிசு பெற்ற மூன்று அறிஞர்களும் தங் களது ஆய்வுகளுக்கு ஆசிரியரின் முறையையே பயன்படுத்தி நோபல் பரிசைப் பெற்றிருக்கிறார்கள்.

நோபல் பரிசு தரப்பட்ட இந்த ஆய்வுமுறை பலருடைய விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. அவர்களில் குறிப்பிடத் தக்கவர், மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பொருளாதார நிபுணர் டாக்டர் செள. புஷ்பராஜ். ‘முழுமை அறிவியல் உதயம்’ – 2020 பத்திரிகையில் அதைப் பற்றி விமர்சித்துக் கட்டுரையும் எழுதியுள்ளார்.

இம்முறையை விளக்க இன்னொரு உதார ணம் தரப்பட்டுள்ளது : மலேரியாக் காய்ச்சலை ஒழிக்க, மலேரியாக் கொசுவை ஒழிக்க வேண்டும். கொசுவை ஒழிக்கக் கொசு வலையைக் கொடுக்க லாம். கொசுவலை வாங்க வசதியில்லையெனில், அவர்களுக்கு இலவசமாகக் கொடுக்கலாம் அல் லது மானிய விலையில் தரலாம்.

மலேரியாக் காய்ச்சலிலிருந்து எத்தனை பேர் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதை நிர்ண யிக்க, இலவசக் கொசு வலை மூலம் காப்பாற்றப் பட்டவர் அதிகமா? மானிய விலையில் வாங்கிய கொசு வலையால் காப்பாற்றப்பட்டவர் அதிகமா? என்பதை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

அதிகமான பேர்கள் எதனால் காப்பாற்றப் பட்டிருக்கிறார்களோ, அந்த முறையே சிறந்த முறை என நிர்ணயிக்கப்படுகிறது.

நோபல் பரிசு தரப்பட்ட இந்த ஆய்வுமுறை களைப் பரிசீலித்தால், இவை ஆழமானவைகளாக இல்லை. மக்களுக்குப் பயன் தராத ஆய்வுமுறை களாகவும் உள்ளன என்றும் புரிந்துகொள்ள முடிகிறது. இது நடந்தது சென்ற ஆண்டு.

இந்த ஆண்டு அறிவியல் நோபல் பரிசு, பிரபஞ்சத்தில் கருந்துளைகள் உள்ளன என்ப தைக் கண்டுபிடித்த ரோஜர் பென்ரோஸ், ரெயின் ஹார்டு, ஆண்ட்ரியா கெஸ் ஆகிய மூவருக்கும் தரப்பட்டது. கருந்துளைகளைப் பற்றி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் வரை தெரியாது. இயற்பியலில் உயர் வான கண்டுபிடிப்புக்குப் பரிசு தரப்பட்டுள்ளது. இதே தரத்தில் இலக்கிய நோபல் பரிசு இருக் கிறதா எனப் பரிசீலிப்பது தவறாகுமா?

அமெரிக்கப் பெண் கவிஞர் லூயிஸ் எலிசபெத் க்ளக் என்பவருக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு இந்தாண்டுத் தரப்பட்டுள்ளது. அவருடைய படைப்புகள் உயர்தரமானவையாகத்தான் இருக்க வேண்டும் என நினைத்து, அவற்றை வாசித்துப் பார்த்தால் ஏமாற்றமாக இருக்கிறது.

பாப்லோ நெருடாவை மொழிபெயர்த்துத் தமிழுக்குத் தந்த எழுத்தாளர் ப. குணசேகர், இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்ற கவிஞ ரின் கவிதைகள் சிலவற்றை, தமிழில் அவரே தந்துள்ளார். அவற்றை வாசித்துப் பார்த்தால் ஏமாற்றமாக உள்ளது.

தமிழ்நாட்டின் கவி ஆளுமைகளான அப்துல் ரகுமான், சிற்பி, ஈரோடு தமிழன்பன், புவியரசு, மீரா போன்றவர்கள் படைத்துள்ள கவிதைகள், காலவெள்ளத்தில் எதிர்நீச்சல் போட்டுக் கரை யேறியுள்ள கவிதைகளாகும். இவை தமிழில் உள்ளன. இவை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்குமானால், நோபல் கவிஞர் லூயிஸ் க்ளக் அவர்களின் படைப்புகளைவிடப் பல மடங்கு உயர்வானவை என்பதை எவரும் ஒப்புக் கொள்வார்கள்.

எத்தனையோ அழகான ஆங்கிலக் கவிதை களை நாம் வாசித்திருக்கிறோம். உதாரணத்திற்கு:–

கவிஞர் ஷெல்லி "I fall upon the thorns of life I bleed" என்று ஒரு கவிதையில் கூறுவார்.



கவிஞர் ஷெல்லி

“வாழ்க்கைப் பாதையில் உள்ள
முட்களில் கிடக்கும் எனது தேகம்
முழுவதிலிருந்தும்

கசிகிறது ரத்தம்!”

இக்கவிதையின் ஆங்கில வரியும் தமிழ் விளக்கமும் நமது உள்ளத்தைத் தைக்கிறது. அந்த முட்களும் ரத்தமும் அடையாளப்படுத்துகிற மறை பொருளானது, கவிஞரின் சோகத்தில் நம்மையும் பங்குபெறச் செய்கிறது. இப்படிப்பட்ட அழகியல் நிரம்பிய வரிகளை, நமது தமிழ்க் கவிஞர்கள் ஏராளமாக எழுதியிருக்கிறார்கள். எடுத்துச் சொன்னால் விரியும். தமிழ்க் கவிஞர்களோடு இந்த ஆண்டு நோபல் கவிஞரை ஒப்பிட்டால், பலாச் சுளைகளோடு களாக்காய்களை ஒப்பிட்ட உணர்வே ஏற்படுகிறது.

‘நோபல்’ அமைப்போ மிகப் பெரியது. இதை விமர்சிப்பவனோ இலக்கியத்தில் ஒரு பாமரன். ஏழை சொல் எந்தக் காலத்தில் அம்பலமேறியிருக்கிறது?



இதுவரை 40 நூல்களைத் தமிழில் எழுதியவர் எழுத்தாளர் ப. குணசேகர். தமிழ்மொழியில் ஆளுமையும், அதற்குச் சமமாக ஆங்கிலத்தில் புலமையும் உள்ளவர். இவருடைய ஆளுமையும் புலமையும் வாசகனின் இதயத்தை மயில் இறகால் வருடிவிடக் கூடிய சுகத்தைத் தரக் கூடியவை.

கவிஞர் லூயிஸ் க்ளக் அவர்களின் ‘October’ என்ற பிரபலமான கவிதையையும் வேறு சில கவிதைகளையும் அவர் மொழியாக்கம் செய்துள்ளார்.

October

It is winter again, is it cold again,
did’t Frank just slip on the ice,
didn’t he heal, weren’t the spring seeds planted

didn’t the night end,
didn’t the melting ice
flood the narrow gutters

wasn’t my body
rescued, wasn’t it safe

didn’t the scar form, invisible
above the injury

terror and cold,
didn’t they just end, wasn’t the back garden
harrowed and planted -

I remember how the earth felt, red and dense,
in stiff rows, weren’t the seeds planted,
didn’t vines climb the south wall

I can’t hear your voice
for the wind’s cries, whistling over the bare ground

I no longer care
what sound it makes

அக்டோபர்

“மீண்டும் வந்ததோ வாட்டும் வாடைக்காலம்
மீண்டும் வந்ததோ குளிர்
பனிக்கட்டி மீது சிறுவன் விழவில்லையா?
காயத்திலிருந்து குணமடையவில்லையா?
இரவு முடிவிற்கு வரவில்லையா?
குறுகிய சாக்கடைகளில் உருகும்
பனிவெள்ளம் ஓடவில்லையா?
எனது உடல் மீட்கப்படவில்லையா?
காயத்தின் மீது கண்ணுக்குத்
தெரியாத வடு தோன்றவில்லையா?
அச்சமும் பீதியும் குளிரும் அகலவில்லையா?
கொல்லைப்புறத் தோட்டம் பண்படுத்தவில்லையா?
விதைகளைத் தூவவில்லையா?
தெற்குப்புற மதில்மீது
திராட்சைக்கொடிகள் மேலேறவில்லையா?
உனது குரலைக் கேட்கவில்லை; ஓலமிடும் காற்று
நிலம்மீது சீழ்க்கை அடிக்கவில்லையா?

When was I silenced, when did it first seem
pointless to describe that sound

waht it sounds like can't change what it is -

didn't the night end, wasn't the earth
safe when it was planted

didn't we plant the seeds,
weren't we necessary to the earth

எப்போது எனது குரல் ஒடுங்கியது ஓசை அடங்கியது

மாற்றமுடியாத ஓசை தோன்றவில்லையா?

இரவு முடிவுக்கு வரவில்லையா?

விதைப்பின் போது பூமியைப் பாதுகாக்கவில்லையா?

விதைக்க பூமிக்கு நாம் தேவையில்லையா?

இந்த மொழியாக்க வரிகளை வாசித்தால், அள்ளிஅள்ளி அமிர்தத்தைச் சாப்பிட்டதைப் போலத் தெய்வீக ருசி ஏனோ தென்படவில்லை என்பது தெரிகிறது. ஒருவேளை உங்களுக்குத் தெரியுமானால் கூறுங்கள்.

இத்தருணத்தில் இலக்கியத்திற்கான நோபல் பரிசு 2017–இல் நிறுத்தப்பட்டுள்ளதையும் நினைவு கூரலாம்.

லூயிஸ் க்ளக் 12 கவிதைத் தொகுதிகளையும், இரண்டு கட்டுரைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார். அவருடைய பல்வேறு விருதுகளில் 'லாஸ் ஏஞ்சல்ஸ் விருது', 'புத்தகப் பரிசு விருது', 'புலிட்சர் விருது', 'போலிஸ்டர் விருது', 'ராக் பெல்லர் விருது' குறிப்பிடத்தக்கவை. தமது 77–வது வயதில் நோபல் பரிசும் பெற்றுள்ளார்.

1940–களில் நோபல் பரிசு தரப்பட்ட தாகூரின் 'கீதாஞ்சலி' கவிதையோடு, லூயிஸ் க்ளக் கவிதைகளை ஒப்பிட்டுப் பார்த்தால், வேறுபாட்டை உணரலாம்.

எழுத்தாளர் ப. குணசேகர் கவிஞர் லூயிஸ் க்ளக் அவர்களின் படைப்புகள் பலவற்றை ஆங்கிலத்தில் அப்படியே அனுப்பியுள்ளார். அந்த ஆங்கிலக் கவிதைகளில் மூன்று கவிதைகளை மட்டும், வாசகர்கள் ஆங்கில மொழியிலேயே வாசித்துச் சுவைக்கட்டுமென வெளியிட்டுள்ளோம்.


அபிஜித் பானர்ஜியும்
எஸ்தர் டுப்லோயும்

1. Snow 2. Odysseus' Decision 3. The Drowned Children.

Snow - 1

Late December : my father and I
are going to New York, to the circus.
He holds me
on his shoulders in the bitter wind :
scraps of white paper
blow over the railroad ties.

My father liked
to stand like this, to hold me
so he couldn't see me.
I remember
staring straight ahead
into the world my father saw;
I was learning
to absorb its emptiness,
the heavy snow
not falling, whirling around us.

- Louise Gluck

Odysseus' Decision - 2

The great man turns his back on the island.
Now he will not die in paradise
nor hear again
the lutes of paradise among the olive trees,
by the clear pools under the cypresses. Time
begins now, in which he hears again
that pulse which is the narrative
sea, at dawn when its pull is strongest.
What has brought us here

will lead us away; our ship
sways in the tinted harbor water.
Now the spell is ended.
Give him back his life,
sea that can only move forward.

- Louise Gluck

The Drowned Children - 3

You see, they have no judgement.
So it is natural that they should drown,
first the ice taking them in
and then, all winter, their wool scarves
floating behind them as they sink
until at last they are quiet.
And the pond lifts them in its
manifold dark arms.

But death must come to them differently,
so close to the beginning.
As though they had always been
blind and weightless. Therefore
the rest is dreamed, the lamp,
the good white cloth that covered the table,
their bodies.

And yet they hear the names they used
like lures slipping over the pond :
What are you waiting for
come home, come home, lost
in the waters, blue and permanent.

- Louise Gluck

வாசகர்கள் இந்த மூன்று ஆங்கிலக் கவிதை களையும் வாசிக்கலாம். விருப்பமுள்ளவர்கள் தமிழில் மொழியாக்கம் செய்வார்களேயானால், அவற்றை அனுப்பி வைக்கலாம். தேர்வு செய்யப் பட்டத் தரமான மொழிபெயர்ப்புக் கவிதைகளை வெளியிடவும் உள்ளோம்.

நோபல் பரிசு பெற்ற இக்கவிதைகளைத் தமிழ் வாசகர்கள், நமது தமிழ்க் கவிதைகளோடு ஒப்பிட்டால், தமிழின் சிறப்பை அறியலாம். இதேபோல மலையாளம், தெலுங்கு, கன்னடத் திலும் கவிதைகள் சிறப்பாக உள்ளன.

எழுத்தாளர் ப. குணசேகர் அவர்கள் மிக்கப் பொறுப்புணர்வுடன் நோபல் பரிசு பெற்ற லூயிஸ் க்ளக் அவர்களின் பல கவிதைகளை நாம் கேட்டுக் கொண்டதற்கேற்ப அனுப்பி உதவியுள் ளார். அவருடைய உழைப்பு தமிழுக்கு வளம் சேர்க்க வண்டல் சுமந்து வந்த நற்பணியாகும்.

கீழ்வரும் ‘க்ளக்’கின் கவிதை உங்களைப் போன்ற ஒரு வாசகரின் மொழிபெயர்ப்பாகும். ‘தமிழ்ப்பணி’யில் வெளியான கவிதை :–

குருதிப்பூ (தி ரெட் பாப்பி)

மனம் ! அது
இல்லாமலிருப்பதே நல்லது
உணர்வுகளும் !
ஓ ! எனக்கு
அவையெல்லாம் உண்டு.
சொர்க்கத்தில் எனக்கொரு
தம்பிரான் இருக்கிறார்
ஆதித்தன் என்பதவர் பெயர்
எனது மனத்தீயை
திறந்து வைத்திருக்கிறேன்
அவரது பார்வைக்காக !
அவரைப் போன்றதுதானே அத் தீ !
அத்தகையதோர் இதயம்
இல்லாதிருந்தால் பின்னர்
இங்கிருந்தென்ன காரியம் !
ஓ ! எனது உடன்பிறப்புக்களே !
நீங்களும்
என்னைப்போல்தான் இருந்தீர்களா
பண்டொரு காலத்தில் !
நீங்கள் மனிதர்களாக மாறும் முன்
முன்பு நீங்களும் திறந்து கொடுத்தீர்களா
உங்கள் இதயத்தை !
இப்போது அப்படி இல்லையென்றாலும்
உண்மையாகச் சொன்னால்
உங்களைப் போன்றே நானும்
இப்போது பேசுகிறேன்
காரணம்
நான் உடைந்து சிதறிவிட்டேன் !

– பேரா. நயினார், திருவனந்தபுரம்

கட்டுரையை வாசித்த பிறகு உங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் பகிரத் தக்கவை.

– ந.நி.

சூனியக்காரிகளுக்கு முன்பிருந்த சூனியக்காரிகள்

கிரேக்கர்களுக்கும் ட்ரோஜன்களுக்கும் நடந்த பத்தாண்டுப் போரின் இறுதியில் டிராய் நகரத்தை எரித்துவிட்டுத் தன் படைவீரர்களோடு கடல்வழியே தாய்நாடு திரும்பும் ஒடீசியஸிற்கு, அவனது பயணத்தின் வழி நேர்கிற இடர்பாடு களின் தொகுப்பே ஹோமர் இயற்றியதாய்ச் சொல் லப்படும் 'ஒடிசி' (The Odyssey) எனும் கிரேக்கப் பெருங்காவியம்.

பார்வையற்ற கவிஞரான ஹோமர், கிரேக்கத் தொன்மங்களிலிருந்து எடுத்தாளும் ஒரு கதைமாதே ஆண்களைத் தன் இனிய பாடல் களால் வசியப்படுத்தி, அவர்களைப் பன்றிகளாக மாற்றும் மாயவித்தைக் கற்ற 'கீர்க்கி' (Circe). ஹோமர், அவளை ஒரு கடவுளாகத் தனது காவியத்தில் அழைத்தாலும், ஆண்கள் எழுதிய வரலாற்றில் "சூனியக்காரிகளாய்க்" குறிக்கப் பெறும் பெண்ணினத்தின் மூல முன்மாதிரியா கவும் கீர்க்கியைப் புரிந்து கொள்ளலாம். அவள் பெயரை விளிக்கும் 'Circe' எனும் இச்சொல் ஆங்கிலத்தில் 'சர்சீ' என்று ஒலித்தாலும், கிரேக் கத்திலிருந்து இலத்தீன் மொழியின் ஒலி வடிவமேற்ற 'கீர்க்கி' என்ற உச்சரிப்பையே இக் கட்டுரையில் தொடர்வோம்.

ஆண்களை, தன் கட்டளையின்வழி அடக்கு பவளாகவும், தனது மாந்த்ரீகத்தால் அவர்களைப் பன்றிகளாக உருமாற்றுபவளாகவும் காவியத்தில் காட்டப்படும் கீர்க்கி, அவள் வாழும் தீவை நோக்கி வருவோரை, கடற்காற்றில் மிதக்கும் அவளது இனிய பாடல்களின் வழியே வசியப்படுத்துகிறாள். ஒளிவீசும் தனது மாளிகையின் வாயில்களைத் திறந்து அவர்களை வரவேற்கிறாள்.

ஒருவித மூலிகை கலந்து அவள் அளிக்கும் விருந்தில் மதுவும் உணவும் இடம்பெறுகின்றன. உண்ட களைப்பில் தனது விருந்தினர்கள் இளைப்பாறும் போது, சூழ்ச்சி நயத்தோடு தன் மந்திரக் கோலால் அவர்களின் தலையில் அடிக் கிறாள். அதன்பின்னர் அவர்கள் அனை வரும் பன்றிகளாய் மாற, 'அவற்றை' தனது தொழுவத்திற்கு ஓட்டிப்போய் அடைக்கிறாள்.

மனிதர்கள் மட்டுமல்ல, வனத்தை ஒட்டிய அவளது மாளிகை ஓரம் அலைந்து திரியும் சிங்கங்களும், ஓநாய்களும்கூட அவளால் வசியப் படுத்தப்பட்டு, அவளது மாளிகை நோக்கி வரு வோரை, நம் வீட்டு நன்றியுள்ள நாய்குட்டிகளைப் போல் தம் நாவுகளால் தீண்டியும், வாலாட்டியும் பணிந்து அன்பைக் காட்டுகின்றன.

மேற்குலகின் மதம் ஒட்டுமொத்தப் பெண்ணி னத்தையே 'சூனியக்காரிகள்' என்று அடையாளப் படுத்திய காலத்திற்கு முன்னரும், ஒடிசி உட்பட தியாக்கினி (Theogony), மெட்டமார்ப்சஸ் (Metamorphoses), விவிலியம் (The Bible) என்ற இன்னபிற ஆதிகால இலக்கியங்களும் மாந்த்ரீகம் புரிந்து மனிதர்களைக் கொன்றவர்களைப் பெரும் பாலும் பெண்களாகவே கற்பித்திருக்கின்றன.

ஆவிகளுடன் பேசுதல் (Necromancy), புறச்சமயக் கடவுளர் வழிபாடு (Worship of Pagan Gods), மாந்த்ரீகம் புரிதல் (Sorcery) முதலியவை கிறித்துவத்தால் தடை செய்யப்பட்டவை என்றா லும், இறந்துபோன தீர்க்கதரிசி சாமுவேலையே (Samuel the Prophet) உயிர்ப்பிக்கச் செய்து, அடுத்த நாள் இஸ்ரேலியருக்கும் பிலிஸ்தி யருக்கும் நடக்கவிருக்கும் போரின் முடிவை முன்பே அறிய முற்படும் இஸ்ரேல் நாட்டு முதல் மன்னரான சவுல் (Saul), எண்டார் (Endor) எனும் இடத்தில் வாழ்ந்துவந்த ஒரு சூனியக்காரியின் (The Witch of Endor) உதவியை நாடினார் என்பதைக் கிறித்துவர்களின் வேத நூலான விவிலியம் (The Bible) எடுத்தியம்புகிறது.

சூனியக்காரியின் இல்லத்தைத் தனது நண்பர்களுடன் மாறுவேடத்தில் அன்றிரவு


செயின்ட் ஆல்பான்ஸ்


டிரூய்ட்ஸ்

அடைந்த சவுல் மன்னருக்கு, தனது கன்றுக்குட்டியைக் கொன்று, அதன் இறைச்சியுடன் மாப்பிசைந்து, ரொட்டிகள் சுட்டு, சவுல் மன்னருக்கே அந்தச் சூனியக்காரி விருந்து படைத்ததை விவிலியம் எடுத்துக் கூறுகிறது.

ஒரு காலத்தில், இவள் போன்ற சூனியக்காரிகளைத் தேசத்தை விட்டே துரத்திய சவுல் மன்னனுக்குப் பிறிதொரு நாளில் ஒரு சூனியக் காரியின் உதவியே தேவைப்பட்டது என்று விவிலியம் கூறும் இச்சம்பவம், மேற்குலக இலக்கியப் பரப்பில் ஏற்படுத்திய தாக்கத்தை, ஆங்கில மொழியின் முதல் புதுக் கவிஞனான சாசர் (Chaucer) எழுதிய "தி காண்டர்பரி டேல்ஸ்" (The Canterbury Tales) எனும் கதைக் கவிதைத் தொகுப்பில் ஒன்றான "தி ப்ரையர்ஸ் டேல்" (The Friar's Tale) கவிதையில் உணரலாம்.


ஜூலியானா பெர்னெர்ஸ்

16–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரெஞ்சுக் கவிஞரான கியாம் டு பார்டிஸ் (Guillaume du Bartas) எழுதிய "லா சும்மேன்" (La Semaine) எனும் பாடல், சவுல் மன்னன் சந்தித்த அந்தச் சூனியக் காரி, இறந்தோருடன் தொடர்பு கொள்ளும் நிகழ்வில் (Necromantic Art) தனது மகனைக் கொன்று, அவனது கொழுப்பையே நெய்யாக உருக்கி ஒரு தீப்பந்தத்தை எரிய வைத்தாள் என்று குறிப்பிடுகிறது.


மேற்குலக மொழிகளில் 'சூனியக்காரி' என்ற சொல்லாடலுக்கு முன் பிறந்த பெண்கள், இப்படிக் கிரேக்கத்திலும் இஸ்ரேலிலும் மட்டுமல்ல, பண்டைய இங்கிலாந்திலும் இருந்தார்கள்.

இயேசு கிறித்துவின் பிறப்பிற்குப் பல நூற்றாண்டுகள் முன்பு ஒரு சிறு தீவாய் உலக வரைபடத்தில் தென்பட்ட இங்கிலாந்தில், மதமோ, கடவுளோ இருந்திருக்கவில்லை. எந்தவொரு நாட்டின் ஆதிகால வரலாற்றைப் போலவும் பழங்கால இங்கிலாந்தின் வரலாறும் பழங்குடிகளின் வரலாறாகவே இருந்தது.


அதே நேரத்தில் 'நாகரிகம்' அடைந்த அண்டை நாடுகளின் ஆதிக்க அரசுகள் பண்டைய இங்கிலாந்தைக் கைப்பற்ற முயற்சித்த போதெல்லாம், அவற்றிற்கு எதிராகக் கலகம் புரிந்து ஜூலியஸ் சீசர் (Julius Caesar) போன்ற பெருஞ் செல்வாக்குடைய அரசியல், இராணுவத் தலைவர்களையே துரத்தியடித்த பெருமையை, இங்கிலாந்துப் பழங்குடிகளான பிரித்தானியர் (Britons) பெற்றிருக்கின்றனர்.

பிறிதொரு காலத்தில் ரோமாபுரியின்கீழ், அதே நேரத்தில், அதை ஆளும் தன்னாட்சி உரிமையையும் பெற்றிருந்த பண்டைய பிரிட்டனின் ஒரு பகுதி, 'ஐஸீனை' (Iceni) எனும் பழங்குடி இனஅரசாக, 'ப்ரசடுகஸ்' (Prasutagus) என்ற மன்னனால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. தனது மரணத்திற்குப் பிறகு, அந்நாடு ரோமாபுரிக்கும், தனது இரண்டு மகள்களுக்கும் சரி சமமாய்ச் சேர வேண்டும் என்பதைத் தனது விருப்புறுதியில் (Will) எழுதி வைத்திருந்தான் பழங்குடி மன்னனான ப்ரசடுகஸ்.

ஆனால் ரோமப் பேரரசோ, கி.பி. 60–இல் ப்ரசடுகஸின் இறப்பிற்குப்பின் அவனது நாட்டை முழுமையாய்த் தன்னுடன் இணைத்துக் கொண்டது. இதை எதிர்த்து, ஐஸீனைப் பழங்குடி இனத்தின் அரசியும் ப்ரசடுகசின் மனைவியுமான பூடிக்கா (Boudica), ரோமானியர்களுடன் தொடுத்த போர்,


பா. மீனாட்சிசுந்தரம்





பண்டைய பிரிட்டனின் பழங்குடி வரலாற்றில் மட்டுமல்ல, பிற்கால ஆங்கில இலக்கியத்திலும் முக்கியத்துவம் பெற்றது.

இங்கிலாந்தின் முதல் அரசவைக் கவிஞரான ஆல்பிரெட் லார்ட் டென்னிசன் (Alfred Lord Tennyson) எழுதிய “Boadicea” என்ற நெடுங் கவிதை, ரோமானியர்களுக்கு எதிராகப் பூடிக்கா தொடர்ந்த போரை விழிமுன் நிறுத்தி, போர்க் கலகத்தின் குரூரக் காட்சிகளைத் தனது கவித் துவத்தின் உச்சத்தில் விவரிக்கும் கலிங்கத்துப் பரணியின் ஒரு பாடலைப் படித்த உணர்வைத் தரவல்லது.

போரில் படுகாயமடைந்திருந்த தன் இரு மகள்களையும், குதிரை பூட்டியிருந்த அவளது ரதத்தில் கிடத்தி, கையில் ஈட்டியை ஏந்தியபடி தன் அழகிய கூந்தல் காற்றில் பரவ, பிரிட்டனில் குவிந்திருந்த ரோமானிய வீரர்களுக்கிடையில் விரைந்தாள் பூடிக்கா.

ஐஸீனியப் பழங்குடிகளுக்கும் ரோமானியர் களுக்கும் 'ஈஸ்ட் ஏங்கிலியா' (East Anglia) எனும் அன்றைய இங்கிலாந்தின் கிழக்குப் பகுதியில் பூடிக்கா தொடுத்த இப்போரில் ஏறக்குறைய 70,000 ரோமானியர்கள் மரணத்தைத் தழுவினர்.

பூடிக்காவின் பழங்குடிப் படை தீக்கிரை யாக்கிய ரோமானிய இராணுவ முகாம்களில் இன் றைய இலண்டனும் இருந்ததென்பதை இங்கி லாந்தின் வரலாறு பேசுகிறது. ஆனாலும், தனது ஆதிக்க பலத்தாலும், ஆயுத பலத்தாலும் ஐஸீ னியப் பழங்குடிகளை ஒடுக்கியது ரோமப் பேரரசு.

இப்போரில் தோல்வியைத் தழுவிய பூடிக்கா, நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டதாக 'வரலாறு' சொல்கிறது. ஆனால் டேசிடஸ் (Tacitus) எனும் பண்டைய ரோமானிய வரலாற்று அறிஞன், அவளை ரோமானியர்கள் சவுக்கில் அடித்துச் சாகடித்ததாகவும் அவளது இரு மகள்களையும் பாலியல் பலாத் காரம் செய்ததாகவும் தனது வரலாற்று நூலில் குறிப்பிட்டிருக்கிறான்.

ரோமானியர்களின் வழி கிறித் துவம் காலூன்றுவதற்கு முன்னர், பழங் குடிப் பண்பாட்டைக் கொண்டிருந்த பிரிட்டனில் மதம் என்றோர் ஆன்மீக நிறுவனம் ஏதும் இல்லை. ஆனாலும் இடைக்காலத்தில் "டிரூய்ட்" (Druid) எனும் சமயம் அங்கே பரவி இருந்தது. இன்றைய பிரான்சும், பெல்ஜியமும், மேற்குஜெர்மனியும், வடக்கு இத்தாலியும் இணைந்திருந்த "கவுல்" (Gaul) என்ற பகுதியிலிருந்து பிரிட்டனை அடைந்த டிரூய்ட்ஸ், தங்களது மதத்தில் பிரித்தானியப் பழங்குடியினரை இணைத்தனர்.

புரோகிதத்தைத் தொழிலாய்க் கொண்டிருந்த அவர்கள், சூரியனை, நிலவை, நாகத்தை வழி படும் வழக்கத்தைப் பிரிட்டானியப் பழங்குடி களுக்கு அறிமுகம் செய்தனர். கையில் மந்திரக் கோலுடன் பழங்குடிகளிடம் ஊடுருவிய அவர்கள், தமது கழுத்தில் அணிந்திருந்த தங்கத்தாலான சிறு பெட்டிக்குள் நாகத்தின் முட்டை இருப்பதா கவும், அது அவர்கள் மீது மாந்த்ரீகத்தால் ஏவப்பட்ட தீங்கிலிருந்து காக்கும் மந்திர வலிமை கொண்டதாகவும் பிரிட்டானியப் பழங்குடியினரை நம்பச் செய்தனர்.

"டிரூய்ட்" என்ற பெயர்வழியே "ஓக் மரத்தை அறிந்தவர்கள்" என்று நேரடிப் பொருள்படும் அவர்கள், நரபலி நிறைவேற்றுபவர்களாகவும். ரோம இராணுவ அரசியல் தலைவரான ஜூலியஸ் சீசர், தான் எழுதிய Commentari de Bello Gallico (Commentaries on the Gallic Wars) என்ற நூலில் குறிப்பிடுகிறார். டிரூய்ட் இனத்தின் வரலாற் றுக்குப் பெரும் ஆதாரமாக விளங்கும் சீசரின் நூல், அவர்கள் போரில் ஈடுபடாதவர்கள் என்றும் தேசத்தின் வரி விதிப்புகளுக்கு விலக்களிக்கப் பட்டவர்கள் என்றும் குறிப்பிடுகிறது.

புரோகிதம் மற்றும் சமயம் சார்ந்த பணிகளில் மட்டுமே ஈடுபட்டு உடல் உழைப்பைச் செலுத்தாத

இந்த மேற்குலக டீரூய்ட்களும், கிழக்கு நாடு களில் பரவிய பார்ப்பனர்களும் பழங்கால இந்தோ – ஐரோப்பிய சமய குருமார் அமைப்பு முறையின் நீடு நிலவலே என்றும் பல வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஹோமர் தனது ஒடிசியில் குறிப்பிட்ட கீர்கீயை நினைவுபடுத்தும் விதமாக நடப்பு வாழ் விலும் நஞ்சு கலந்த பானத்தைக் குடிக்கச் செய்து, தனது பகைவர்களையெல்லாம் கொன்று வந்தாள் பிரிட்டனின் அரசி ஒருத்தி. "எட்பர்கா" (Queen Edburga) என்ற பெயர்கொண்ட அவள், ஒரு நாள், யாரோ ஒருவரை மரணிக்கச் செய்யும் பொருட்டு, நஞ்சுகலந்து வைத்திருந்த பானத்தை, அவள் கணவனே தவறுதலாய் அருந்தி உயிர்விட, கொதித்தெழுந்த பிரிட்டானிய மக்கள், அவளை அரச பதவியை விட்டிறக்கி நாட்டிற்கு வெளியே துரத்தியதும், பிறிதொரு நாளில் அவளொரு பிச்சைக்காரியாய் உணவு வேண்டி இத்தாலியின் வீதிகளிலெல்லாம் அலைந்து திரிந்து இறந்து போனதையும் இங்கிலாந்தின் வரலாறு பதிவு செய்திருக்கிறது.


தொல்பழங்காலத்தில் வன விலங்கு களிடம் இருந்து தம்மைப் பாதுகாக்கவும் பின்பு இறைச்சிக்காகவும் வேட்டையாடி வாழ்ந்துவந்த பிரிட்டானியச் சமூகம், நூற்றாண்டுகள் கடந்து வேட்டையை ஒரு சாகசமாக, பொழுது போக்காக, அதற்கெனச் சில கையேடுகளை யும் எழுதி வைத்திருந்தது. செல்வச் செழிப்பு மிகுந்த ஆங்கிலேயர்கள், தங்கள் பண்ணைத் தனியுரிமை நிலத்தில் கட்டிக் குடியிருந்த மாளிகைகளை (Manor Houses) ஒட்டி, தமக்குச் சொந்தமாய் விரிந்திருந்த வனப் பகுதிகளில் மான்களையும், நரிகளையும், முயல்களையும் வேட்டையாடி மகிழ்ந்தனர். வனப் பகுதிக்குள் ஒரு மானை ஓடவிட்டு, அதை, தமது வேட்டை நாய் களைக் கொண்டு துரத்தச் செய்து, அவற்றின் பின்னே, அவர்களும், அவர்களின் விருந்தினர் களும் குதிரையில் சவாரி செய்தபடி துரத்திக் கண்டுபிடித்துக் கொல்வதென்பது அவர்களின் கேளிக்கையாய் இருந்தது.

ஒரு காலத்தில் 'சூனியக்காரி' என்று மதம் சார்ந்த ஆண் சமூகத்தால் வேட்டையாடப்பட்ட பெண்ணே, பிறிதொரு காலத்தில் வனவிலங்கு களை வேட்டையாடுவதற்கு ஒரு கையேட்டை "தி புக் ஆஃப் செயின்ட் ஆல்பான்ஸ்" (The Boke of St. Albans) என்ற நூலாக எழுதியிருந்தாள் . 1496–இல் அச்சேறிய இந்நூல், வேட்டை இலக் கியத்தை ஒரு பெண் எழுதிவைத்தாள் என்ற அளவில் பெருமையாகக் கொண்டாடப்படுகிறது.

உலகப் பதிப்பு வரலாற்றில் முதன் முதலாக வண்ணத்தில் அச்சடிக்கப்பட்டதாய் அறியப்படும் இந்நூல், சாப்பெல் திருமடத்தில் (Sopwell Abbey) சமயப்பணி செய்துவந்த ஜூலியானா பெர்னெர்ஸ் (Juliana Berners) என்ற பெண் துறவியால் எழுதப்பட்டதாம். செயின்ட் ஆல்பான்ஸ் நகரில் "School Master Printer" எனும் பதவி கொண்ட பெயர் தெரியாத ஒருவரால் நடத்தப்பட்டு, இந் நூலைத் தயாரித்த அந்த அச்சுக்கூடம் 1479 முதல் 1486 வரை இயங்கியது.

"யாரிந்த ஜூலியானா?" என்ற கேள்விக்கு மேலும் பதில்களின்றி, வேட்டையருக்கு அஞ்சி வனத்தில் ஓடி ஒளிந்த ஒரு மானைப் போல், வரலாற்றின் கண்களுக்குத் தட்டுப்படாமல் மாய மாய் மறைந்து போனாள் இந்த ஜூலியானா.





ஆனாலும், இன்று ஆங்கிலப் பள்ளிகளில், ஆசிரியர்கள் கூற, பிள்ளைகள் உரத்து உச்சரிக்கும் விசித்திரக் குழுப் பெயர்ச்சொற் களான "A Murder of Crows", "A Parliament of Owls, "A Pride of Lions", "A Pandemonium of Parrots", "A Litter of Puppies" என்பவற்றுள் இன்றும் வாழ்கிறாள் ஜூலியானா.

வேட்டையாடும் விளையாட்டை நூலாக எழுதிய இந்த ஜூலியானா, காக்கைகளின் கூட் டத்தை ஏன் "A Murder of Crows" என்றும், ஆந்தைகளின் கூட்டத்தை "A Parliament of Owls" என்றும், கிளிகளின் கூட்டத்தை "A Pandemonium of Parrots" என்றும் விசித்திரமாய் அழைத்தாள் என்பது அவளுக்கே வெளிச்சம். ●


உங்கள் மனம் மகிழும்
வாகனத்தை தேர்ந்தெடுப்பீர்
FORCE MOTORS
TRAX CRUISER
புதிய
TRUMP 40
3 சிலிண்டர் MERCEDES Derived Engine மற்றும் Gear Box
FORCE GURKHA E.O.V. 4.4.4
BUILT FOR WAR
Traveller
SIMPLY WORLD CLASS
Luxury
கல்வி மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு ஏற்றதொரு வாகனம்
Available in 9 to 20 Seats
விவசாயிகளின் செல்வ வெற்றிக்கு
BALWAN
400, 450 & 500
FORCE MAN
MAN FORCE TRUCKS Pvt. Ltd.
MAN TRUCKS
The New Force in India
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr. நஞ்சப்பா ரோடு, கோவை-18. ✆ 2239800, 2239808
செல் : 98438-84900, 98438 84920 பொள்ளாச்சி : ✆ 224096, 98438 84931
திருப்பூர் : ✆ 2478665, 98438-84902 ஈரோடு : 98438 84940



'ஓம் சக்தி' 2020 அக்டோபர் இதழின் முகப்பு அட்டையில் காந்திஜி படத்தையும் அருட்செல்வர் படத்தையும் வெளியிட்டு மரியாதை செய்த ஓம் சக்திக்கு நன்றிகலந்த பாராட்டுகள்!

– **கா.சித்ரா காமராஜ்,** கோவை.

சொ.சொ.மீ. எழுதி வரும் 'தீவினை மாற்றும் திருமந்திரத் தொடர்' அருமை. திருமூலரின் திருமந்திரத்தில் உள்ளவற்றைத் தேனாகத் தந்து வருகிறார். அறிவுரைகளையும், வழிகாட்டுதலையும், விழிப்புணர்வையும் போதிப்பதுதான் திருமூலரின் திருமந்திரம்.

– **மு.கணபதி,** பெருந்துறை.

நீ.சு. பெருமாள் எழுதியிருந்த கீழடி பற்றிய செய்திகள் அருமை. வைகை நதி ஜீவநதியாக எப்போதுமே ஓடியதில்லை; பருவகாலத்து நீரோடை என்னும் கட்டுரையாளரின் கருத்து நூற்றுக்கு நூறு உண்மை!

– **எல்.சூரியக்கண்ணு,** மதுரை.

சுரங்கம் பகுதியில் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களின் 'காந்தியம் இளைஞர்களுக்கே' கட்டுரை அற்புதமான ஒன்று. இன்றைய இளைஞர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய ஒன்று.

– **ஏ.பாஸ்கர்,** சேலம்.

'ஓம்சக்தி' அக்டோபர் இதழில் காந்திஜி, அருட்செல்வர் இருவரின் அட்டைப்படம் அவர்களை வணங்குமாறு உள்ளதென்றால் மிகையல்ல!

– **உஷாமுத்துராமன்,** மதுரை.

மகாத்மா பற்றி இருபது தொகுதிகளை வெளியிட்ட நிகழ்வைக் கண்டு பூரிப்படைந்தேன். அன்றைய நிகழ்ச்சிகளைத் தொகுத்து வெளியிட்ட ஓம் சக்திக்கு மனம்கனிந்த வாழ்த்துக்கள்!

– **தங்கவேல் பழனிசாமி,**
பெரியகள்ளிவலசு.

அடையாளங்கள், ரௌத்திரம் ஆகிய சிறுகதைகள் வித்தியாசமான கதைக் களம் கொண்டவை. குடும்பப் பொறுப்பையும், மாணவர்களை ஊக்குவித்தலுமான கருத்துக்கள் அக்கதைகளில் பளிச்சிடுகின்றன.

– **தி.பழனிச்சாமி,** அன்னூர்.

காளமேகப் புலவரின் கவித்திறனைக் கண்டு புலவர்கள் அஞ்சிய நிகழ்வுகளைக் கோர்வைப்படுத்தித் தந்துள்ள கட்டுரையாசிரியருக்குப் பாராட்டுக்கள்!

– **மா. சுப்பிரமணியம்,** திருப்பத்தூர்.

உடல் பருமனைக் குறைக்கும் வழிமுறைகளைத் தெள்ளத் தெளிவாக ஒவ்வொரு மாத ஓம்சக்தி இதழிலும் விளக்கிக் கூறும் டாக்டர் வி.ஜி. மோகன் பிரசாத்துக்கு நன்றி பல!

– **ந.முத்துக்குமார்,** சேலம்.

மாவட்டக் கலெக்டர் பற்றிய விமர்சனம், அரசுத் துறைகளில் ஊடுருவியுள்ள லஞ்ச லாவண்யங்களை மிகத் துணிச்சலாகத் தான் நடத்திவந்த பத்திரிகையில் தைரியமாக அன்றையக் காலகட்டத்தில் நரசிம்மலு நாயுடு எழுதியது பாராட்டுக்குரியது. நரசிம்மலு நாயுடு அவர்கள் எழுத்தாளர், பத்திரிகையாளர், அரசியல்வாதி, பன்மொழி வித்தகர் எனக் கட்டுரை முழுவதும் அவருடைய அரிய தகவல்களை விரிவாக வழங்கிய இடைப்பாடி அமுதன் அவர்களை எத்தனை முறை பாராட்டினாலும் தகும்.

– **சக்தி காமராஜ்,** கோவை.



LED, கலர் டி.வி, ரெஃப்ரிஜிரேட்டர், ஏர்கன்டிஷ்னர்,
வாஷிங் மெஷின், மற்றும் அனைத்து தரமான வீட்டு உபயோக
பொருட்களை குறைந்த விலையில் வாங்க சிறந்த இடம்.
Easy Finance Options BAJAJ Finance
Exchange offer
Gift Coupons Available
*Free gift with every purchase
*Free delivery with in city Limits
Open on Sundays
வந்து பாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!
*For purchase above RS.8000/- condition apply
LG
SAMSUNG
SONY
PHILIPS
VIDEOCON
ONIDA
Godrej
Whirlpool
SIEMENS
IFB
Prestige
ELGI ULTRA
Preethi
V-GUARD
BOSCH
Micromax nothing like anything
HAVELLS
VOLTAS LIMITED
Butterfly
TATA Sky
Crompton Greaves
USHA
BPL EMERGENCY LIGHT
Preethi INDUCTION COOK TOP
EUREKA FORBES Your friend for life
CASCADE
VENUS WATER HEATER
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand
Coimbatore - 641 018.
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811

அக்டோபர் 2020 இதழ் விவாதம்

தேவை நீட் தேர்வு

விவாதக் கடிதங்களில் சில... சில... சில...

உயிர் காக்கும் மருத்துவப் படிப்பிற்கு நீட் தேர்வு மிகவும் அவசியமானது. அதிகளவு நீட் தேர்வு எழுதும் மாணவர்களைக் குறைப்பது என்பதைவிட, மருத்துவத் துறைக்கு உரிய தகுதியானவர்களைத் தேர்வு செய்வது நோக்கமாகும். நீட் தேர்வு காரணமாக மாணவர்களின் தற்கொலைக்குக் காரணம் பெற்றோர்களே. அவர்கள் தம் ஆசைகளைத் தன் பிள்ளைகளின்மேல் சுமத்துகிறார்கள்.

நீட் தேர்வு வேண்டாம் என்று குரலெழுப்பும் கட்சிகள், தற்கொலை செய்துகொண்ட மாணவர்களை முன்னிறுத்தி அரசியல் செய்கின்றன. இதை எதிர்கொள்ள ஆளும் கட்சியினர் அந்தக் குடும்பங்களுக்குப் பண உதவி, அரசுப் பணி என்று ஆறுதல் கூறி வருகிறார்கள். இந்நிலையைத் தவிர்க்க மாணவர்களுக்கு ஊக்கத்தையும், தைரியத்தையும் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும்.

– **மு.கணபதி**, பெருந்துறை.

நீட் தேர்வு எழுதிய பெரும்பாலான மாணவர்கள் தேர்வு சுலபமாகவே இருந்தது என்றும் கூறியுள்ளனர். தேர்வுக்கு நன்றாகப் படித்திருந்தும் எழுதினால் பெயில் ஆகி விடுவோமோ என்ற பயத்தாலும், தன்னம்பிக்கையின்மையினாலும், பெற்றோரின் அழுத்தத்தால் மனம் சஞ்சலமடைந்த மாணவர்களே தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இத்தேர்வில் தோல்வியடைந்துவிட்டால் மருத்துவம் சார்ந்த எத்தனையோ படிப்புகள் உள்ளனவே. பெற்றோர்கள்தான் முதலில் திருந்த வேண்டும். மாணவர்கள் செய்த இந்தத் தற்கொலையை ஊதிப் பெரிதாக்கி, ஏதோ நடக்கக் கூடாதது நடந்துவிட்ட மாதிரி நீட் தேர்வை ரத்து செய்யுங்கள் என்று கூவி, இதை அரசியல் வியாபாரமாக்கி விட்டனர். மருத்துவக் கல்வியில் இதற்குரிய தகுதியினை வளர்த்துக்கொள்ள அவசியமானது இந்த நீட் தேர்வு.

– **பே.சண்முகம்**, செங்கோட்டை.

1950 மற்றும் 1960–களில் ஆரம்பப் பள்ளியில் 5–ம் வகுப்பு முடித்து 6–ம் வகுப்பு செல்லும் மாணவர்களுக்குச் சோதனைத் தேர்வு வைக்கப்படும். எதற்காக என்றால் அன்றைக்கு ஆரம்பப் பள்ளிகள் இருந்த அளவுக்குப் போதுமான உயர்நிலைப் பள்ளிகள் இல்லை. 6–ம் வகுப்பில் இடங்கள் குறைவு. அதோடு அன்றைக்கு மும்மொழிப் பாடங்கள் (தமிழ், ஆங்கிலம், இந்தி வகுப்புகள்) 6–ம் வகுப்பு முதலே இருந்தன. ஆகவே தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கவே தேர்வுகள் நடத்தப்பட்டன. அதே மாதிரி இன்றைக்கு மருத்துவம், ஐ.ஐ.டி. கல்லுரிகளில் இடங்கள் குறைவு. விண்ணப்பிப்போர் அதிகம். அதனால் தகுதியான, திறமையான மாணவர்களைத் தேர்ந்து எடுப்பதற்கு நீட் தேர்வு மிக அவசியமே.

– **கோ.செ.மு.கந்தசாமி பாண்டியன்**, திருப்பூர்.

மருத்துவர்களை உயிர் காப்பவர்கள் என்று கொண்டாடிய காலம் மலையேறிப் போய்விட்டது! மருத்துவத்துறை வணிகமாகிப் போனதும் பெரும்பாலான மருத்துவர்கள் திறமையின்மையுமே காரணம்.

+2 தேர்ச்சி பெற்ற சராசரி பணக்கார மாணவன் தனியார் மருத்துவக் கல்லுரியில் படித்து எளிதாக மருத்துவராகிவிடும் வாய்ப்பு இந்த நீட் தேர்வால் தடுத்து நிறுத்தப்பட்டிருப்பதை உணர வேண்டும். தகுதியும் திறமையும் உள்ளவர்களே வெற்றி பெற நீட் தேர்வு அவசியம். கிராமப்புற மாணாக்கரின் தகுதியை உயர்த்துவதற்கான சூழலை அரசும் மருத்துவத்துறையும் கட்டமைக்க வேண்டும்.

– **நவீன்குமார்**, நடுவிக்கோட்டை.

நீட் தேர்வு தேவையற்றது. குத்துமதிப்பாக நான்கு விடைக்கு ஒன்றை டிக் செய்வது

புலமைக்கு அடையாளமன்று. அந்தக் காலத்தில் மருத்துவத்துறை இதைக் கொண்டு வந்தபோது மத்திய அரசு சட்டமாக்கவில்லை. விருப்பமிருந்தால், அந்தந்த மாநிலம் அமுல்படுத்தலாம் என்றபோதே இதன் பலவீனம் பளிச்சென்று தெரிகிறது. அதனால்தான் கலைஞர் முதல்வராக இருந்த போது காங்கிரஸ் கூட்டணியில் இருந்தாலும் தமிழகத்தில் கூட்டணிக்காக ஏற்காமல் நீட் தேர்வை ஏற்கவில்லை; எதிர்த்தார்.

மற்றமற்ற உயர்மட்ட நுழைவுத் தேர்வுக்கு நீட் போலக் கெடுபிடி இல்லை. ஒரு காலத்தில் மருத்துவப் படிப்புக்குத் தொடர்பில்லாத சமஸ்கிருதம் பாடமாக இருந்ததை நீதிக்கட்சித் தலைவர் தியாகராசரின் எதிர்ப்பால் எடுக்கப்பட்டது. அது போன்று தான் இந்த நீட் தேர்வும் நேர்மையற்ற வகையில் மருத்துவத்திற்குத் தொடர்பில்லாத தாகும்.

– **தெ.முருகசாமி**, புதுச்சேரி.

நம் மாணவர்களுக்கு நீட் தேர்வு அவசியம். உயிரைக் காக்கும் மருத்துவப் படிப்புக்கு நீட் தேர்வு ஒரு வழிகாட்டி. இதில் அரசியல்வாதிகள் உள் நுழைந்து மாணவர்களைத் திசை திருப்பிக் கெடுத்து விடுகிறார்கள். நீட் தேர்வில் நல்ல பல செய்திகளை மாணவர்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. இன்றைய கல்வி முறையில் வியாபார நோக்கம் புகுந்து எல்லாத் துறைகளையும் கெடுத்து வருகிறது. அத்துடன் பெற்றோர்களிடம், தம் குழந்தைகள் மருத்துவராகிப் பெரும் செல்வம் ஈட்ட வேண்டும் என்கிற பணமோகம் அதிகரித்துவிட்டது ஒரு காரணம்.

– **தி.ராதாகிருஷ்ணன்**, அரூர்.

நீட் தேர்வு வேண்டாம் என்பது ஒரு நல்ல படித்த பண்புள்ள அரசியல்வாதிகளின் செயலாகாது. கொரோனா வந்த நாளிலிருந்து ஊரடங்குக் கட்டுப்பாடு, தரமும் தகுதியும் இல்லாத மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகள், நல்ல தரமான கல்வி இல்லையென்றால், நாட்டில் உள்ள எல்லாத் துறைகளும் வெற்றிகரமாகச் செயல்பட முடியாது. படிக்க முடியவில்லை எனத் தற்கொலை – இதற்கு நடிகர் முதல் முன்னாள் நீதிபதி, அரசியல்வாதிகள் வரை ஆதரவு. எவ்வளவு அருமையான படிப்புகள் எல்லாம் இருக்கும்போது, நீட் தேர்விற்கு மட்டும் கவனம் செலுத்துவது முட்டாள்தனம்.

இங்குள்ள மருத்துவக் கல்லூரிகளில் படித்தவர்கள் வெளிநாடுகளில் நல்ல கல்லூரிகளில் சேர்வதற்குத் தகுதிகூட இல்லை. பின் எப்படி இந்த மருத்துவர்களால் நேர்மையான மருத்துவராகச் செயல்பட முடியும். இப்படி இருக்கும் சூழலில், அரசியல்வாதிகள் தரமற்ற கல்வியை ஊக்குவிக்க கூடாது. நீட் தேர்வு அவசியம் மருத்துவத்திற்கு மட்டுமல்ல, எல்லாத் துறைக் கல்விப் படிப்பிற்கும் வேண்டும்.

– **சி.பிரகாஷ்**, திருச்சி.

130 கோடிக்கு மேல் ஜனத்தொகை உள்ள நாட்டில் வெறும் 5550 மருத்துவ இடங்கள் என்பது போதாதது. இதை அதிகப்படுத்தலாமே. எது எதற்கோ செலவு செய்யும் அரசுகள், இந்த மருத்துவ இடங்களை அதிகமாக்கி மாணவர் சமுதாயத்தை உயர்த்த வேண்டும். மாணவர்களின் உயிர்களுடன் விளையாடக் கூடாது. மருத்துவ இடங்களை அதிகப்படுத்துதல் அதிமுக்கியமான கடமை என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். இடங்களைக் குறைவாக வைத்துக் கொண்டு மாணவர்கள் வாழ்க்கையில் விளையாடக் கூடாது. எதற்குத் தேவை அதிகமாக உள்ளதோ, அதை மக்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும். அரசு என்பது மக்களுக்குச் சேவை செய்வதற்குத்தான். மக்களைக் கண்ணீரில் மிதக்க வைக்கக் கூடாது.

– **தங்கவேல் பழனிச்சாமி**, பெரிய கள்ளிவலசு.

மருத்துவத் துறையில், ஐ.ஐ.டி. துறையில் மட்டுமே நாம் வாழ்வில் சிறக்க வேண்டுவதில்லை. கல்லூரியில் படிக்காதவர்கள் புகழ்பெற்ற எழுத்தாளர்களாக, கவிஞர்களாக, ஓவியர்களாகப் புகழ் பெற்றுள்ளார்கள். வேதியியல், பொறியியல், இசை, மொழி இவைகளிலும் நோபல் பரிசு பெற்றுள்ளார்கள். ஆதலால், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நீட் தேர்விலேயே வெற்றி பெற வேண்டும் என நிர்ப்பந்திக்கக் கூடாது. மருத்துவத்தில் மட்டுமா மாண்பு? எதிலும் எங்கணும் மாண்பு உண்டு. உள்ளத்திடமான வெற்றி, வாழ்வில் வெற்றி பெற எவ்வளவோ பாதைகளில் பயணிக்க வழிகள் பலவுண்டு.

– **டாக்டர் முனைவர். ஜே.ஜி.சண்முகநாதன்**, கோவை.

போட்டி அதிகமாக இருக்கும்போது தேர்வு அவசியம். இதனை எதிர்ப்பது மாணவர்களோ, பெற்றோர்களோ அல்ல. அரசியல்வாதிகளே! இவர்களாலே சில மாணவர்கள் தற்கொலை

செய்து கொள்கிறார்கள். அரசுப் பள்ளியில் படிப்பவருக்கு மருத்துவ இடம் கிடைக்காது என்று நினைக்காமல், கல்விக் கொள்கையை மாணவர்கள் உணர்ந்து நீட் தேர்வை எழுத வேண்டும். தகுதி உள்ளவர்க்கு நிச்சயம் கிடைக்கும். நீட் தேர்வில் தோல்வி என்றால் வாழ்க்கையே தோல்வி அடைந்து விடாது. பிற தேர்வுகளில் வெற்றி பெற்று முன்னேற்றப் பாதையில் செல்ல முடியும். நீட் தேர்வு தேவைதான். ஏனெனில் இந்தத் தேர்வு அகில இந்திய அளவில் நடத்தப்படும் ஒரு வடிகட்டும் சாதனம்.

– **ராம.பழனியப்பன்**, கோவை.

எந்தத் தேர்வும் வெற்றி, தோல்வி இரண்டையும் அளிப்பது என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். தேர்வை எழுதும் பிள்ளைகளைவிட அவர்களின் பெற்றோர்களே அதிக அக்கறை எடுத்துக் கொள்வதால்தான் பாதகங்கள் அதிகம் விளைகின்றன. முதல் காரணம், பெற்றோர்கள் தங்கள் ஆசையை, விருப்பத்தைத் தம் பிள்ளைகளின் மீது திணிப்பது கூடாது. தேர்வுகளை எதிர்கொள்ள மனரீதியாகப் பிள்ளைகளைத் தயார்ப்படுத்துவதில் அக்கறை எடுத்துக் கொண்டாலே, நீட் தேர்வு மட்டுமின்றி எந்தத் தேர்வையும் சமாளிக்கும் மனவுறுதியைப் பெறுவார்கள்.

IAS, TNPSC தேர்வுகள் எழுதித் தோல்வியுறும் எந்தப் பிள்ளையும் தற்கொலை செய்து கொண்டதாகச் செய்திகள் இல்லை. நீட் தேர்வில் மட்டும் இந்தத் தற்கொலை முயற்சி எதனால் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். தோல்வியுற்றாலும் அடுத்தமுறை வெற்றி பெறலாம் என்ற மனத் தைரியத்தைப் பெற்றோர்கள் ஊட்ட வேண்டும். மருத்துவம் ஒன்றுதான் கல்வி என்ற மனப்பான்மையைப் பெற்றோர்கள் விட்டாலே போதும்; நீட் தேர்வு என்பது எல்லாத் தேர்வுகளையும் போன்றதுதான் என்ற மனநிலை உருவாகும்.

– **புலவர் கருமலைத்தமிழாழன்**, ஓசூர்.

மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வு என்பது சமூக அநீதி. அது ரத்து செய்யப்பட வேண்டும் என்று சொல்வது சரியானதுதான். ஏற்கனவே 12–ம் வகுப்புத் தேர்வு எழுதி அவர்கள் நிறைய மார்க்குகள் வாங்கி இருக்கும் பொழுது எதற்கு இன்னொரு தேர்வு. இதனால் மாணவர்கள் உடலாலும், மனதாலும் களைத்தும் சோர்வாகவும் போய்விடுவர். இப்படிப்பட்ட நிலைகள் வராமல் இருக்க நிச்சயம் இந்த நீட் தேர்வுமுறை ரத்துசெய்ய வேண்டியது அவசியம்.

இதற்கு முன் இது போன்ற நீட் தேர்வு இல்லாமல் தானே மருத்துவப் படிப்புக்கான மாணவர்களைத் தேர்ந்தெடுத்தனர். அப்படிப் படித்தவர்கள் இன்று நல்ல மருத்துவர்களாக இருக்கிறார்கள். நீட் தேர்வு என்பது முன்னேறத் துடிக்கும் மாணவர்களுக்கு ஒரு தடைக்கல். இதையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால், நீட் தேர்வை ரத்து செய்வது பலவிதத்தில் மிகவும் நல்லது.

– **உஷா முத்துராமன்**, திருநகர்.

நீட் தேர்வு என்றவுடன் தமிழ்நாட்டின் மாணவ, மாணவிகளை மூளைச் சலவை செய்து, பயத்தை உண்டாக்கிவிட்டார்கள். போதாக் குறைக்கு அரசியல்வாதிகள் நீட் தேர்வு தேவையில்லை என மக்களிடம் விளம்பரப்படுத்திவிட்டார்கள். இதனால் மாணவ சமுதாயத்தில் குழப்பநிலை உருவாகிவிட்டது. மாணவர்களை ஆசிரியர்களும் தாய், தந்தையர்களும் கட்டாயப் படுத்தி வெறியூட்டச் செய்து, அவர்களைக் கோழைகளாக உருவாக்கிவிட்டார்கள்.

நீட் தேர்வை விட்டால் என்ன... வேறு தேர்வு

வாசகர்களுக்குத் தீபாவளி நல்வாழ்த்துக்கள் !

மலராகப் பூக்க வேண்டிய ‘ஓம்சக்தி’, கொரோனா நோய்த் தொற்றால் பூக்க முடியாமல் போய்விட்டதில் ஒரு வருத்தம். உங்களோடு இந்த வருத்தத்தைத்தான் பகிர்ந்து கொண்டு வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

ஒவ்வோராண்டும் கடம்பப்பூப் போல மணம் கமழ தீபாவளி மலராக வெளிவரும் ‘ஓம்சக்தி’, இந்த ஆண்டு வழக்கமான மாத இதழாக மட்டுமே வெளிவந்துள்ளது. காரணங்கள் உங்களுக்குத் தெரியாதவை அல்ல !

– பொ–ஆர்.

கள் உள்ளனவே... என்று அவர்களிடம் எடுத்துக்கூறத் தவறிவிட்டார்கள். மேலும் இன்றுள்ள மருத்துவர்கள், மருத்துவம் செய்வதை மக்கள் சேவையாகக் கருதாமல் பணம் பறிக்கும் தொழிலாக மாற்றி விட்டார்கள். திறமையான மருத்துவர்களை உருவாக்க மருத்துவக்கல்வி அவசியமாகும். நீட் தேர்வினை வைத்து மாண வர்களைத் தேர்ந்தெடுப்பது முறையான செயல் பாடு ஆகும்.

– லிங்கம் சின்னசாமி, தாராபுரம்.

ஒரு திறமையான புத்திக் கூர்மையுடைய மாணவனை நீட் தேர்வு ஒரு போதும் பயமுறுத் தாது. ஏனெனில், அதைக் கண்டு அவன் அஞ்ச மாட்டான். ஒரு நல்ல டாக்டரை உருவாக்கும் நீட் தேர்வு குற்றமெனச் சொல்லும் அரசியல்வாதிகள், கல்வியை வியாபாரமாக்கத் துடிக்கின்றார்கள். இப்போது இருக்கும் டாக்டர்கள் பெரும்பாலும் பணம் சம்பாதிப்பவர்களாகவும், மனிதாபிமான மற்றவர்களாகவும் வலம் வருகின்றார்கள். புதிய இந்தியா உருவாக, அறிவிற் சிறந்த மருத்துவச் சிற்பிகள் உருவாக இந்த நீட் தேர்வு அவசியம்! அவசியம்! அவசியம்!

– கா.சித்ரா காமராஜ், கோவை.

பொறியாளர், மருத்துவர் முதலிய தொழில் முறைப் படிப்புக்களில் தரம் இருக்க வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. மேற்கண்ட படிப்புக்களில் தரத்தையும், திறத்தையும் உருவாக்குவதற்கும் வளர்ப்பதற்கும் 'நீட் தேர்வு அவசியமே. மேலும் இவ்விரு படிப்புக் களும் உலக அளவில் தரத்தில் போட்டியிட வேண்டியதாக இருப்பதையும் கவனத்தில் கொள்ளத்தான் வேண்டும். மேலும் சிக்கல்களைப் பொறுமையுடனும் பரிவுடனும் கையாளப்பட்டுத் தீர்க்கப்பட வேண்டும். கால அவகாசமின்றிக் கட் டாயமாகத் திணிப்பது சரியான அணுகுமுறை யாகாது.

கிராமப்புறத்தில் உள்ள மாணவர்கள் நீட் தேர்வுக்கான பயிற்சியைப் பெறுவதற்குச் சில பல லட்சங்களைச் செலவிட இயலாத நிலையில், பொருளாதாரக் குறைவால் மருத்துவக் கல்வி அவர்களுக்கு எட்டாக்கனியாகி விடுகிறது. மாநில அரசுகள் தேர்வுக்கான பயிற்சி மையங் களை அரசு செலவிலேயே தோற்றுவித்து, நியாய மான கட்டண விகிதங்களைப் பெற்றுக் கொண்டு மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க முனைதல் வேண்டும்.

– மேலை.தமிழ்க்குமரன், முத்தரசநல்லூர்.

நீட் தேர்வின் நன்மைகள்: இந்தியாவில் மருத்துவக் கல்விக்குப் பல்வேறு கல்வி வாரியங் களின் – மாநிலங்களின் AIPMT (All India Pre-medical Test), JIPMER முதலிய அரசு மற்றும் தன் னாட்சிக் கல்வி நிறுவனங்களின் நுழைவுத் தேர்வு கள் எனப் பல்வேறு சொந்த நுழைவுத் தேர்வுகள் இருந்தன. NEET - UG நுழைவுத் தேர்வு அவற்றை ஒரே பொது நுழைவுத் தேர்வாக்கியுள்ளது. இது மாணவர்களின் மன அழுத்தத்தைக் குறைக்கும். NEET நுழைவுத் தேர்வில் தேர்வடையும் மாணவர் இந்தியாவில் எந்த மூலையில் உள்ள எந்த மருத் துவக் கல்லூரியிலும் கல்வி கற்க வாய்ப்புண்டு. இடஒதுக்கீட்டைப் பாதிக்காது. நியாயமான, வெளிப்படையான மற்றும் மோசடியில்லாத தேர்வு முறையாக இருக்கும். இந்தியாவில் மாணவர்கள் CBSE, ICSI, IB மாநிலக் கல்வி வாரியங்கள் என வெவ்வேறு பாடத் திட்டங்களைக் கொண்ட நான்கு கல்வி வாரியக் கல்வி கற்று வரு கிறார்கள். எனவே ஒரு பொதுவான அடிப்படைக் கல்வியின் அடிப்படையில் பொதுத் தேர்வு தேவை.

தீமைகள் : CBSE பாடத் திட்டத்தின்படி நுழைவுத் தேர்வில் கேள்வி கேட்பது எப்படிச் சரியாக இருக்கும். தமிழகத்தில் நகர்ப்புறக் கல்விக்கும் கிராமப்புறக் கல்விக்கும் நடைமுறை யில் மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு உள்ளது. பல கிராமப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை, ஆய்வகப் பற்றாக்குறை உள்ளன. தவறான விடைகளுக்கு எதிர் (-/Minus) மதிப் பெண் என்பது கொடூரமான அணுகுமுறை. வேலைக்கான நுழைவுத் தேர்வில் 100% வினாக்கள் சிந்தனைக்கான வினாவாகவே இருக்கும். ஆனால் NEET-UG நுழைவுத் தேர்வு அப்படியில்லை. நியாயமான வெளிப்படையான மற்றும் மோசடியில்லாத தேர்வு முறையாக NEET-UG நுழைவுத் தேர்வு இல்லை. NEET-UG நுழைவுத் தேர்வு அவசியம். ஆனால் அதற்கு முன் சமமான கல்வித் திட்டம், சமமான கல்விச் சூழல், கலை வடிவமாகக் கற்பிக்கும் – கற்கும் சூழல், பதற்ற மில்லாத் தேர்வுமுறை மிகமிகக் கண்டிப்பாக அத்தியாவசியம்.

– எஸ்.பேச்சியப்பன் பாரதி, கோவை. ●

கட்டுரை



மாற்றங்கள் விவசாயிகளை மாற்றுமா?



செ. சரத்

மாற்றம் ஒன்றே மாறாதது. அந்த வகையில் இந்தியாவின் முதுகெலும்பாய்த் திகழும் விவசாயத்தில் சில மாற்றங்களுக்கு வழிவகுக்கும் பொருட்டு அண்மையில் மூன்று மசோதாக்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது ஆளும் மத்திய அரசாங்கம். சட்டமாகவும் ஆகிவிட்டது.

இதற்கிடையில், அந்தச் சட்டங்கள் தேவையற்றவை என்றும் மாநிலப் பட்டியலில் இருக்கும் விவசாயத்தைத் தங்களுக்கு ஏற்றவாறு மத்திய அரசாங்கம் மாற்றிக்கொள்ள நினைப்பது கூட்டாட்சிக்கு எதிரானது என்றும் எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டியதுடன், மாநிலங்களவையில் (ராஜ்ய சபை) இம்மசோதாக்களை நிறைவேற்றுவதற்குப் பெரும் எதிர்ப்புத் தெரிவித்து, விதிமுறை நூலை எல்லாம் கிழித்தெறிந்து அவையை முடக்கம் செய்தன. பின்பு, எப்படியோ குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதாக்கள் நிறைவேறின.

சரி, இங்குப் பலருக்கும் இருக்கும் குழப்பமே – மத்திய அரசாங்கம் சொல்வது போல் இச்சட்டங்கள் விவசாயிகளுக்கு ஆகச்சிறந்த விடிவெள்ளியாய் இருக்குமா? அல்லது எதிர்க் கட்சிகள் குற்றம்சாட்டுவது போல இச்சட்டங்கள் எந்த வகையிலும் விவசாயிகளுக்கும் விவசாயத்திற்கும் பயன்படாமல் போய்விடுமா? அதனை நாமும் சற்றே அலசிப் பார்ப்போம்.

அத்தியாவசியப் பொருட்கள் திருத்தச் சட்டம் 2020 - Essential Commodities (Amendment Act 2020) : அத்தியாவசியப் பொருட்கள் திருத்தச் சட்டத்தை எடுத்துக் கொண்டால், இந்தியாவில் வெங்காயம், பருப்பு முதலிய பொருள்களின் விலை உயரும் போது அவற்றை ஏற்றுமதி செய்யவும் சேமித்து வைக்கவும் அரசு அவ்வப் போது கட்டுப்பாடுகளை விதிக்கும்.

இப்போது வந்துள்ள சட்டத் திருத்தத்தின்படி, இம்மாதிரி கட்டுப்பாடுகளைப் பின்வரும் சூழலில்தான் விதிக்க முடியும். அதாவது, தானியங்களைப் பொறுத்தவரை, கடந்த ஐந்து ஆண்டுகளின் சராசரி விலையைவிட 50 சதவீதம் அதிகரிக்க வேண்டும். அதுவே தோட்டப் பயிர்களைப்


பொறுத்தவரை அவற்றின் விலை கடந்த 12 மாதங்களின் சராசரி விலையைவிட 100 சதவீதம் அதிகரிக்க வேண்டும். எனினும் இந்தக் கட்டுப்பாடு உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் நிறுவனங்களுக்குப் பொருந்தாது.

சாதகம் மற்றும் பாதகம் : விளை பொருள்களை உற்பத்தி செய்யவும், சேமித்து வைக்கவும், வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லவும் விற்பனை செய்யவும் விவசாயிகளுக்கு முழுச் சுதந்திரம் இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் அளிக்கப்படும் என்கிறது மத்திய அரசு. இதனால், இந்தத் துறையின் பொருளாதாரம் மேம்பட்டு, நேரடி அந்நிய முதலீடு விவசாயத் துறையில் கிடைக்குமெனவும், உணவு விநியோகச் சங்கிலியில் (Supply Chain) தேவைப்படும் குளிர்பதனக் கிடங்குகள் (Cold Storage House) போன்றவற்றைக் கட்டத் தேவைப்படும் முதலீட்டை இந்தச் சட்டம் எளிதாக்கும் என்பது சாதகங்களாகக் கருதப்படுகின்றன.

மேலும், திருத்தப்பட்ட சட்டத்தின் படி, இனிமேல் எவ்வளவு வேண்டுமானாலும் இருப்பு வைத்துக் கொள்ளலாம். எனவே, தற்பொழுது அது பெரும் வணிகர்களுக்கும் அவர்களின் நிறுவனங்களுக்கும் கட்டுப்பாடின்றிச் சேமித்து வைக்கவும், பதுக்கல் செய்வதற்கும் வழிவகை செய்துவிடும். இது நாளடைவில் பாதகமாக அமையும் என எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

அதேவேளையில், கடந்த காலத்தில் தனியார் நிறுவனங்களிடம் கோதுமையைக் கொள்முதல் செய்ய அனுமதித்ததன் விளைவு பதுக்கல்களுக்கு வழிவகுத்துள்ளது. ஆம், 2005–06 கால கட்டங்களில் பெருமளவு கோதுமையைத் தனியார் நிறவனங்கள் பதுக்கியதன் விளைவாக 5.5 மில்லியன் டன் கோதுமையை இந்தியா இருமடங்கு விலையில் இறக்குமதி செய்தது. அதன் பிறகு கோதுமையை நேரடியாக விவசாயிகளிடத்தில் இருந்து தனியார் நிறுவனங்கள் கொள்முதல் செய்யத் தடை விதிக்கப்பட்டது.

விவசாய விளைபொருள் வியாபாரம் மற்றும் வர்த்தகச் (மேம்பாடு மற்றும் எளிமைப்படுத்துதல்) சட்டம் 2020 - Farming Produce Trade and Commerce (Promotion and Facilitation) Act 2020 : இச்சட்டத்தைப் பொறுத்தவரை விவசாயிகளால் விவசாய விளைப் பொருள்களை மாநிலத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எந்த இடத்திலும் வியாபாரமும், வர்த்தகமும் செய்ய முடியும். இதன்மூலம், மாநில அரசுகளால் இயக்கப்படும் விவசாய ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு (Government Regulated Markets) வெளியிலும்



பொருட்களை விற்க முடியும். இதனால், விவசாயிகளுக்குத் தங்கள் உற்பத்திப் பொருள்களுக்குக் கூடுதல் விலை கிடைக்குமென அரசு கூறுகிறது.

சாதகம் மற்றும் பாதகம் : முக்கியமாக இந்தச் சட்டத்தின் மூலம் விவசாய விளைபொருள்களை எங்கு வேண்டுமானாலும் விற்கும் உரிமை ஏற்படுத்தப்பட்டாலும், விவசாய வர்த்தகத்தின் மீது மாநில அரசு கொண்டிருக்கும் கட்டுப்பாடு இல்லாமல் போகிறது.

இதில் வேறு மாநிலத்தைச் சேர்ந்த வியாபாரிகள், மற்றொரு மாநிலத்திற்கு வந்து எங்கு வேண்டுமானாலும் பொருட்களை வாங்கிச் செல்லலாம் என்பதால், ஒரு மாநிலத்தில் குறிப்பிட்ட ஒரு பொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டாலும், மாநில அரசால் ஏதும் செய்ய முடியாது என்கிற நிலைமை

இருப்பதாகச் சில மாநிலங்கள் குற்றம் சாட்டுகின்றன.

***விவசாயிகளுக்கு (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாப்பு) விலை உத்தரவாத ஒப்பந்தம் மற்றும் விவசாயச் சேவைகள் சட்டம்* 2020 - The Farmers (Empowerment and Protection) Agreement on Price Assurance and Farm Services Act 2020 :** விவசாயிகளுடன் எந்த மூன்றாவது நபரும் (தனியார் நிறுவனங்களும்) ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள இந்தச் சட்டம் வழிவகுக்கிறது. சுருக்கமாகச் சொன்னால், விவசாயம் சார்ந்த ஒப்பந்தங்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் சட்டரீதியான பாதுகாப்புக் கிடைக்கும்.

சாதகம் மற்றும் பாதகம் : இதன் மூலம் விவசாயிகள் பெரிய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது மட்டுமன்றி, நல்லதொரு தொழில்நுட்ப உதவியையும் பெற முடியும். மேலும் ஒப்பந்தம் செய்துகொண்ட விலைக்குக் கீழ் நிறுவனங்கள் கொள்முதல் செய்



தால் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளலாம். ஆகவே, இது விவசாயிகளுக்கும் வேளாண் நிறுவனங்களுக்கும் இடையே பாதுகாப்பான பந்தத்தை ஏற்படுத்துகிறது.

எனினும் ஒப்பந்தச் சாகுபடி முறையானது குறிப்பிட்ட தனியார் நிறுவனங்களின் இடுபொருட்களை வாங்கச் சொல்லியும், நன்கு விளைந்த தரமான பொருள்களை மட்டுமே கொள்முதல் செய்வார்கள் என்றும், நாளடைவில் அவர்களின் சொல்லுக்குக் கட்டுப்படும் வகையிலும் வழிவகை செய்துவிடும் என்று சில விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இச்சட்டங்களை எதிர்த்து பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் ஆங்காங்கே சில விவசாய அமைப்புகள் போராட்டங்களை நடத்தி வந்தன. மேலும், பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த ஹர்சிம்ரத் கவுர் மத்திய அமைச்சரவையில் இருந்து விலகியதும், இதுவரை வெளியே தெரியாமல் இருந்த விவசாயிகளின் போராட்டங்கள் ஊடகங்களின் பார்வையில் படும்படி செய்தன.

இதை அறிந்து கொள்வதற்கு முன் வேளாண் விளைபொருள் சந்தைக் குழு (Agricultural Product Marketing Committee - APMC) மண்டிகள் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

விவசாயிகளின் விளைபொருள்கள் நல்ல விலைக்கு விற்க வேண்டும் என்றும் அவை இடைத்தரகர்களிடம் செல்லாமல் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலைக்கு (Mininum Support Price - MSP) மட்டுமே வர்த்தகர்கள் கொள்முதல் செய்ய வேண்டும் என்னும் நோக்கத்தில் இந்த மண்டிகள் மாதிரி ஏ.பி.எம்.சி சட்டம் – 2003 மூலம் செயல்பட்டு வருகின்றன.

மொத்தம் நாடு முழுவதும் 7500 அரசாங்க மண்டிகள் உள்ளன. இம் மண்டிகளில் விவசாயிகள் தங்களின் பொருட்களை அம்மண்டிகளில் சான்றளிக்கப்பட்ட வர்த்தகர்களிடம் மட்டுமே விற்க முடியும். வர்த்தகர்களும் அந்த பொருள்களை வாங்குவதற்கு மண்டிக்கு வரி செலுத்த வேண்டும். மேலும் விற்பனை என்பது ஏலம் மூலம் நடைபெறும். ஒரு விவசாயி தங்கள் பகுதியில் உள்ள அரசாங்க மண்டியைத் தாண்டி வேறொரு மண்டிக்கு விளைபொருள்களைக் கொண்டு சென்று விற்பனை செய்ய முடியாது.

பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் நெல் மற்றும் கோதுமை விளைச்சல் அதிகம். விளைவிக்கப்பட்ட நெல் மற்றும் கோதுமைப் பண்டங்களை அரசாங்க மண்டிகளில்தான் விவசாயிகள் விற்பனை செய்வர். அதனை வாங்கிக் கொள்வதற்குச் சான்று பெற்ற வர்த்தகர்கள் / கமிசன் ஏஜெண்ட் (Arhtiyas) பலரும் இருப்பர்.

ராஜஸ்தான் மற்றும் இன்ன பிற மாநிலங்களில் வர்த்தகர்களுக்குப் பொருளின் மதிப்பில் மண்டி வரி 1% முதல் 2% சதவீதம் என்று இருக்கும் போது, பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் அவை 5 முதல் 8 சதவீதம் வரை இருக்கிறது. மேலும் அந்த வரிவிதிப்பு என்பது மண்டிகளில் இருந்து கொள்முதல் செய்து பொது விநியோகத் திட்டத்திற்குத் (Public Distribution System) தரும் உணவுக் கார்ப்பரேசன் கழகத்திற்கும் (Food Corporation of India) பொருந்தும். கடந்த ஆண்டு மட்டும் வரிகள் மூலம் பஞ்சாப் ஏ.பி.எம்.சி மண்டிகளில் வசூலான தொகை ரூ.6500 கோடி.

மேலும் கடந்த ஆண்டு குறைந்தபட்ச ஆதரவு விலையில் கோதுமைக்கு ரூ. 1925/குவிண்டால் என்ற கணக்கில் 201.14 லட்சம் டன்களும், நெல் ரூ.1835/குவிண்டால் என்ற கணக்கில் 226.56 லட்சம் டன்களும் பஞ்சாப் மற்றும் ஹரியானா மண்டிகளில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த வரவு கோடிக் கணக்கு ஆகும். அப்படிக் கொள்முதல் மூலமும் வரிகள் மூலமும் வரும் வருவாயை இழக்க எந்த மாநில அரசாங்கம்தான் விரும்பும்.

தற்போது திருத்தி அமைக்கப்பட்ட சட்டத்தின்படி, கொள்முதல் என்பது மண்டிகளுக்கு வெளியே நடைபெறும் போது எந்தவொரு வரியும் கிடையாது. அங்குக் குறைந்தபட்ச ஆதரவு விலைக்குக் கீழ் கொள்முதல் செய்யக்கூடாது என்று எந்தவொரு உத்தரவாதமும் கிடையாது. மேலும் கொள்முதலை எந்தவொரு தனியார் நிறுவனங்களும்



மேற்கொள்ளலாம். இதன்மூலம் அந்த மாநில அரசாங்கங்கள் பெரும் வருவாயை இழக்க நேரிடும்.

அதை விடுத்து அங்குள்ள விவசாயிகள் பலரும் அவர்களின் அவசரத் தேவைக்கு அந்த மண்டிகளில் உள்ள கமிஷன் ஏஜெண்ட்களிடம் முன்பணம் பெறுவதும் கொடுப்பதும் இந்தச் சட்டங்கள் மூலம் இல்லாமல் போய் விடும் என்று பெரும்பாலான விவசாயிகள் வேதனைத் தெரிவிக்கின்றனர். பஞ்சாப் மாநிலத்தின் ரூ.36,000 கோடி விவசாயக் கடன்களில் ரூ.12,000 கோடி கடன் என்பது 30,000 கமிஷன் ஏஜெண்ட்கள் மூலம் விவசாயிகளுக்குத் தரப்பட்டவை ஆகும்.

அதுனூடே அந்த மண்டிகளுக்கு வரும் வருவாய் என்பது மீண்டும் அந்த மண்டிகளின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஒருவேளை மிகப் பெரிய தனியார் நிறுவனங்கள் என்று வரும்போது அவை எங்களின் அவசரத் தேவைகளுக்குப் பணம் தருவார்களா என்பது கேள்விக்குறிதான் என்று அங்குள்ள விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர். நாளடைவில் தற்போது திருத்தம் செய்யப்பட்டுள்ள இந்தச் சட்டங்கள் ஏ.பி.எம்.சி மண்டிகளையும் அங்கு இருக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையையும் நீர்த்துப் போகச் செய்து விடும் என்பது எதிர்க்கட்சிகளின் பிரதான குற்றச்சாட்டு ஆகும்.

2006–ஆம் ஆண்டு பீகார் மாநிலம் ஏ.பி.எம்.சி மண்டிகளைக் கலைத்து விட்டுத் தனியார் நிறுவனங்களின் முதலீட்டை ஏற்படுத்தித் தனியார் சந்தைகளை உருவாக்கியது. அப்படித் தனியார் சந்தைகளின் பங்களிப்பு வந்தும் ஆகச் சிறந்த மாற்றம் உண்டாகி விடவில்லை. இன்னமும் வர்த்தகம்



புரிவோர் ஆண்டுதோறும் பொருள் களை பீகார் மாநிலத்தில் இருந்து பஞ் சாப் கொண்டு சென்றுதான் விற்பனை செய்கின்றனர். ஏனென்றால் ஏ.பி.எம்.சி மண்டிகளில் மட்டும்தான் குறைந்தபட்ச ஆதரவு விலை நிலவி வருகிறது.

தமிழ்நாட்டிற்கு இந்தச் சட்டங்கள் மூலம் பாதிப்பு உண்டா? : *தமிழ் நாட்டில் விவசாய ஒழுங்குமுறை விற் பனைக் கூடம் என்பது விவசாயத்தின் மூலம் உற்பத்தியாகும் பொருள்களை வாங்கவும், விற்கவும், முறைப்படுத்தவும் தமிழ்நாடு அரசால் 1987–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.*

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 268 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங் களும், 108 கிராமப்புறச் சேமிப்புக் கிடங்குகளும், 108 தரம்பிரிக்கும் மையங் களும் செயல்பட்டுச் வருகின்றன. நிலக் கடலை, புளி, எள், கரும்பு வெல்லம், நெல், பருத்தி, கேழ்வரகு, கம்பு, சோளம், வரகு, கொள்ளு, ஆமணக்கு, தேங்காய், மரவள்ளிக்கிழங்கு, உருளைக்கிழங்கு, துவரம் பருப்பு உள்ளிட்ட பொருள்கள் மறைமுக ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த விற்பனை யில் விவசாயி, வர்த்தகர், வேளாண் துறை அதிகாரி ஆகியோர் இருப்பார் கள். பொருட்கள் வாங்கப்பட்டவுடன் விவசாயிக்குப் பணம் அளிக்கப் பட்டுவிடும்.

எனவே, இந்தத் திருத்தப்பட்ட சட்டங்களின் மூலம் தமிழ்நாட்டிற்கு மிகப்பெரிய பாதிப்பு இல்லை என்றே கூறலாம். அதனையே நம் முதல்வரும் வழிமொழிந்து இருந்தார்.

மத்திய அரசாங்கத்தின் தெளிவற்ற பார்வை? : *இந்தச் சட்டங்களின் மீது போதிய விவதாம் இல்லாமல் ஏன் அவசர அவசரமாக மத்திய அரசாங்கம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது என்பதற்கு இன்னமும் பதில் கிடைத்த பாடில்லை.*

அதைவிடச் சட்டத்தின் ஷரத்து களில் எந்த இடத்திலும் ஏ.பி.எம்.சி மண்டிகளைக் கலைக்க மாட்டோம் என்றோ, அல்லது குறைந்தபட்ச ஆதரவு விலைக்குக் கீழாகக் கொள் முதல் தொடரும் என்றோ உத்தரவாதம் தரவில்லை. எனினும் அந்த இரு அம்சங்களும் தொடரும் என்று பிரதமர் முதற்கொண்டு அமைச்சர்கள் வரை அனைவரும் கூறியுள்ளனர்.

மேலும் இதுவரை அரசாங்க மண்டி களில் பொது விநியோகத் திட்டத் திற்காக நடைபெற்று வந்த கொள்முதல், இனிமேல் தனியார் நிறுவனங்களிடமும் இருக்குமா என்பதை இன்னமும் தெளி வாக மத்திய அரசாங்கம் முன் வைக்க வில்லை.

அதேபோல் தனியார் நிறுவனங்கள் கொள்முதல் மற்றும் இன்னபிற விவ சாயம் சார்ந்த நடைமுறைகளில் உள்ளே வந்தாலும், அரசாங்கம் எப்போதும் போல விவசாயம் சார்ந்து அனைத்து நடைமுறைகளிலும் பங்குபெறும் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லி இருந் தால், இன்னமும் கூடுதல் பலமும் நியாயமும் ஆளும் அரசாங்கத்திற்கு ஏகபோகமாகக் கிடைத்திருக்கும். ●

கட்டுரை



பரணியும் ஹைக்கூவும்





ஜப்பானில், அரண்மனைப் பிரபுக்கள் காதலை – இயற்கையைத் 'தன்கா' என்ற வடிவத்தில் பாடினர். பிற்காலத்தில் பிரபுக்களிடமிருந்து, கவிதை சராசரி மக்களிடம் வந்தபோது 'ரெங்கா'வாக வடிவெடுத்தது. ஒருவர் ஒரு கவிதை பாட, தொடர்ச்சியாய் இன்னொருவர் பாட, அதன் தொடர்ச்சியாய் மற் றொருவர் பாட எனச் சங்கிலித் தொடர்போல் சென்று கொண்டிருக்கும். இந்தக் கூட்டுறவுக் கவிதை 'ரெங்கா' என அழைக்கப்பட்டது.

ரெங்காவின் தொடக்கக் கவிதை யாக இருந்தது தான் 'ஹைக்கூ.' அவையடக்கம் போலவும், ஆரம்ப விறுவிறுப்புக்காகவும் ஒரு சிறிய காட்சியைச் சித்தரிக்கும் சின்னக் கவிதையாகத் தோன்றிய ஹைக்கூ, 15–ஆம் நூற்றாண்டில் ரெங்காவை விட்டுப் பிரிந்து சுயமாக இயங் கியது.

கோடு போட்டாற்போல் வரை யறுத்துச் சொல்ல முடியாவிட்டா லும், இயற்கையை முதன்மைப் படுத்தியது ஹைக்கூ எனலாம். ஒரு காட்சியைக் காட்டுவது ஹைக்கூ. அக்காட்சியிலிருந்து ஓர் உணர் வைப் பெறுவது அவரவர் மனோ பாவம் பொறுத்தது.


இதோ 'யமாசகி சோகன்' என்னும் ஜப்பானியக் கவிஞர் ஓர் அழகியக் காட்சியைக் காட்டும் ஹைக்கூ கவிதை.

"நிலாவே! நாங்கள்
உனக்கொரு கைப்பிடி போட்டுவிட்டால்
என்ன அழகிய விசிறி நீ!"

'மூலத்தில் உள்ள ஜப்பானியச் சொல் (Uchiwa) தட்டையான வட்ட மான விசிறியைக் குறிக்கும். மடக்கு விசிறியை (Ogi or Sensu) அன்று. இத் தகைய விசிறி, சீமாட்டி ஒருத்தியால்

12–ஆம் நூற்றாண்டில் உருவாக்கப் பட்டது' என்று விளக்கம் அளித் துள்ளார் கவிஞர் ஈரோடு தமிழன்பன், "ஜப்பானிய ஹைக்கூக்கள் 100" என்ற நூலில். யமாசகி சோகன் காலம் 1454 – 1552 என்கிறார் ஈரோடு தமிழன்பன், அதே நூலில்.

இந்த ஹைக்கூவைப் படித்த பின்னர் பவுர்ணமி நிலாவைப் பார்க்கும்போது, கைப்பிடி பொருத்து வதுபோல் கற்பனை செய்தால் விசிறிக் கொள்ளலாம் போலிருக்கும். அத்தனைப் பொருத்தமாய் அழகாய் இருக்கிறது.



***க**லிங்கத்துப் பரணியில் 'காடு பாடியது' பகுதியில் காட்டின் வெப்பத்தை வர்ணிக்கிறார் செயங் கொண்டார்.*

சிறகு விரித்த பருந் தின் நிழலும், சுடுகிறதே என்று அஞ்சி வனத்தை விட்டோ டும். ஓடும் நிழல் உண் டேயன்றி நிற்கும் நிழல் ஓரிடத்திலும் இல்லை.


"ஆடுகின்ற சிறைவெம்
பருந்தின் நிழல்
அஞ்சி, அக் கடு வனத்தை விட்டு
ஓடுகின்ற நிழல் ஒக்கும்;
நிற்கும் நிழல்
ஓரிடத்தும் உள அல்லவே"


ஈரோடு தமிழன்பன்

'வெயில் உறிஞ்சி விடும் என்று அஞ்சி மரத்தடியி லேயே ஒளிந்திருக்கும் நிழல், ஒருவேளை நீரின்றி வாடும் மரம் தன் நிழலைத் தானே உண்டுவிடலாம் என்று அஞ்சி மரத் தடி விட்டு ஓடிவிடுமாம்.'

"ஆதவம் பருகும் என்று நின்ற நிழல்
ஆங்கு நின்று குடிபோனது – அப்

கே.ஜி.ராஜேந்திரபாபு



பாதவம் புனல் பெறாது
உணங்குவன
பருகும் நம்மை என
வெருவியே"

இவைபோல் சில பாடல்களில் காட்டின் வெப்பத்தை வர்ணிக்கும் செயங்கொண்டார், இந்தப் பாடலில் நிலாவை விசிறியாக்குகின்றார்.

"விம்மும் கடுவிசை வனத்தின் வெம்மையினைக்
குறித்தன்றோ விண்ணோர் விண்ணின்
அம்முகடு முகில்திரை இட்டு, அமுதவட்ட
ஆலவட்டம் எடுப்பது அம்மா!"

'பாலை நிலத்தின் கொடிய வெயில் நெருப்பின் வெப் பத்தின் விசையை – வேதனையைச் சிறிதே னும் தணித்துக் கொள்வதற்காகத் தேவர்கள் முகிலி னைத் திரையாய்ப் போட்டுக் கொண்டு வட்ட நிலாவை விசிறியாகப் பிடித்து விசிறிக் கொண்டிருந்தார்கள்' என்பதாகும்.

பன்னிரெண்டாம் நூற் றாண்டில் கலிங்கத்துப் பரணி எழுதிய செயங்கொண்டார் என்னும் தமிழ்க் கவிஞருக்கு வட்டநிலா விசிறி போலத் தெரிந்திருக்கிறது. பதினைந் தாம் நூற்றாண்டில் வாழ்ந்த யமாசகி சோகன் என்னும் ஜப்பானிய ஹைக்கூ கவிஞர் 'கைப்பிடிப் போட் டால் நிலா விசிறியாகிவிடும்' என் கின்றார். என்னே, ஒன்றே போல் கற்பனை!

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான்
அன்புசெயல் வேண்டும்.
– வள்ளலார்

மலர் : 38 நவம்பர் 2020 இதழ் : 10

நிறுவனர் : **நா. மகாலிங்கம்**

ஆசிரியர் & வெளியிடுபவர்: **ம. மாணிக்கம்**

Editor & Publisher : **M. MANICKAM**

அச்சிடுபவர் : **து. ராஜ்குமார்**

Printer : **T. RAJKUMAR,**

Rukmani Offset Press

ருக்மணி ஆப்செட் பிரஸ்,
E-32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
கோவை – 641 021.

இணையாசிரியர் : **பெ. சிதம்பரநாதன்**

கதை, கவிதைகளில் வரும் பெயர்களும்,
சம்பவங்களும் கற்பனையே.

படைப்புகளைச் சுருக்கவோ, திருத்தி அமைக்கவோ
ஆசிரியருக்கு உரிமை உண்டு.

'ஓம் சக்தி'யில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகள்
அவற்றின் எழுத்தாளர்களுக்கு உரியவையே தவிர,
பத்திரிகை அவற்றிற்குப் பொறுப்பேற்காது.

தனிப் பிரதி ரூ.15/-
ஆண்டு சந்தா ரூ. 265/-
(தீபாவளி மலர் உட்பட)
ஆயுள் சந்தா ரூ. 2000/-
(10 ஆண்டுகள்)

சந்தா தொகையை "SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI" என்ற பெயரில் D.D.–யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி :
ஆசிரியர், ஓம் சக்தி
69–ஏ, ஆரோக்கியசாமி சாலை (மேற்கு),
ஆர்.எஸ்.புரம், கோவை – 641 002
போன் : 0422–4322471, 0422–4322423
வெளியிட்டோர் : **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com



சமையல்

உடுப்பி ரசம்

பொடிக்குத் தேவையான பொருள்கள் : *மிளகு : 1 ஸ்பூன், சிவப்பு மிளகாய் : 5, தனியா : 1 ஸ்பூன், வெந்தயம் : 1/4 ஸ்பூன், சீரகம் : 1 ஸ்பூன், பெருங்காயம் : சிறிதளவு, கறிவேப்பிலை : சிறிதளவு.*

ரசம் செய்யத் தேவையான பொருள்கள் : *நெய் : சிறிதளவு, கடுகு : 1/4 ஸ்பூன், பச்சை மிளகாய் : 1, தக்காளி : 1, புளி : சிறிதளவு, துவரம் பருப்பு : 1/2 கப், கொத்தமல்லி : சிறிதளவு, உப்பு : தேவைக்கேற்ப.*

செய்முறை :

1. மேற்கூறிய பொடிக்குத் தேவையான வற்றைச் சிவக்க வறுத்துப் பொடி செய்து கொள்ளவும்.


2. ஈயச் செம்பில் நெய்விட்டுக் கடுகு தாளித்து, கறிவேப்பிலை போட்டு, பச்சை மிளகாய் பிளந்து போட்டு, தக்காளி நறுக்கிப் போட்டு, புளிக் கரைசல் விட்டு, வெந்த துவரம் பருப் பைப் போட்டு உப்பு சேர்த்துக் கொதிக்க விடவும்.

3. பிறகு செய்து வைத்துள்ள ரசப் பொடியைத் தண்ணீரில் கரைத்து விடவும்.

4. கொதித்த பின் கொத்தமல்லி சேர்க் கவும். சுவையான 'உடுப்பி ரசம்' தயார்.

– லக்ஷ்மி ஹேமமாலினி,
சென்னை–24.

எடையைக் குறைக்குமா பேலியோ டயட்? 8



கட்டுரை

கோவை வி.ஜி.எம். செரிமான நல மருத்துவ நிபுணர் டாக்டர் வி.ஜி. மோகன் பிரசாத் அவர்களின் ‘நீங்களும் எடையைக் குறைக்கலாம்’ என்ற தொடர் இம்மாத ‘ஓம் சக்தி’ இதழோடு நிறைவுபெறுகிறது.

உடல் பருமன் என்பது ஒரு நோய். அதுதான் மற்றமற்ற நோய்களுக்கு மூலகாரணமாக இருக்கின்றது. ஆகவே, உடல் பருமன் என்பதில் நாம் உஷாராக இருக்க வேண்டும்.


அப்படியென்றால், நமக்கு உணவுக் கட்டுப்பாடு மிக அவசியம். அப்படியென்றால், உணவைக் கட்டுப் படுத்த நமக்கு நாக்குக் கட்டுப்பாடு மிகமிக அவசியம். அப்படியென்றால், நாக்கைக் கட்டுப்படுத்த நமக்கு மனக்கட்டுப்பாடு மிக மிக மிக அவசியம்.

உடல் பருமன் உள்ளவர்களுக்கு ஆரோக்கியம் குறைவு என்பதைவிட, ஆயுளும் குறைவு என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மூன்றாவதாக, உடல்பருமனாவதுகூட ஓர் அநாகரிகம் என்ற உணர்வு நமக்கு வந்தாலும் தவறில்லை.

இவற்றையெல்லாம் மனதில் கொண்டு, தமது 40 ஆண்டுக்கும் மேலான அனுபவத்தில் ஜீரணக் கோளாறுகளில் உள்ள நோய்களைக் குணப்படுத்துவது மட்டுமல்லாமல், செரிமானத்திற்குரிய உணவு, அதன் அளவு, அதன் தரம் ஆகியவற்றைப் பற்றி டாக்டர் வி.ஜி. மோகன் பிரசாத் ‘ஓம் சக்தி’ வாசகர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டியதற்கு அவருக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றி!

– இ.ஆர்.

***பே**லியோ டயட் என்பது உணவில் கார்போஹைட்ரேட் மற்றும் சர்க்கரையை முற்றிலும் தவிர்த்துப் புரதம், கொழுப்பு அதிகம் எடுத்துக் கொள்வதுதான் பேலியோ டயட்.*



ஒரு வகையில் பார்க்கப் போனால், இது ஆதி மனிதனின் உணவுப் பழக்கம். அவர்கள்தான் மீன், இறைச்சி, முட்டை, பழங்கள் முதலியவற்றை மட்டும் சாப்பிட்டு வந்தார்கள். அவர்களுக்கு உடல்பருமன், சர்க்கரை, ரத்த அழுத்தம், மாரடைப்பு, புற்று நோய் முதலிய நோய்கள் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. இன்றும் கானகத்தில் வாழும் பழங்குடி மக்களுக்குப்



டாக்டர் வி.ஜி. மோகன் பிரசாத்

புற்றுநோய், உடல்பருமன் முதலிய பிரச்னைகள் எதுவும் கிடையாது.

நாகரிகம் என்ற பெயரில் உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொண்ட மனிதர்கள்தான் நோய்களுக்கு ஆளாகிறார்கள் என்கிறது பேலியோ டயட். இதற்கு ஆதாரமாகக் காட்டு விலங்குகளைக் காட்டுகிறார்கள். அசைவம் சாப்பிடும் சிங்கம், புலி, ஓநாய் முதலியவை உடம்பைச் சிக்கென்று வைத்திருக்கின்றன. தாவர உணவு மட்டுமே சாப்பிடும் மாடு, யானை, காண்டாமிருகம் முதலியவையே குண்டாக இருக்கின்றன.

ஆதிகாலத்தில் இறைச்சி சாப்பிடுவது வழக்கமாக இருந்தாலும், தானிய உற்பத்தித் தொடங்கியதுமே சாப்பாட்டு முறை மாறிவிட்டது. மீண்டும் ஆதிகாலத்து முறையை மக்களுக்கு அறிமுகப்படுத்தியவர் பாண்டிங்.

1863–ஆம் ஆண்டு பாண்டிங் என்ற சமையல்காரர் எழுதிய டயட் அனுபவமே முதல் பேலியோ டயட் நூலாக அறியப்படுகிறது. கடுமையான உடல்பருமனால் பாதிக்கப்பட்டிருந்த பாண்டிங், தனது உணவு முறையை முழுமையாக இறைச்சிக்கு மாற்றியதும் எடை குறைந்தார். தனது அனுபவம் பிறருக்குப் பயன்படும் என்று எழுதிவைத்த நூலின் அடிப்படையில், பாண்டிங் டயட் கடைப்பிடிக்கப் பட்டது.

தினமும் அரை கிலோ இறைச்சி எடுத்துக் கொள்வதும் கொஞ்சம் காய்கறிகள் சாப்பிடுவதும்தான் பாண்டிங் டயட். ரொட்டி, சர்க்கரையை முற்றிலும் தவிர்க்க வேண்டும் என்பதுதான் இந்த டயட்டின் முக்கியமான அடிப்படை.

ஆனால் மாவுப்பொருள்கள், குளிர்பானங்கள் விற்பனையில் இறங்கிய பன்னாட்டு நிறுவனங்கள் இந்த டயட் முறையைக் குறை கூறின. கொழுப்பு குறைவான உணவே உடலுக்கு நல்லது என்றும் இறைச்சி, முட்டை, கொழுப்பு முதலியவை உடலுக்கு ஆபத்துத் தருபவை என்றும் விளம்பரம் செய்தன.

இந்த விளம்பரத் தன்மையை உலகின் அத்தனை நாடுகளும் அப்படியே பின்பற்றத் தொடங்கின. விளம்பரத்தை நம்பித் தானியங்களையும் பயிறுகளையும் அதிகம் எடுக்கத் தொடங்கியதால் நீரிழிவு, ரத்த அழுத்தம், உடல்பருமன், புற்றுநோய் உள்ளிட்ட ஏராளமான நோய்களுக்கு மனிதர்கள் அடிமையாகிப் போனார்கள்.

இப்போதும் துருவப் பகுதிகளில் வாழும் எஸ்கிமோக்கள் இறைச்சி, மீன் தவிர, வேறு எதையும் உட்கொள்வதில்லை. ஆனால், அவர்கள் உடல் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் ஆரோக்கியமாகவே இருக்கிறார்கள். இதனை ஏராளமான ஆராய்ச்சியாளர்களும் உறுதி செய்திருக்கிறார்கள்.

கொழுப்பு அதிகமுள்ள உணவுப் பொருள்களான இறைச்சி, நெய், முட்டை, தேங்காய் முதலியவற்றைச் சாப்பிடுவதால் மனிதனின் எடை அதிகரிக்காது. குறையவே செய்யும் என்பதுதான் இந்த டயட்டின் அடிப்படை.

மனிதர்கள் குண்டாவதற்குப் பேலியோ டயட் சொல்லும் காரணம் என்ன தெரியுமா? சர்க்கரை அதிகமுள்ள உணவுகள் சாப்பிடுவதால், ரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகரிக்கிறது. அதிகப்படியான சர்க்கரையைக் குறைப்பதற்காக இன்சுலின் சுரக்கப்படுகிறது.

இந்த இன்சுலின் ரத்தத்தில் உள்ள சர்க்கரையைக் கொழுப்பாக மாற்றித் தோலுக்கு அடியில் சேமிக்கிறது. ஒரு கட்டத்தில் இன்சுலின் போதுமான அளவு சுரக்க முடியாமல் போகும் போது, உடலில் சர்க்கரை அளவு அதிகரித்து நீரிழிவு நோயும், அதைத் தொடர்ந்து ஏராளமான நோய்களும் வரிசை கட்டுகின்றன.





சர்க்கரை அதிகமுள்ள உணவு சாப்பிடுவதைத் தவிர்த்து, கொழுப்பு அதிகமுள்ள இறைச்சியைச் சாப்பிடுவதால், ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிப்பதில்லை. அதனால் இன்சுலின் சுரக்கவோ, கொழுப்பு சேகரிக்கவோ உடலுக்குத் தேவையின்றிப் போகிறது. அதனால் நீரிழிவு, ரத்த அழுத்தம், உடல்பருமன் முதலிய பிரச்சினைகள் எட்டிப் பார்ப்பதில்லை.

இறைச்சி தவிர வேறு உணவுகள் குறைவாகச் சாப்பிட்டாலும் இன்சுலின் தொடர்ந்து சுரப்பதால், கொழுப்பு உருவாகி உடல் பருமன் அடைகிறது.

அதனால் உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்கள் உடற்பயிற்சி செய்வதாலோ, தானிய உணவுகள் எடுத்துக் கொள்வதாலோ, நிச்சயம் நல்ல பலன் கிடைப்பதில்லை. ஏனென்றால் உடற்பயிற்சி செய்வதால், இழக்கும் கலோரியைவிட அதிகமாக உணவின் மூலம் கலோரி எடுத்துக் கொள்கிறார்கள் என்பதுதான் உண்மை. பேலியோ டயட் முறையில் என்ன உணவுகள், எப்படிச் சாப்பிட வேண்டும் என்பதைப் பார்க்கலாம்.

அசைவ பேலியோ டயட் : இரவில் நீரில் ஊறவைத்த 100 பாதாம் பருப்புகளைக் காலையில் தோலுடன் சாப்பிட வேண்டும். மதியம் குறைந்தது நான்கு முட்டைகள் சாப்பிட வேண்டும். இதனை அவித்தும், ஆம்ஃபாயில் போட்டும் சாப்பிடலாம். ஆனால், நிச்சயம் மஞ்சள் கருவுடன் மட்டுமே உண்ண வேண்டும். மாலையில் ஒரு கோப்பைக் காய்கறியுடன் ஒரு கப் பால்.

இரவு கோழி, ஆடு, மாடு, பன்றி, மீன் என ஏதாவது ஓர் இறைச்சியை வயிறு நிரம்பும்வரை சாப்பிடலாம். தோலுடன் மட்டுமே சாப்பிட வேண்டும். சுட்டு, அவித்துச் சாப்பிடலாமே தவிர, எண்ணெயில் பொறித்துச் சாப்பிடக் கூடாது.

சைவ பேலியோ டயட் : அசைவம் போன்ற, காலையில் 100 பாதாம் கொட்டைகள் அல்லது பட்டர் டீ. மதியம் முட்டை எடுத்துக்கொள்வது நல்லது. முட்டை எடுத்துக்கொள்ள விரும்பாதவர்கள் காலிபிளவர், ப்ரோகோலி, முட்டைகோஸ் முதலியவற்றை எடுத்துக் கொள்ளலாம்.

மாலையில் ஒரு கோப்பைக் காய்கறியுடன் ஒரு கப் பால். இரவு நேரம் பனீர் மஞ்சூரியன், பனீர்பட்டர் மசாலா, பனீர் டிக்கா முதலியவற்றைப் பசி அடங்கும் வரை எடுத்துக் கொள்ளலாம்.

பேலியோ டயட்டில் என்ன சாப்பிடலாம் என்பதைவிட, என்ன சாப்பிடக் கூடாது என்பதைக் கண்ட

றிந்து விலக்குவது மிகவும் முக்கியம். சத்தான உணவாகக் கருதப்படும் நிலக் கடலை, சோயா, உருளைக்கிழங்கு, பீன்ஸ், சுண்டல், பச்சைப்பட்டாணி, கிழங்கு வகைகளை முற்றிலும் தவிர்க்க வேண்டும். அதேபோன்று நொறுக்குத் தீனிகள், வடை, பஜ்ஜி, இனிப்புகளைச் சாப்பிடவே கூடாது.

இப்படிச் சாப்பிட்டால் கொழுப்பு உடலில் கன்னாபின்னாவென்று உயர்ந்துவிடுமே என்று கவலைப்படு கிறீர்களா? நிச்சயம் கொழுப்பு கூடவே செய்யும். ஆனால், இந்தக் கொழுப்பு உடலுக்கு நன்மையே செய் யும் என்பதால், கவலைப்பட அவ சியம் இல்லை என்று உறுதிபடச் சொல்கிறது பேலியோ டயட்.

உண்மையிலே கொலஸ்ட்ரால் நல்லதுதானா? : கொலஸ்ட்ரால் உட லுக்குத் தேவையான, மிகமிக முக்கிய மான ஒரு மூலப்பொருள். குறிப்பாக, பெண்மையை அளிக்கும் ஈஸ்ட் ரோஜன், ஆண்மையை அளிக்கும் டெஸ்டோஸ்ட்ரான் ஆகிய ஹார் மோன் தூண்டப்படுவது கொழுப் பினால்தான்.

இன்னும் சொல்லப்போனால் ஹார் மோன்களுக்கான மூலப்பொருள் கொழுப்புதான். அதனால்தான் கொழுப்பை நம் உடல் தானே தயா ரித்துக் கொள்கிறது. கல்லீரல் இந்தப் பணியைச் செவ்வனே செய்து வருகிறது.

ஆனால் இறைச்சி, முட்டை, பால், மீன் முதலிய உணவுகளில் இருந்து கொழுப்பைப் பெற்றுக் கொண்டால், கல்லீரல் சிரமப்பட வேண்டிய அவ சியம் இல்லை. எந்தத் தாவர உணவி லும் கொழுப்பு கிடையாது என்ப தையும் புரிந்துகொள்ள வேண்டும்.

உடலுக்குத் தேவையான அளவு கொழுப்பு எடுத்துக்கொள்ளவில்லை என்றால் ஹார்மோன் குறைபாடு, மாரடைப்பு, மனநலக் குறைபாடு ஏற் படுவதற்கு வாய்ப்பு உண்டு. அதனால் தயங்காமல் கொழுப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். கொழுப்பு கார ணமாக ரத்தவோட்டம் தடைபடு வதற்கு வாய்ப்பு இல்லை.

ஆனால், ரத்த நாளங்களில் ஏதே னும் காயம் இருக்கும்போது, அதனை ஆற வைப்பதற்கு அதிகப்படியான கொழுப்பு சேர்வதால், ஒரு கட்டத்தில் ரத்தவோட்டம் தடைப்பட்டு இதய பாதிப்பு ஏற்படுகிறது. அதனால் ரத்த நாளங்களில் காயம், புண் போன்றவை ஏற்படாமல் பாதுகாக்க வேண்டுமே தவிர, கொழுப்பு அதிகரிப்பதைத் தடுக்க வேண்டியதில்லை. இந்தக் காயம் ஏற்படுவதற்கு முக்கியக் கார ணமாக இருப்பது தானியங்களில் இருந்து கிடைக்கும் மாவுச்சத்துதான். அதனால் தானிய உணவுகளை முற்றிலும் தவிர்க்கும்போது, காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புக் குறைகிறது.

அதுபோல் பேலியோ டயட்டைப் பொறுத்தவரை, உடற்பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை. மிதமான உடற் பயிற்சியே போதுமானது. கலோரி களைக் குறைப்பதற்காகக் கஷ்டப் பட்டுத் தினமும் ஒரு மணி நேரம் உடற்பயிற்சி செய்வதைவிட, அதிகப் படியாகச் சாப்பிட்டுக் கலோரிகளை ஏற்றிக் கொள்ளாமல் இருந்தாலே போதுமானது.

இந்தப் பேலியோ டயட்டைப் பின்பற்றி ஏராளமான நபர்கள் உடல் எடையைக் குறைத்துள்ளார்கள். அவர்கள் உடலைப் பரிசோதனை செய்து பார்க்கும்போது, எந்த நோயும் இல்லை என்பதும் நிரூபணம் ஆகி யுள்ளது. முன்பு சர்க்கரை நோயாளி யாக இருந்து, பேலியோ டயட் கடைப் பிடித்துச் சர்க்கரை நோயில் இருந்து விடுதலை பெற்ற சில நோயாளிகளைப் பார்த்து நான் வியந்திருக்கிறேன்.

எப்படியாயினும் உடல்எடை குறைவதே நல்லது. அந்த லட்சியத்தை அனைவரும் எட்டிப் பிடித்து, வாழ் நாள் முழுவதும் எல்லோரும் நலம் வாழ வாழ்த்துகிறேன்.

(முற்றும்)



சிருஷ்டி

குயவன்
மண்ணைப் பிசைந்து பொம்மைகள்
செய்து கொண்டிருந்தான்.
படைப்பின் எல்லா
வடிவங்களிலும் செய்து கொண்டிருந்தான்.
சிங்க வடிவில் இருந்த பொம்மை
மானைப் பார்த்துக் கர்ஜித்தது.
'நானே வலிமையுள்ளவன்...
நான் உன்னைப் புசிக்கப் பிறந்தவன்'
கர்வத்தில் பேசியது.

மான் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தது.
ஆனை வடிவில் இருந்த பொம்மை
சிற்றெறும்பைப் பார்த்துச் சிரித்தது.
'நான் எவ்வளவு பெரிய உருவமுடையவன்;
நீயோ மிகவும் சிறியவன்'
நையாண்டி செய்தது.
இப்படியாக ஒவ்வொரு பொம்மையும்
மற்றொரு பொம்மையைப் பார்த்து
மனம்போன போக்கில் பேசியது.

குயவன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.
திடீரென்று ஒருநாள்... பேய் மழை!

மழையில் –
எல்லா மண் பொம்மைகளும்
கரைந்து போய்விட்டன.

குயவன் மறுபடியும் மண்ணை ஒன்று சேர்த்து
பொம்மைகள் செய்ய ஆரம்பித்தான்.

சிங்க வடிவத்தில் இருந்த மண் மானாகவும்
மான் வடிவத்தில் இருந்த மண் சிங்கமாகவும்
ஆனை வடிவத்தில் இருந்த மண் எறும்பாகவும்
எறும்பு வடிவத்தில் இருந்த மண் ஆனை யாகவும்
மாறின.

மறுபடியும் ஒருநாள்... பேய் மழை!
மழையில் –
எல்லா மண் பொம்மைகளும்
கரைந்து போய்விட்டன.

குயவன் மறுபடியும் மண்ணை ஒன்று சேர்த்து
பொம்மைகள் செய்ய ஆரம்பித்தான்;
மறுபடியும் மழை பெய்யலாம்.



– இரா. பொன்னாண்டான்



கட்டுரை

மகா அலெக்சாண்டரை மீறிய மகா சாது!



அலெக்சாண்டர் காலத்தில் தந்தினி என்ற ஒரு சந்நியாசி இருந்தார். அப்போது அலெக்சாண்டர் இந்தியாவுக்கு வந்த காலம். சந்நியாசிகள் என்ற அரிதான மலர்கள் இந்தியாவில் மட்டுமே மலர்கின்றன. அதனால் “திரும்பி வரும்போது ஒரு சந்நியாசியை அழைத்து வர வேண்டும்” என்று அலெக்சாண்டரின் நண்பர்கள் அவனிடம் சொல்லி இருந்தார்கள்.

மேலும், “சந்நியாசி என்ற அந்த நிகழ்வு என்ன என்பதைப் பார்க்க வேண்டும். சந்நியாசி எதனால் ஆக்கப்பட்டிருக்கிறான் என்பதைப் பார்த்தே ஆக வேண்டும்” என்றார்கள்.

அலெக்சாண்டர் தன்னுடைய போர்கள், போராட்டங்கள், சண்டைகள் என்றே இருந்துவிட்டதால், அதை மறந்தே போய்விட்டான். ஆனால், திரும்பிப் போய்க் கொண்டிருக்கும்போது, ஏறக்குறைய இந்திய எல்லையைக் கடந்து கொண்டிருக்கும்போது, அவர்கள் சொன்னது நினைவுக்கு வந்தது. கடைசிக் கிராமத்தில் இருக்கிறான். அங்கே சந்நியாசி யாராவது இருக்கிறாரா என்று விசாரித்தான்.

அலெக்சாண்டரிடம் மக்கள், “சரியான நேரத்துக்குத்தான் வந்திருக்கிறீர்கள். நிறைய சந்நியாசிகள் இருக்கிறார்கள். ஆனால், வெகு அரிதான சந்நியாசி தந்தினி என்பவர் இப்போது இங்கேதான் இருக்கிறார். அவருடைய தரிசனம் உங்களுக்குக் கிடைக்கும். அவரை நீங்கள் போய்ப் பார்க்கலாம்” என்றார்கள்.

இதைக் கேட்ட அலெக்சாண்டர் சிரித்தான். “தரிசனத்துக்காக நான் இங்கே வரவில்லை. என்னுடைய வீரர்கள் போய் அவரை அழைத்து வருவார்கள்.

என்னுடைய தலை நகரத்துக்கு அவரைக் கொண்டு போவேன்” என்றான்.

“அது அவ்வளவு சுலபம் இல்லை” என்று அவர்கள் சொன்னார்கள்.

அலெக்சாண்டரால் நம்ப முடியவில்லை. இதி லென்ன சிரமம் இருக்கப் போகிறது? பேரரசர் களை எல்லாம் வென் றவன். ஒரு பிச்சைக் காரச் சந்நியாசியிடம் என்ன சிரமம் இருக்கப் போகிறது? என்று எண்ணி, தன் வீரர் களிடம் அவரை அழைத் துவரப் பணித்தான்.

தந்தினி, ஆற்றங்கரை யில் நிர்வாணமாக நின்றிருந்தார். வீரர்கள் அவரிடம் போனார்கள். “மாவீரன் அலெக் சாண்டரிடம் இருந்து வருகிறோம். தன்னோடு தன் நாட்டுக்கு வருமாறு உங்களை அழைக்கிறார். எல்லாச் சௌகரியங் களும் செய்து தருவார். என்னென்ன தேவையோ எல்லாம் செய்து தரு வார். ராஜாங்க விருந் தாளியாக இருக்கலாம்” என்றெல்லாம் சொன் னார்கள்.

நிர்வாணப் பக்கிரி சிரித்துக் கொண்டே, “போய் உங்களுடைய அரசனிடம் சொல்லுங் கள். ‘எவன் தன்னை மாவீரன் என்று சொல் லிக் கொள்கிறானோ, அவனிடம் மாண்பு இல்லை’ என்று சொல்லுங்கள். யாரும் என்னை எங்கேயும் கொண்டு போக முடி யாது. ஒரு சந்நியாசி ஒரு மேகத்தைப் போல முழுச் சுதந்திரமாகப் போகிறவர். நான் யாருக் கும் அடிமை இல்லை” என்று சொன்னார்.

அவர்கள், “அலெக் சாண்டரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட் டிருக்க வேண்டும். மிகவும் ஆபத்தானவர். முடியாது என்று அவரிடம் சொன்னால், அதைக் கேட்டுக் கொள்ள மாட்டார். அப்படியே உங்கள் தலையைக் கொய்து விடுவார்” என்றார்கள்.


அதற்கு சந்நி யாசியோ, “அவரை இங்கே அழைத்து வாருங்கள். நான் என்ன சொல்கிறேன் என்பது அவருக்குப் புரிந்தாலும் புரியலாம்” என்றார்.

அலெக்சாண்டர் அவரைத் தேடிப் போக வேண்டி வந்தது.

திரும்பி வந்த வீரர் கள், “அப்படிப்பட்ட வரை நாங்கள் பார்த் ததே இல்லை. அப்படி ஒரு பிரகாசம் அவரிடம். இன்னதெனத் தெரியாத ஏதோ ஒன்று அவரைச் சூழ்ந்திருக்கிறது. நிர் வாணமாக இருந்தார். ஆனால், அவர் பக் கத்தில் நிற்கும்போது அவருடைய நிர்வாணம் தெரியவில்லை. விட்டு விலகி வந்தபின்தான் அவர் ஏதும் உடுத்தி யிருக்கவில்லை என்பது தெரிகிறது. இந்த உலகை எல்லாம் மறக்க வைக்கும் அளவுக்கு அவரிடம் ஏதோ சக்தி இருக்கிறது. அவரிடம் ஏதோ ஒரு காந்த சக்தி இருக்கிறது. அவரைச் சுற்றி ஆழ்ந்த மோனம் குடி கொண் டிருக்கிறது.

“அவரைச் சுற்றி இருப்பதெல்லாம் அவர் அங்கே இருக்கும் ஆனந் தத்தைக் கொண்டாடிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அவரைச் சந்தித்தாக வேண்டும். ஆனால், அவருக்கு என்னவோ தொல்லை காத்திருக்கிறது என்று தான் படுகிறது. பாவம். யாரும் என்னை எங்கே யும் கொண்டுபோக முடி யாது என்கிறார். நான் யாருடைய அடிமையும் அல்ல என்கிறார்” என்று சொன்னார்கள்.

உருவிய வாளோடு அவரைச் சந்திக்க அலெக்சாண்டர் போனான். சந்நியாசி “வாளைக் கீழே போட்டு விடு. அதற்கு இங்கே எந்தப் பயனும் இல்லை. உறையில் போட்டுக் கொள். அதற்கு எந்த வேலையும் இங்கே இல்லை. என் உடலைத் தான் உன்னால் வெட்ட முடியும். அதைத்தான் நான் வெகு காலத்துக்கு



முன்பே கழித்துவிட்டேனே. உன்னுடைய வாள் என்னை வெட்ட முடியாது. எனவே அதை உறைக்குள் போட்டுக் கொள். குழந்தைத்தனமாக நடந்து கொள்ளாதே” என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

வாழ்வில் முதல் முறையாக இன்னொருவர் சொன்னபடி அலெக்சாண்டர் நடந்து கொண்டான். அவரிருக்கும் இடத்தில் இருந்ததால், தான் யார் என்பதை அவன் மறந்துவிட்டான். வாளை உறைக்குள் போட்டுக் கொண்டான்.

பிறகு அதைப் பற்றிப் பேசும்போது அலெக்சாண்டர் சொன்னது :

“அவ்வளவு அருமையான மனிதரை நான் பார்த்ததே இல்லை. சாவதற்குத் தயாராக இருப்பவரைக் கொல்வது சிரமம். அவரைக் கொல்வதில் பொருளில்லை. சண்டை போடுகிறவனைக் கொன்றுவிடலாம். அப்படிக் கொல்வதில் அர்த்தம் இருக்கிறது. ஆனால், சாவதற்குத் தயாராக இருக்கிறவனைக் கொல்ல முடியாது. இதுதான் என் தலை. வெட்டிவிடு என்கிறவரை வைத்துக் கொண்டு என்ன செய்வது?”

தந்தினி அலெக்சாண்டரிடம், “இதோ என் தலை. வெட்டி விடு. அது தரையில் உருளும் போது நீ பார்ப்பாய். உன்னோடு சேர்ந்து நானும் அது உருள்வதைப் பார்ப்பேன். நான் என்னுடைய உடல் அல்ல. நான் ஒரு சாட்சி” என்று உரைத்தார்.

ஞானி சர்வ சாட்சியானவர். அவர் தேகத்தை மறந்தவர். அவர் துன்பங்களைத் துச்சமாய் மதிக்கின்றவர். அவர் சலனமற்றுத் தெளிந்த சிந்தனையுடன் இருப்பதால், எந்தவித இடர்பாடும் அவரைத் தாக்குவதில்லை.

ஞானியின் தூய்மை, பயமின்மை, அவரின் பிரகாசம் ஆகியன போர்வீரனுக்கு அவரின் அருகிலிருந்தும், அவர் நிர்வாணமாய் இருப்பதையே அறிந்துகொள்ள முடியவில்லை. அவரின் ஆத்மபலம் அரசனையும் பின்வாங்கச் செய்கிறது.

மேற்சொன்னவற்றின் மூலம் ஞானிகள் எப்பொழுதும் ஆனந்தத்தில் இருப்பதையும், அவர்களின் வாக்குப் பொய்ப்பதில்லை என்பதையும், அவர்களின் திடமான ஆத்மபலத்தையும் அறிந்துகொள்ள முடிகிறது.

ஞானிகள் உலகப் பற்றற்றவர்கள், எதற்கும் அடிமைப்பட மாட்டார்கள். எந்த அவலத்திலும் சிக்கமாட்டார்கள். அன்பும் கருணையும் கொண்டு பிற ஜீவர்களுக்கு நன்மை செய்து கொண்டிருப்பதால், இறைத்தன்மை அவர்களிடம் பிரகாசித்துக் கொண்டிருக்கும். இதனால்தான் உலகப் பற்றுமிக்க சாதாரண மனிதர்களிடம் துன்பமும், அஞ்ஞானமும் ஞானிகளைத் தரிசித்தவுடன் சூரிய ஒளியின் முன் பனித்துளி போல் மறைந்துவிடுகிறது.

நம் வள்ளற்பெருமானார், சாதுக்கள் சார்பின் அவசியத்தைப் பற்றி உரைநடைப் பகுதியில் அன்பர்களுக்கு வரைந்த கடிதத்தில் அருளியுள்ளார்கள்.

“இங்ஙனம் சிவ பரம்பொருளை அனுபவித்தற்கு முக்கியம் ஜீவ காருண்யம், பாசவைராக்கியம், சிவபக்தி. இவை கிடைத்தற்கு முதற்கருவி சாதுக்கள் சார்பு. ஆகலின் அவசியம் சாதுக்கள் சார்பு வேண்டும்...”

– ‘வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு’ ஆகஸ்டு, 2020.

இம்மாத ராசி பலன்

"என்ன நடக்கலாம் என்பதை அனுமானிப்பவன் சோதிடன்
என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிப்பவன் இறைவன்!"

1.11.2020 அன்று கோள்கள் நிலை

செவ்வாய் (வ)	சந்திரன்	ராகு	
	13.11.2020 செவ்வாய்–வக்ர நிவர்த்தி 16.11.2020 சூரி.–விருச்சிகம் 16.11.2020 சுக். – துலாம் 20.11.2020 குரு – மகரம் 28.11.2020 புதன்–விருச்சிகம்		
சனி			
குரு	கேது	புதன் சூரியன்	சுக்கிரன்

மேஷம்



இம்மாதம் கிரக நிலைகள் உங்களுக்குச் சாதகமாக இல்லை. மாதத்தின் முற்பாதி ஓரளவு சாதகமான பலன்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால், மாதத்தின் பிற்பாதியில் சோதனைகள் ஏற்படும். எதிர்பாராத சம்பவங்கள், செலவுகள், உடல் நலிவுகள் ஏற்படலாம். மிகவும் கவனம் வேண்டும். செவ்வாய் 12–ஆம் வீட்டில் வக்ரம் பெற்றுச் சஞ்சரிப்பதால், வீட்டைவிட்டு வெளியில் செல்லும் முன் தேவையானவற்றை உங்களுடன் எடுத்துச் செல்ல மறந்துவிடாதீர்கள். அதுபோல் வீட்டைப் பூட்டிவைத்துப் பாதுகாப்புடன் வெளியில் செல்ல வேண்டும். தீயவர்களால் பிரச்னை வரலாம்.

சுப காரியங்கள் நிறைவேற நவம்பர் 20–ஆம் தேதி வரை அவகாசம் உள்ளது. அதற்குள் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். சுக்கிரன் நீசம் பெற்றுச் சஞ்சரிப்பதால், மனைவி, வாகனம், இதர ஸ்திரீகளால் அபிப்ராய பேதங்கள் ஏற்பட மார்க்கமுண்டு. ராகு 2–இல் சஞ்சரிப்பதால் அளந்து பேச வேண்டும். தேவையறிந்து செலவு செய்ய வேண்டும். சனி 10–இல் சஞ்சரிப்பதால் தொழில் துறையில் உங்கள் அந்தஸ்து குறைவுபடும்.

'ஜோதிடத் திலகம்'
க. தில்லையம்பலம்

ரிஷபம்



மாதத்தின் முற்பாதியில் குடும்பத்தில் குழப்பம், விரோதம், எதிர்ப்பு, கடன், வியாதி இவற்றால் சிலர் துன்பம் அடைவர். தொழில் உத்யோகத் துறைகளில் சிறிதளவு ஏற்றம் ஏற்பட்டாலும் எதிர்பார்ப்புகள் ஈடேறாது. மாதத்தின் பிற்பாதியில் இல்வாழ்க்கையில் நாட்டம் குறையும். சாதுக்கள், ஞானவான்கள் சந்திப்பு சிலருக்கு ஏற்படும். குரு 8–இல் சஞ்சரிப்பதால், 20–ஆம் தேதி வரை சிரமங்கள் நீடிக்கும். பின்னர் பயணங்கள், மாற்றங்கள், வாழ்க்கையில் திருப்பங்கள் ஏற்படும்.

சுக்கிரன் 5–இல் நீசம் பெற்றுச் சஞ்சரிப்பதால், சொற்ப சம்பத்து உண்டாகும். இளவயதினர் காதல் உணர்வுகளால் அதிகம் தூண்டப்படுவர். உங்கள் உடல்நலம் சிறிது பாதிக்கும். செவ்வாய் வக்ரம் பெற்றுச் சஞ்சரிப்பதால், சிலர் வாழ்க்கைத் துணைவரைச் சிறிது நாள்கள் பிரிய வேண்டும். சனி 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், தகப்பன் வர்க்கத்தாருடன் சுமூக உறவு தேவை. பெரியோர்களை அரவணைத்துச் செல்ல வேண்டும். ஜனன ஜாதகத்தை ஆய்வுசெய்து திருமணம் முதலிய

சுபகாரியங்களில் இறங்கலாம். ராசி மீது ராகு சஞ்சரிப்பதால் கவனம் தேவை.

மிதுனம்



இம்மாதம் முற்பாதியில் சலனமும் காரியத் தடைகளும் புத்திக் குழப்பமும் தவிர்க்க இயலாது. தொழில் உத்யோகத் துறைகளில் நிதர்சனமற்ற போக்குத் தென்படும். மாதத்தின் பிற்பாதியில் தொழில் துறையில் ஆறுதல் ஏற்படும். முயற்சிகள் பலிதமாகும். பொருளாதார அபிவிருத்தி ஏற்படும். சூரியன், கேது 6–இல் சேர்க்கை ஏற்படுவதால், உடல் உபத்திரவம் சிலருக்கு ஏற்படலாம். செவ்வாய் 10–இல் வக்ரம் பெற்றுச் சஞ்சரிப்பதால், 13–ஆம் தேதி வரை உங்களிடம் அதிகாரம் ஓங்கும். வேலை ஸ்தலத்தில் ஒருவிதக் கலக்கத்திற்கு ஆளாக நேரிடும்.

குரு 7–இல் சஞ்சரிப்பதால், 20–ஆம் தேதிக்குள் சுபகாரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். சிலருக்குத் திருமண வாய்ப்புகள் கிட்டலாம். புதிய சூழ்நிலைகளில் வாழ வேண்டிய நிலை சிலருக்கு ஏற்படலாம். ராகு 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், அடுத்து 1 1/2 ஆண்டுகள் குலதெய்வ வழிபாடு செய்து வந்தால், நல்ல பலன்களை அடைய அது வழிவகுக்கும். சனி 8–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், ஏற்கனவே சிலர் தங்கள் வேலையை இழந்திருக்கலாம். அல்லது இழக்க வேண்டிய சூழ்நிலை சிலருக்கு ஏற்படலாம். புதன் 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் முடிவெடுப்பதில் குழப்பம் ஏற்படும். சுக்கிரன் நீசம்பெற்று 4–இல் சஞ்சரிப்பதால் வாகன பீடை ஏற்படும்.

கடகம்



இம்மாதம் சூரியன் சுபச் செலவு, விரயம், அலைச்சல், உடல்நலிவு முதலிய பலன்களை மாதத்தின் முற்பாதியில் ஏற்படுத்தக் கூடும். மாதத்தின் பிற்பாதியில் புத்தி சலனம், பழமையான விஷயங்களில் நாட்டம், புத்திரவகை கவலையை ஏற்படுத்தலாம். எதிலும் தீர்க்கமாக முடிவெடுத்து செயல்பட வேண்டும். வீண் தடை, தாமதங்கள் உங்களை வருத்த மடையச் செய்ய வாய்ப்புண்டு. செவ்வாய் வக்ரம் பெற்று 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், எதையும் முழுமையாக அனுபவிக்க இயலாத சூழ்நிலையை ஏற்படுத்த வாய்ப்புண்டு. குரு 20–ஆம் தேதி வரை உங்களுக்குச் சிரமங்களைக் கொடுத்தாலும் பின்னர் மாற்றங்களை ஏற்படுத்தும் வாய்ப்புண்டு. புதிய சூழ்நிலைகள், மாற்றங்கள் ஏற்படக்கூடும்.

சனி 7–ஆம் வீட்டில் குருவுடன் சேர்க்கை பெற்று 1 ஆண்டு சஞ்சரிக்க இருப்பதால், கலப்பான யோகம் உண்டு. புதிய கூட்டுத் தொழில் சிலருக்கு ஏற்படும். வயதானவர்கள் உடல் நலிவை அடைவர். வயது குறைந்தவர்கள் இல்வாழ்க்கையில் சிக்கலை அடைவர். புதன் 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், சுயதொழில் செய்வோர் அபிவிருத்தி செய்ய செலவினங்களை மேற்கொள்ளலாம். ராகு 11–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், தக்க சமயத்தில் உதவி கிடைக்கும்.

சிம்மம்



சூரியன் மாதத்தின் முற்பாதியில் நீசம்பெற்று 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், தைரியம் குறைந்து காணப்படுவீர்கள். தொழில் உத்யோகத் துறைகளில் ஓரளவு அனுகூலம் காணப்படும். மாதத்தின் பிற்பாதியில் 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் அலைச்சல் மிகும். தேக நலம் கெடும். கவனம் தேவை. செவ்வாய் வக்ரம் பெற்றுச் சஞ்சரிப்பதால், வம்பு வழக்குகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம். பிறர் மீது போர் தொடுக்க மனம் தூண்டும். கட்டுப்பாடு அவசியம். குரு 20–ஆம் தேதி வரை நன்மையை ஏற்படுத்தலாம். பின்னர் 6–ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பதால் உறவினர் பகை, விரோதம், கடன், வியாதி முதலியவற்றை அடுத்த ஓராண்டில் சந்திக்கலாம்.

சனி 6–இல் சஞ்சரிப்பதால் எதையும் சமாளித்துத் துன்பங்களிலிருந்து விடுதலை பெற்று விடுவீர்கள். புதன் 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் செய்த தவறு ஒன்றை நினைத்து வருத்தம் அடைவீர்கள். சுக்கிரன் 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் மாதத்தின் முற்பாதியில் சுகம் சந்தோஷத்தை வழங்கக் கூடும். ராகு 10–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், தொழில் உத்யோகத் துறைகளில் அதிருப்திகரமான சூழ்நிலை நிலவும். 4–இல் கேது சஞ்சரிப்பதால் பெரியோர்களுக்கு நலிவுகள் ஏற்படலாம். புதிய காரியங்கள் வேண்டாம்.


கன்னி



இம்மாதம் சூரியன் அனுகூல மாகச் சஞ்சரிப்பதால் ஓரளவு நன்மைகளை அடையலாம். மாதத்தின் முற்பாதியில் குடும் பத்தில் மகிழ்ச்சியும் பிற்பாதி யில் நினைத்த காரியங்கள் வெற்றி பெறுவதும் புதிய முயற்சிகளில் பலிதமும் ஏற்படக் கூடும். செவ்வாய் 7–இல் வக்ரகதியில் சஞ்சரிப்ப தால், கணவன் – மனைவியிடையே தர்க்கங் களைத் தவிர்க்க வேண்டும். கூட்டாளிகள் கூட்டுத் தொழில் செய்வோர் எதிர்மறையாகச் செயல்பட வேண்டும். 20–ஆம் தேதி முதல் குரு 5–ஆம் வீட்டிற்குச் செல்வது நல்லதுதான். சுப காரியங்கள் நடைபெற வாய்ப்புண்டாகும்.

சனி 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் புத்திர வர்க்கத்தார் பற்றிய கவலையும் இருந்து வரும். வாக்கு ஸ்தானத்தில் 16–ஆம் தேதிக்கு மேல் சுக்கிரன் சஞ்சரிக்க இருப்பதால், பொருளாதார நன்மை உண்டு. உங்களது இனிமையான பேச் சாற்றலை வெளிப்படுத்தக் காரியம் சாதிப்பீர்கள். ராகு 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் வெளிதேசத் தொடர்புகள் நன்மை பயக்கும். 3–இல் கேது சஞ்சரிப்பதால் உங்களின் வசதி வாய்ப்புகள் வரும் 1 1/2 ஆண்டுகளில் கூடும். புது முயற்சிகளை மாதத்தின் பிற்பாதியில் தொடங்க நன்மையுண்டு.


துலாம்



சூரியன் மாதத்தின் முற்பாதி யில் ராசி மீது சஞ்சரிப்பதால் பற்பல சிந்தனைகள் ஏற்படும். குழப்பம் ஏற்படும். சிரசு வலி போன்றவை சிலருக்கு ஏற்படும். சூரியன் – புதன் சேர்க்கை ஏற் படுவதால், சிற்சில விஷயங் களில் உடனுக்குடன் முடிவெடுத்துச் செயல்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஒப்பந்தக் காலப் பணி செய்வோர், கலை, இலக்கியம், பிரசங்கம், போதனை முதலிய துறை களில் பணி செய்வோர் யோகமடைவர். செவ்வாய் வக்ரகதியில் சஞ்சரிப்ப தால் வாழ்க்கைத் துணைவருடன் அவ்வப்போது சர்ச்சைகள் தோன்றும்.

சனி 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் குடும்பத் தில் அமைதிக் குறைவு ஏற்படும். 20–ஆம் தேதிக் குப் பின் குரு நீசம்பெற்று 4–இல் சஞ்சரிக்க இருப் பதால் குழப்பம் அதிகரிக்கலாம். 2–இல் கேது சஞ்சரிப்பதால் பொருளாதார பிரச்சனைகள் ஏற்படும். முதலீடுகள் செய்வதில் கவனம் வேண்டும். தீயவர்கள் உங்கள் முதலீடுகளைக் கபளீகரம் செய்துவிடுவர். ராகு 8–இல் சஞ்சரிப் பதால் எதிர்பாரா தனப்பிராப்தி ஏற்படும். உங் களுக்குப் பிடிக்காத இடத்தில் பணிசெய்ய வேண் டிய நிலை ஏற்படலாம். அல்லது வாழ வேண்டிய நிலை வரலாம். சுக்கிரன் 16–ஆம் தேதி வரை நீசம் பெற்றுச் சஞ்சரிப்பதால், சிலர் தங்கள் ஆடம்பரப் பொருள்களைப் பின்னப்படுத்துவர்.

விருச்சிகம்



மாதத்தின் முற்பாதியில் சுப விரயம், சுபச்செலவு, பயணம் முதலியவை உண்டாகும். மாதத் தின் பிற்பாதியில் பற்பல சிந் தனைகளால் மனம் அல்லல் படும். தொழில் சம்பந்தமாகப் புதிய சிந்தனைகள் உருவாகும். 16–ஆம் தேதிவரை சுக்கிரன் லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பயணங்களால் செலவு உண்டு. புதன் 12–ஆம் வீட்டில் சஞ்சரிப் பதால், தொழில் உத்யோகத் துறைகளில் சிறப்பு இருக்காது. அடிக்கடிக் குடும்பத்தைச் சிலர் பிரிந்து வாழ நேரிடும். 20–ஆம் தேதி வரை குரு வாக்கு ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் தனவரவு உண்டு. சுப காரியங்களில் ஈடுபாடு கொள்ளலாம்.

பின்னர் 3–ஆம் வீட்டில் குரு நீசம் பெறுவ தால் கெட்ட பெயரை ஏற்படுத்தும். தங்களுக்குத் தெரியாத தொழில் துறைகளில் இறங்கி நட்டம் அடைவீர்கள். சிலர் அவசரப்பட்டுத் தங்கள் வேலையையே விட்டுவிடுவார்கள். சனி 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் துணிச்சலான சில நடவடிக் கைகளால் உங்களின் எண்ணங்களை ஈடேற்றிக் கொள்வீர்கள். ராசி மீது கேது சஞ்சரிப்பதால் உள் ளுணர்வு ஆற்றல் அதிகப்படும். ராகு 7–இல் சஞ் சரிப்பதால் மாற்று மதக்காரர்களுடன் கவனமாகப் பழக வேண்டும்.

தனுசு



இம்மாதம் முற்பாதியில் சூரியன் 11–இல் சஞ்சரிப்பதால் நட்பு வட்டாரம் அதிகப்படும். மாதத்தின் பிற்பாதியில் விரயம், அலைச்சல் உண்டாகும். செவ் வாய் வக்ரம் பெற்றுச் சஞ்சரிப் பதால் தேவையற்ற செலவினங் கள், கோபதாபங்கள் உங்கள் இயலாமையால் ஏற்படலாம். சுக் கிரன் 10–இல் நீசம் பெற்று 16–ஆம் தேதி வரை சஞ்சரிப்பதால் ஸ்திரீகளால் பிரச்சினைகள் வர லாம். தொழில் ஸ்தலத்தில் கவனம் தேவை. விவ காரங்கள் வேண்டாம். 16–ஆம் தேதி முதல் லாபஸ் தானத் தில் சுக்கிரன் சஞ்சரிப்பதால் பெண்களால் ஆதாயம் ஏற்படும்.

புதன் 11–இல் சஞ்சரிப்பதால் வாழ்க்கைத் துணைவர் மூலம் சிலர் நன்மை அடைவர். தொழில் பிரமுகர்கள் நட்பால் சில காரியங்கள் ஈடேறும். ராகு 6–இல் சஞ்சரிப்பதால் வசதி வாய்ப்புகளை அதிகப்படுத்திக் கொள்ள நல்ல கட்டங்கள். 12–இல் கேது சஞ்சரிப்பதால் சில ருக்கு ஐஸ்வர்ய பிராப்தி அடுத்த 1 1/2 ஆண்டு களில் கிட்டும் வாய்ப்புண்டு. குரு 2–ஆம் வீட்டில் 20–ஆம் தேதி முதல் சஞ்சரிக்க இருப்பதால் சுப காரியங்கள் இந்த ஆண்டு நடைபெறலாம். தனவரவு, குடும்ப அபிவிருத்தி ஏற்படும். பிறரைப் பராமரிக்கும் வாய்ப்பு ஏற்படலாம். புது முயற்சி களை மாதத்தின் முற்பாதியில் தொடங்க நன்மை யாகும்.

மகரம்



மகர ராசிக்காரர்களுக்குச் சூரியன் நல்ல நிலையில் சஞ் சரிப்பதால், இம்மாதம் சாதக மான பலன்களை எதிர்பார்க்க லாம். மாதத்தின் முற்பாதியில், தொழில்வழி பிரச்சினைகள் ஏற்பட்டாலும் நன்மையும் உண்டு. உங்கள் எண்ணம் ஈடேறும். மாதத்தின் பிற்பாதி யில் ஒருசிலர் தெரிந்தே ஏமாறக்கூடும் அல்லது நண்பர்கள் எதிராக நடந்து கொள்ளவும் கூடும். புதன் 10–இல் சஞ்சரிப்பதால் கலை, இலக்கியம், போதனைத் துறையில் இருப்பவர்கள் புகழ் அடைவர். சிலருக்குச் சன்மானம் கிட்டும்.

சுக்கிரன் 16–ஆம் தேதி வரை நீசம் பெற்று 7–இல் சஞ்சரிப்பதால் சிலர் தொலைதூரத் தொடர்புகள், தர்ம காரியங்கள், ஆன்மீகப் பணி கள் மூலம் நற்பெயரை அடைவர். வாழ்க்கைத் துணைவர் தன் பிறந்த வீட்டிற்குச் செல்ல விரும்பக் கூடும். ராசி மீது குரு வரும் 1 ஆண்டு நீசம் பெற்றுச் சஞ்சரிக்க இருப்பதாலும் சனி ராசி மீது சஞ்சரிப்பதாலும் இந்த ஆண்டு சோதனை மிக்கது. உடல் நலத்தில் அக்கறை வேண்டும். நீங்கள் ஜெயலில் இருப்பதைப் போன்ற உணர் வுடன் சிறிது காலம் இருப்பீர்கள். இளவயது தம்பதிகள் கருத்து வேற்றுமையால் பிரியக்கூடும். ராகு 5–இல் சஞ்சரிப்பதால் உயிரியல் படிக்கும் மாணவர்கள் சாதனை செய்வர்.

கும்பம்



இம்மாதம் முற்பாதி திருப்திகரமானதாகக் காணப்படவில்லை. காரியத் தடைகள் ஏற்படும். எச்செயலிலும் கவனமுடன் இருக்க வேண்டும். புதன் சேர்க்கை இருப்பதால், எதையும் இருந்தும் அனுபவிக்க இயலாமல் போகலாம். சன்மார்க்க நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேணடும். மாதத்தின் பிற்பாதியில் தொழில்வழி அனுகூலம் உண்டு. நினைத்த காரியம் நிறைவடையும். 16–ஆம் தேதி வரை 8–இல் சுக்கிரன் சஞ்சரிப் பதால் வாகனப் பீடை ஏற்படும். தாய், தந்தையருக்குக் கஷ்ட பலனை உண்டாக்கும். வாக்கு ஸ்தானத்தில் செவ்வாய் வக்ரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் தண்டச் செலவுகள் ஏற்படும். ஒரு சிலருக்குக் காலில் உபாதை ஏற்படும். அல்லது கண்களில் உபாதை ஏற்படும். ராகு 4–இல் சஞ்சரிப்பதால் பயணங்களில் கவனம் தேவை. நாற்கால் பிராணிகளிடம் எச்சரிக்கை அவசியம்.

சனி 12–இல் சஞ்சரிப்பதால் முதலீடுகள் செய்யலாம். பிற்காலத்தில் பயன் ஏற்படும். 20–ஆம் தேதி முதல் குரு 12–இல் நீசம் பெறுவதால் தர்ம காரியங்களில் செலவு செய்ய நேரிடும். குழந்தைகளால் அடுத்த ஓராண்டு சிரமங்கள் ஏற்படலாம். சுபகாரியங்கள் ஈடேறாது. சுபச் செலவுகள் ஏற்படும். கேது 10–இல் சஞ் சரிப்பதால் அதிகாரம் ஓர் எல்லைக்குள் இருக்க வேண்டும். அதிகார துஷ்பிரயோகம் ஆபத்தில் முடிந்துவிடும்.

மீனம்



சூரியன் மாதத்தின் முற்பாதி யில் எதிர்பாராத செலவுகளை ஏற்படுத்தக் கூடும். எதிர்பாராத சம்பவங்களும் ஏற்படலாம். புதனுடன் சேர்க்கை பெற்றுச் சூரியன் சஞ்சரிப்பதால் சில துறைகளில் தனித்துவமும், நிபுணத்துவம் பெற்றவர்கள் யோகமடைவர். மாதத்தின் பிற்பாதியில் தடைகள் ஏற்படும். பெற்றோருக்கு ஆகாது. பிரசங்கம், போதனை, ஆன்மீகம் தொடர் புடைய பணிகள் செய்வோர் சிறப்படைவர். சுக் கிரன் 7–இல் நீசம் பெற்றுள்ளதால், இச்சைகள் எதுவாயினும் கட்டுக்குள் இருக்க வேண்டும். இல்வாழ்க்கையில் சிலர் எதிர்ப்புகளைச் சந்திப்பர்.


குரு 11–இல் 20–ஆம் தேதி முதல் சஞ்சரிக்க இருப்பதால், பெரியோர், அந்தணர், தனவந்தர்கள், பதவியிலிருப்போர் நட்பால் நன்மைகளை அடுத்த ஓராண்டுக்குள் அடைவீர்கள். சனி 11–இல் சஞ்சரிப்பதால் தொழில் உத்யோகம் சிறப்படையும். நானாவித உதவிகள் கிடைக்கும். ராகு 3–இல் சஞ்சரிப்பதால் துணிச்சலான காரியங்களால் வெற்றிகள் பல தேடிவரும். செவ்வாய் ராசி மீது சஞ்சரிப்பதால் வீண் கோபதாபங்கள் ஏற்படும். சினம் தவிர்ப்பது நல்லது. சுப காரியங்கள் இந்த ஆண்டு நடைபெற வாய்ப்புண்டு. ●

ஆன்மிகம்

தில்லை விளாகம் இராமபிரான் திருக்கோவில்

மு. சண்முகம்





தில்லை விளாகம் இராமர் கோவிலின் முகப்பு

கவிச்சக்கரவர்த்தி கம்பரது இராம காவியம் வாயிலாக இராமனைப் போற்றித் துதிக்கத் தெரிந்த தமிழ் மண்ணில் காவிரிக் கரையில்தான் அவனுக்குக் கலை நயத்துடன் வடிவமைக்கப் பட்ட சிலைகளும், படிமங்களும் பெருமளவில் காணக்கிடக்கின்றன. அதனால்தான் அர்ச்சனையின்போது கூட, "காவிரி தீர ரஸிகாய நம ஓம்" என்னும் மந்திரச் சொல் வழக்கில் வந்துவிட்டது போலும். இத்தகு தெய்வீகத் தன்மை வாய்ந்த இடங்களில் திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்திலுள்ள தில்லை விளாகம் சிறப்பிடம் வகிக்கிறது. இங்குள்ள திருக்கோயிலில் காணப்படும் இராமச் சந்திரமூர்த்தி, சீதை, இலக்குவன், அனுமன் ஆகிய விக்கிரகங்கள் 1862–ஆம் ஆண்டில் கண்டெடுக்கப் பட்டவை.

ஒரு நிலையில் 'தமிழ்த் தாத்தா' உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் இதையே திருச் சித்ரகூடம் என்னும் இருபத்து மூன்றாவது திவ்யதேசம் என்று தீர்மானித்திருக்கிறார். பிறகுதான் அது தில்லைச் சிற்றம்பலத்துள் இருக்கும் கோவிந்தராஜர் சந்நிதி என்று முடிவாகியிருக்கிறது. பரத, சத்துருக்கனர்களோடு பட்டாபிஷேக நாயகனாக, அமர்ந்த திருக்கோலத்தில் இல்லாமல் சீதை, இலக்குவன் சமேதராக மாத்திரம் இராமர் நின்றருளும் ஆலயங்களை 'சித்ரகூடம்' என்று கூறுவது வழக்கம். அதனால் ஏற்பட்டதே இந்தக் குழப்பம்.

இராமபிரான் கோயில் கொண்டருளும் இந்தத் தில்லை விளாகம் என்னும் ஊர் திருத்துறைப்பூண்டி – பட்டுக் கோட்டை நெடுஞ்சாலையில் முத்துப்பேட்டைக்கு அருகிலுள்ளது. மன்னார்குடியிலிருந்தும் முத்துப் பேட்டை வழியாகச் செல்லலாம். ஊரின் மையத்தில் அமைந்துள்ளது திருக்கோயில்.

கோயிலுக்குச் செல்லும் தெருவின் முகப்பில் அழகிய தோரணவாயில். அதன் மேற்பகுதியில் இராமர் சீதையுடனும், இலக்குவனுடனும் வில்லேந்தியவாறு நிற்கும் சுதை வடிவிலான திருக் கோலம். வீதியின் முடிவில் திருக்கோயில். முன் கோபுரமென்று பெரியதாக ஒன்று மில்லை. சாதாரணமாகக் காணப்படும் நுழைவுவாயில்

வழியாகக் கோயிலின் உள்ளே சென்ற தும் கருவறையின் மீது உயர்ந்து நிற் கும் விமானம் தெரியும். இக்கோயில் எழுந்ததற்குச் சுவையான வரலாற்றுப் பின்னணி உள்ளது.

கோபாலகிருஷ்ணய்யர் என்றொரு பொறியாளர். அவரது மனைவி தில்லை விளாகத்தில் இராமர் கோயில் கட்டுவதற்கென்று தனது கணவரிடம் அறுபதாயிரம் ரூபாய் கொடுத்து வைத்திருந்தார்.

திடீரென்று அந்த அம்மையார் காலமாகிவிட்ட பிறகு, அத் தொகையை அப்படியே முழுதும் கோயில் திருப்பணிக்குச் செலவழிக்க மனமில்லாத அவரது கணவர், பத் திரம் எழுத நேர்ந்தபோது, ஆறாயிரம் கொடுத்தால் போதாதா என்று அப்படியே எழுத ஆரம்பித்தாராம்.

அதில் எண்ணால், எழுத்தால் என்று இருவிதமாகத் தொகையைக் குறிப்பிடுகின்ற போது, முதலில் எண் ணால் ரூபாய் ஆறாயிரம் எழுதப் போனவர் தம்மையறியாமல், மூன்று சைபர்களுக்குப் பிறகு நாலாவதாக இன்னொரு சைபரும் போட்டுவிட் டாராம். பிறகுதான், தான் எண்ணி யதற்குப் பத்து மடங்கு அதிகமாகத் தனது மனைவி விரும்பிய தொகை யையே போட்டுவிட்டோமே என்று



உ.வே. சாமிநாதய்யர்

அவருக்குத் தெரிந்திருக்கிறது. அதனை மாற்ற விரும்பாமல், இராமபிரான் சித்தம் எனக் கருதி அறுபதாயிரம் ரூபாயையும் கோயில் திருப்பணிக்குச் செலவிட்டிருக்கிறார்.

அதன்பின்னர், சில ஆண்டுகள் சென்ற பிறகு, 1892–ஆம் ஆண்டில் குடியானவனொருவன் அம்பல வூருணி அருகில் நிலத்தைத் தோண்டியபோது, தில்லை விளாகம் என்ற பெயர் ஏற்படக் காரணமான நடராசரின் விக்கிரகம் அம்பாளுடன் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. அதைக் கொண்டு நாட்டுக்கோட்டை நகரத் தார் நடராஜப் பெருமானுக்கான திருக்கோயிலை இராமர் கோயிலை யொட்டியவாறு கட்டியுள்ளனர்.

சைவமும், வைணமும் இணைந்த வாறு இருக்கும் இத்திருக்கோயிலைச் சுற்றியுள்ள மாடவீதிகள் விசால மானவை. பராமரிப்புதான் போதிய அளவில் இல்லை.

இராமர் கோயிலின் பின்புறமுள்ள ராமதீர்த்தம் என்ற புஷ்கரணிக்கு நெடுங்காலமாகவே 'நல்ல பிள்ளை பெற்றாள் குளம்' என்னும் பெயர் வழங்கி வருகிறது. நல்ல பிள்ளை பெற் றாள் என்பது இராமரது அன்னை கௌசல்யா தேவியைக் குறிப்பதாகும். 'கௌஸல்யா ஸுப்ரஜா' என்ற விசுவாமித்திரரின் வேதவாக்கால் "கௌஸல்யா சுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே" என்றுதானே நாமும் இராமபிரானைத் துதித்துக் கொண்டிருக்கிறோம்? இதற்குக் 'கௌஸல்யா தேவியின் நல்ல பிள்ளை' என்று பொருள். எனவே இத்திருக்குளம் வல்வில் இராமனைப் பெற்றவளான கௌசல்யா தேவியை நினைவூட்டுகின்ற வகையில் 'நல்ல பிள்ளை பெற்றாள் குளம்' என்று அழகிய தமிழில் அழைக்கப்படுவது மிகவும் பொருத்தமே.

கருவறையிலுள்ள இராமர் உருவம்



தில்லை விளாகம் கோவில்
கருவறை விமானம் – பின்புறத் தோற்றம்

அதிரூப சௌந்தரியம் வாய்ந்தது. சுமார் ஐந்தடி உயரத்தில் நிற்கின்ற கோலத்திலுள்ள இராமபிரானின் அழகைக் காண இருகண்கள் போதாது. தேகத்தில் நரம்புகளும், ரேகைகளும் கூடத் தெரிகின்ற அளவிற்கு அதிநுட்ப வேலைப்பாடு. இராமன் என்ற நல்ல பிள்ளையைப் பெற்றவளாகிய கௌசல்யா தேவி வனவாசத்தின்போது, தனது பிள்ளைக்குத் தீங்குகள் வராமல் காக்கும் பொருட்டு இடதுகை மணிக் கட்டில் ரட்சை அணிவித்திருப்பது மிகவும் அற்புதம்.

இங்குள்ள சீதாதேவி, இலக்குவன், அனுமன் படிமங்கள் யாவும் கலை நுணுக்கம் வாய்ந்தவை. அனுமன் சிலா வடிவம் வீரத்தின் சாயலின்றிப் பணிவுடன் பக்தியின் அடையாள மாகத் திகழ்கிறது. மிகவும் அடக்க மாக, இடது கரத்தினை உடம்பினை ஒட்டியவாறு தொடையில் வைத்துக் கொண்டு, வலது கரத்தினால் வாயைப் பொத்திக் கொண்டு நிற் கின்ற கோலம் அரிய படைப்பு.

இன்னும் இராமகாதையின் முக் கியப் பாத்திரங்களை நினைவூட்டும் வகையில் இவ்வூருக்கு அருகில் பறவைகளின் வேந்தன் சடாயுவின் பேரில் 'கழுவன் காடு' என்னும் ஊர் இருக்கிறது. ஜாம்பவானைக் குறிக்கும் 'ஜம்புவனோடை' உள்ளது. சிறிது தொலைவிலுள்ள 'தம்பிக் கோட்டை' என்ற ஊர் இலக்குவனைக் குறிப்பிடு வதாகக் கூறப்படுகிறது. தொடர்ந்து அதிராம்பட்டினம் என்னும் அதிவீர ராமபட்டினமும் இருக்கிறது.

தென் திசையிலுள்ள கற்பனார் கோயில் என்ற ஊருக் கருகில் தஞ்சை மராட்டிய மரபினைச் சேர்ந்த துளஜாஜியின் பெயரிலான துளஜாப் பட்டினம் என்ற ஊரின் கண் 'ஆத்திச் சூடி' பாடிய ஔவைக்கும் ஆலயம் உள்ளது. இன்னும் சற்று தூரம் சென் றால், மூதறிஞர் இராஜாஜி அவர்கள் உப்புச் சத்தியாகிரகம் மேற்கொண்ட அழகிய கடற்கரைப் பகுதியையும் காணலாம்.

•

சிவலோகமும் வைகுண்டமும்


கன்னியாகுமரி மாவட்டத்தில் மலைப் பாங்கான பகுதியிலுள்ள ஓர் ஊரின் பெயர் சிவலோகம். இவ்வூருக்குச் சென்றுவர நாகர் கோவிலில் இருந்து பேருந்து வசதி உள்ளது.


திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றங்கரையில் உள்ள ஒரு புராதன தலத்தின் பெயர் ஸ்ரீவைகுண்டம்.

– உ. இராமநாதன்

விவாதம்

மூன்று விவசாயச் சட்டங்கள்


பிரதமர் நரேந்திர மோடி


எம்.எஸ். சுவாமிநாதன்



அத்தியாவசியப் பொருள்கள் திருத்தச் சட்டம் (Essential Commodities Act), விவசாய விளை பொருள் வியாபாரம் மற்றும் வர்த்தகச் சட்டம் (Farming Proudce Trade and Commerce Act), விவசாயிகளுக்கு விலை உத்தரவாத ஒப்பந்தம் மற்றும் விவசாய சேவைகள் சட்டம் (The Farmers Agreement on Price Assurance and Farm Service Act) என்ற இந்த மூன்றும் நாடாளுமன்றத்திலும், மாநிலங்களவையிலும் பெரும்பான்மை ஆதரவால் சட்டங்கள் ஆக்கப்பட்டவை.

6 மாதமாக அவசரச் சட்டமாக இவை இருந்தபோது, எதிர்க்காத எதிர்க் கட்சிகள் இப்போது எதிர்ப்பதற்கான காரணங்களை வாசகர்கள் சிந்திக்கலாம், நியாயமா இல்லையா என விவாதிக்கலாம்.

ஆளுங்கட்சியை எதிர்ப்பது எதிர்க் கட்சிகளின் கடமை என்பது வலுவான காரணமல்ல. ஆளுங்கட்சியான பி.ஜே.பி. ஏற்கெனவே ஐந்தாண்டுகளை நிறைவு செய்து, இரண்டாவது ஆட்சியிலும் முதலாண்டை நிறைவு செய்துள்ளது.

எதிர்க்கட்சிகளுடைய அந்தரங்க நோக்கம், பி.ஜே.பி. என்ற கட்சியைவிட மோடி என்ற ஆளுமையை வீழ்த்த வேண்டும் என்பதாகவே தொடர்கிறது.

பிரதமர் மோடி பிரதமர் நாற்காலியில் அமர்ந்து, இந்த இரண்டாவது ஐந்தாண்டுகளையும் கடத்தி நிறைவு செய்துவிடுவாரேயானால், பிரதமர் எதுவுமே செய்யவில்லை என்று கூறினாலே போதும், அவரை வீழ்த்தி விடலாம் என்பது எதிர்க்கட்சிகளின் ஆசை.

ஆனால், அவரோ ஒவ்வொரு நாளும் இதுவரை கவனிக்கப்படாமல்

விடப்பட்டத் துறைகளை, ஊடுருவிப் பார்த்து உரிய அமைச்சர்களை நிய மித்து, அவர் எதிர்பார்க்கிற பணிகளைச் செய்ய வைத்து, அவர்களைக் கடுமை யாக வேலை வாங்குகிறார்.

அதனால், எந்தத் துறையாக இருந் தாலும், அலட்சியமாக அதற்குரிய அமைச்சர் இருந்துவிட முடியாது. பிரதமர் மோடி இரண்டாவது முறை யாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் ஒரு பிரகடனத்தை அறிவித்தார். விவ சாயத்தைப் பற்றிய அவருடைய அக் கறையும், கவலையும் அதில் தொனித்தது.

ஆசியாவிலேயே பெரிய பக்ரா நங்கல் அணையை உருவாக்கி பஞ்சா பையும், அரியானாவையும் கோதுமைக் களஞ்சியங்களாக மாற்றியது உண்மை. அந்தக் கோதுமைக் களஞ்சியத்தை உரு வாக்கிய விவசாயிகள் சிரமத்தில்தான் இருக்கிறார்கள் என்பதும் உண்மை என்பதை அவர் பகிரங்கப்படுத்தினார்.

அப்படியென்றால், அமோகமாக கோதுமை விளைவித்தும், அதனால் விவசாயிகளுக்குப் பலனில்லையே ஏன் என்ற கேள்வி பிரதமரைத் தொடர்ந்து துரத்தியது.

அதற்கு அவர் கண்ட பதில் இது தான் :– அமோகமாக கோதுமை விளை கிறது. விளைவிக்கப்படுகிற கோதுமை நாடு முழுவதும் விநியோகிக்கவும் படுகிறது. அதனால் வரும் லாபம் அதை விளைவித்த விவசாயிகளுக்குப் போகா மல், அதை வாங்கி வைத்துத் தாமதப் படுத்தி விற்பனை செய்து, கொள்ளை லாபம் பெறுகின்ற இடைத்தரகர்களுக்குத்தான் செல்கிறது. இதைத் தடுக்க வழிகளைக் காட்டியுள்ள சட்டங்கள்தான் இவை மூன்றும்.

எதிர்க்கட்சிகள் குடியு ரிமைச் சட்டத்தை எதிர்த் ததைப் போல, காஷ்மீர் மாநிலத்தில் 370–வது பிரிவை ஒழித்த சட்டத்தை எதிர்த்ததைப் போல, முத்தலாக் ஒழித்த சட்டத்தை எதிர்த்ததைப் போல இந்த விவசாயச் சட்டங்களையும் எதிர்க்கட்சிகள் ஒற்று மையாக எதிர்க்கின்றன. பஞ்சாபில் எதிர்ப்பதைப் போல நமது ஊர் பன்ருட்டியிலும் இதற்கு எதிர்ப்பு.

இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்த பிரதமர் மோடி, **விவசாயிகளின் வருமானம் இன்னும் ஓராண்டுக்குள் இரண்டு மடங்கு ஆக்கப்படும் என்று பிரகடனம் செய்தார்.** விவசாய விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதனின் பரிந்துரையை ஏற்றுக் கொண்டு தனது ஆட்சி செயல்படும் என்றும் அறி வித்தார். என்ன அந்தப் பரிந்துரை?

விவசாயிகள் சாகுபடிக்குத் தாங்கள் செய்யும் செலவுத் தொகை முழுவ தோடு, கூடுதலாக மேலும் 50 சத விகத்தைச் சேர்த்து, விவசாயிகளின் விளைபொருள்களுக்கு விலையாகத் தரப்பட வேண்டும் என்பதுதான் அந்தப் பரிந்துரை.

மோடி அரசு இதை மறுக்கவில்லை. எதிர்க்கட்சிகள் இதை எதிர்க்க வேண் டிய அவசியம் என்ன? விவசாயிகள் இந்தியாவின் முதுகெலும்பாக உள் ளனர் என்று எப்போதும் சொல்வோம். முதுகெலும்புதான் எழுந்து நிற்பதற்கு அவசியப்படுகிறது. எழுந்து நிற்பது என்றால் என்ன?

நமக்கு மூன்று வேளையும் உணவு வேண்டும். உணவு இருந்தால்தான் உயிர் இருக்கும். ஆகவே, விவசாயி கள்தான் நம் உயிரைக் காப் பாற்றக் கூடியவர்கள். நம்மை எழுந்து நிற்க வைக்கக்கூடிய அந்த விவசாயிகளே எழுந்து நிற்க முடியாமல் விழுந்து கிடப்பார்களே யானால், அது ஒரு தேசத்தின் துயரமாகும்.


காந்திஜி

சுதந்திரமடைந்து 70 ஆண்டுகளுக்கும் பிறகும்



கூட, இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் மட்டும், தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல், தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை ஏறக்குறைய மூன்று லட்சம் என்பது நாம் வெட்கப்படவேண்டியதாகும்.

விவசாயத்தைப் பற்றிச் சிந்திக்கிற போது ஒன்று முக்கியம். நமது தேசம் அடிப்படையில் ஒரு விவசாய தேசம். நாம் சுதந்திரம் பெற்றபோது, நமக்குக் கனரகத் தொழிற்சாலைகள் இல்லை. அணைகள் இல்லை. 6 லட்சம் இந்தியக் கிராமங்களில் நமது மொத்த ஜனத் தொகையில் 85 கோடிப் பேர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மிச்சமுள்ள சுமார் 45 கோடிப் பேர்தான் 700 நகரங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

விவசாயமான ஜீவாதாரத் தொழில் வீழ்ந்து கிடக்கிறது என்பதை முதலில் கண்டறிந்தவர் நமது தேசப்பிதா காந்திஜிதான். மதுரைக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்தில் ஒரு விவசாயி, தனது இடுப்பில் கட்டியிருக்கிற வேட்டியோடு மட்டுமே வேலை செய்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்த காந்திஜி, தனது தலையில் கட்டியிருந்த முண்டாசைக் கழற்றி எறிந்தார். அந்த ஏழை விவசாயி போலவே இனிச் சாகும்வரை வாழ்வேன் என்று கட்டிய இடுப்பு வேட்டியோடு மட்டுமே கடைசிவரை உலவினார்.

அதுமட்டுமல்ல, தான் சுற்றிப் பார்த்த இந்தியா எங்கே இருக்கிறது என்று அவர் சொன்ன செய்தி, இந்தியா நகரங்களில் இல்லை என்பதை, “அது கிராமங்களில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறது (India lives in Villages)” என்றார்.

இதோடு மட்டும் அவர் நிற்கவில்லை. இந்திய விவசாயிகள் ஆண்டுக்கு 365 நாள்களில் 120 நாள்கள் மட்டுமேதான் வேலை செய்ய முடிகிறது. மீதியுள்ள 245 நாள்களும் அவர்கள் வேலையற்றுக் கிடக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் வறுமையில் இருக்கிறார்கள் என்றார்.

அதற்காக அவர் சிந்தித்ததுதான் கதர் மற்றும் கிராமப்புறத் தொழிற்சாலைகள். ஆனாலும், அந்த நடவடிக்கைகளால் கிராமங்கள் அபிவிருத்தி அடையவில்லை. கிராமங்கள் க்ஷீணித்துக் கொண்டுதான் இருந்தன. நகரங்கள்தான் பகாசூர வளர்ச்சி பெற்று வளர்ந்து கொண்டிருந்தன. அந்த வளர்ச்சிக்குக் காரணம், உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் நகரங்களுக்குத்தான் தரப்பட்டது. அந்த மின்சார வசதிதான் தொழிற்சாலைகளை நகரங்களில் வளர்த்தன.

இந்தச் செய்திகளை எல்லாம் பின்புலமாகக் கொண்டுதான் சிலவற்றை நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நமது தேசத்திலுள்ள மொத்த விவசாயக் குடும்பங்கள் 14 கோடி. குடும்பத்திற்கு 5 பேர் வீதம் கணக்கிட்டால், சுமார் 70 கோடிப் பேர் விவசாயிகள்.

இந்த 14 கோடி விவசாயக் குடும்பங்களில் 12 கோடி விவசாயக் குடும்பங்கள்

ஒவ்வொன்றும் வைத்திருக்கும் பூமியின் அளவு, வெறும் 5 ஏக்கர் மட்டும்தான். இதுதான் 60 கோடி விவசாயிகளின் நிலவுடைமை. இவர்கள் அல்லாமல், நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துச் சாகுபடி செய்கிற விவசாயிகளும், கூலி வேலை செய்யும் விவசாயிகளும் உள்ளனர்.

இப்போது இந்த மூன்று விவசாயச் சட்டங்கள் என்பவை இந்த 60 கோடி மக்களைக் கொண்ட 12 கோடி விவசாயக் குடும்பங்களோடு சம்பந்தப் பட்டவை. இவர்கள் அரசுக்கு எதிராகத் தூண்டிவிடப்படுகிறார்கள்.

அதிகப் பூமிகளை வைத்திருக்கக் கூடிய 2 கோடி விவசாயக் குடும்பங்களின் நலனுக்கு இவர்கள் பலியாகிறார்கள். இந்தச் சட்டங்கள் மூன்றையும் கடுமையாக எதிர்க்கின்ற மாநிலங்கள் பஞ்சாப், அரியானா ஆகிய இரண்டும் தான்.

அந்த மாநிலங்களில் இந்தியாவிற்கான கோதுமையைக் கூடுதலாக விளைவிக்கிறது. அந்த விவசாயிகள்தான் தாங்கள் விளைவித்த கோதுமையை உடனடியாகக் களத்துமேட்டில் விற்பனை செய்து பணம் திரட்டி, தங்களது தினசரி வாழ்க்கைச் செலவுக்கும் அடுத்த சாகுபடிக்கும் பயன்படுத்துகிறார்கள்.

தமிழ் நாட்டில் உள்ளதுபோல ஒழுங்குமுறை விவசாய விற்பனைக் கூடங்கள் அங்கு இல்லை. அங்கு உள்ளவை விவசாயிகளைக் கொள்ளையடிக்கும் கமிஷன் மண்டிகள் மட்டும் தான். ஆண்டுக்கு அவை அடிக்கும் கொள்ளை ரூ. 10 ஆயிரம் கோடி எனப் படுகிறது. இதில் கணிசமான தொகை தேர்தலின்போது செலவழிக்கப்பட்டு ஆட்சியை நிர்ணயிக்கிறது.

விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை உடனடியாக விற்பனை செய்ய வேண்டியிருப்பதால், அவர்களிடத்தில் கொள்முதல் செய்கிற மண்டிகளை நடத்தும் இந்த இடைத் தரகர்களிடம்தான் (Commission Agent) அவர்கள் விற்க வேண்டியுள்ளது.

அந்த இடைத்தரகர்கள், வாங்கப் பட்ட உணவுப் பொருள்களை உடனடியாக விற்பனை செய்யாமல் தாமதப் படுத்தி, முடிந்தால் செயற்கைப் பஞ்சத்தை உருவாக்கி அதீதமான விலைக்குச் சந்தையில் வியாபாரிகளுக்கு விற்கிறார்கள். அந்த வியாபாரிகள்தான் நம்மைப் போன்ற நுகர்வோருக்கு விற்பனை செய்கிறார்கள்.

விவசாயிகளின் கைகளை விட்டுப் போன கோதுமையானது சம்பாதித்துக் கொடுத்துள்ள கூடுதல் விலை, யாருக்கு லாபமாகக் கிடைத்து வருகிறதென்றால், கமிஷன் ஏஜெண்டுகளுக்கும், சந்தை வியாபாரிகளுக்கும்தான். விளைவித்த விவசாயிகளுக்கு எந்தப் பலனும் இதில் இல்லை.

இப்போது எழுப்பப்படுகின்ற கேள்வி, இந்த மூன்று விவசாயச் சட்டங்களும் வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் செய்துள்ள பரிந்துரையை ஒப்புக் கொள்கிறதா, இல்லையா? ஒப்புக் கொள்கிறதென்றால், விவசாயிகளுக்கு நன்மை செய்வதாகக் கூறுகிற எதிர்க்கட்சிகள், இந்த வேளாண் சட்டத்தை எதிர்க்க வேண்டிய அவசியம் என்ன?

இந்த மூன்று சட்டங்களும் விவசாயிகள் சுதந்திரமாகத் தங்கள் விளைபொருள்களை எங்கு வேண்டுமானாலும், எவருக்கு வேண்டுமானாலும் விற்பனை செய்கிற சுதந்திரத்தைத் தருகிறதா, இல்லையா? தருகிறதென்றால், விவசாயிகளின் அந்தச் சுதந்திரத்தை எதிர்க்கட்சிகள் எதிர்க்க வேண்டிய அவசியம் என்ன?

குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு மேலும் மேலும் உயர்த்தி விவசாயிகளிடம் கொள்முதல் செய்கிற போது, இந்தச் சட்டத்தை ஏன் எதிர்க்க வேண்டும்?

இந்தக் கேள்விகளை வாசகர்கள் ஆழமாகச் சிந்தித்துத் தாங்கள் என்ன நினைக்கிறீர்களோ, அதை எழுதுங்கள் நவம்பர் 15–க்குள்.

– **பி.சி.**

சிறுகதை

ஐந்தாவது மாதம் முடிந்து குழந்தையை எடுத்துக் கொண்டு மருமகள் வருகிறாள். சாரதாவுக்கு ஒரு பக்கம் மகிழ்ச்சியாக இருந்தது. இன்னொரு பக்கம் கவலையாக இருந்தது. அவ்வளவு சின்னக் குழந்தையைக் குளிப்பாட்டுவதற்கு அவளுக்குத் தெரியாது. ஒரு வாரமாக அவளும் ஆள் தேடிக் கொண்டிருந்தாள்.

கோயமுத்தூராக இருந்தால், இந்நேரம் யாரை யாவது பிடித்திருப்பாள். பெங்களூரில் ஒன்றுமே பிடிபடவில்லை.

தன்னம்பிக்கை சாரதாவுக்கு மிகவும் பிடித்தது.

ஒரு மாதத்திற்குள்ளாகவே சாரதாவுக்கும் அஜ்ஜிக்கும் இடையே ஒரு விதமான நட்பு மலர்ந்தது. மெல்ல மெல்ல; தன் வீட்டு விவகாரங்களைப் பகிர்ந்துகொள்ள ஆரம்பித்தாள் அஜ்ஜி.

அஜ்ஜிக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள். பக்கத்தில்தான் எங்கோ மகள் இருந்தாள். மகள் அஜ்ஜியை நன்றாகத்தான் கவனித்துக் கொள்வாள் என்றாலும், அஜ்ஜி ''மகளைக் கட்டிக் கொடுத்துவிட்டு அடிக்கடி அங்கே போனால் நன்றாக இருக்குமா?'' என்பாள்.

அஜ்ஜியும் பெரிய மகனும்!



"எப்படிம்மா? நான் சம்பாதிச்ச பணம் அத்தனையும் இவனுக்குத்தானே கொட்டிக் கொடுத்தேன். பெரியவன் மஞ்சுநாத்துக்கு நான் எதுவுமே செய்யலை. அவனே கஷ்டப்பட்டுப் படிச்சான். எங்க வூட்டு அய்யாகூட அவனுக்கு எதுவும் செய்யலை. அதனாலதான் எங்க வூட்டு அய்யா வைத்தியத்துக்குக்கூட அவன்கிட்ட பணம் கேட்கலை. பணம் இருக்குன்னு சொல்லிட்டேன். இப்போ எப்படிப் போய் நிக்கறது?"

குழந்தையும் வந்து சேர்ந்தாகிவிட்டது. நல்ல வேளையாகக் கீழ் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த கிட்டா என்ற பெண்மணி ஓர் ஆளைக் கூட்டிக் கொண்டு வந்தாள்.

எழுபத்தைந்து வயதிருக்கும். எப்படிக் கூப்பிட வேண்டும் என்று கேட்டதற்கு ''அஜ்ஜி என்று கூப்பிடுங்கள்'' என்றாள். எனக்குப் பஜ்ஜி என்பது போல ஒலித்தது. அஜ்ஜி என்றால் 'பாட்டி' என்று பொருள் என்று பின்னால் தெரிந்து கொண்டேன்.

களையாக இருப்பாள். கணவர் ஆறு மாதத்திற்கு முன்னதாகத்தான் இறந்ததாகச் சொன்னாள். நான்கைந்து குழந்தைகளைக் குளிப்பாட்டியே மாதம் பத்தாயிரம் ரூபாய் சம்பாதித்து விடுவாளாம். உழைத்துப் பிழைக்கும் அவளுடைய

அஜ்ஜி அரைகுறைத் தமிழைக் கலந்து கன்னடத்திலே உரையாடுவாள். சாரதாவும் தன் பங்குக்கு அரைகுறை கன்னடம் கலந்து தமிழில்தான் பேசுவாள். இரண்டு பேரும் பேசிக் கொள்வதைப் பார்த்து மருமகள் ஜோதி சிரிப்பாள்.

''அம்மா! உன் பேரன் ரொம்பக் கெட்டிக்காரன். ரொம்பத் துறுதுறு. நானும் நாலைந்து வீட்டில் குழந்தைகளைக் குளிப்பாட்டறேனே. எந்த வீட்டுக் குழந்தையும் இப்படி இல்லை!'' என்பாள்அஜ்ஜி. சாரதா பூரித்துப் போவாள்.

இரண்டாவது மகன் வீட்டில்தான் அஜ்ஜி இப்போது இருந்தாள். இரண்டாவது மகன் குடிப் பழக்கம் உள்ளவன். அவனும் அவனது மனைவியுமாகச் சேர்ந்து வண்டியில் பலகாரக் கடை போடுவார்கள். காலையில் டிபன், டீ என்று விற்பார்கள்.

அஜ்ஜி எட்டு மணிக்கு மேல்தான் கிளம்பு வாள். அதற்குள் அஜ்ஜிக்கு ஒரு கப் டீ கிடைப் பதற்குள் உன்னைப் பிடி, என்னைப் பிடி என்று ஆகிவிடுமாம். இத்தனைக்கும் அஜ்ஜி பொறுமை யாக இருப்பாள். சில நேரங்களில் அதுவும் கிடைக்காது. அவர்கள் கிளம்பிய பிறகு அவளே டீ போட்டுக் குடிப்பாள்.

குழந்தையைக் குளிப்பாட்டுகிற வீடுகளில் ஏதாவது ஒன்றில் டிபனை முடித்துக் கொள்வாள். சாரதாவின் வீட்டிற்கு வருவதற்குள் பத்தரைமணி ஆகிவிடும். பெரும்பாலும் டிபன் முடித்துவிட்டுத் தான் வருவாள். அதனால் டிபன் வேண்டாம் என்று சொல்லிவிடுவாள்.

ஒருநாள் பத்து மணிக்கே வந்தாள். ‘‘பசிக் குதும்மா, டிபன் கொடுங்க!’’ என்றாள். பாவம், சாரதாவின் மருமகளும் இளகிய மனசுக் காரிதான். உடனே நாலு இட்லிகளைத் தட்டிலே வைத்து சட்னி, சாம்பாரை ஊற்றிக் கொண்டு வந்து கொடுத்தாள்.

அஜ்ஜி சாப்பிட்ட வேகத்தைப் பார்த்தால், முந்தைய இரவும் கொலைப்பட்டினி என்று புரிந்தது. வயிறு நிறைந்ததும் தான் பேச்சு வந்தது. ‘‘அய்யா இருக்கற வரைக்கும் இந்தத் தொல்லை இல்லாமல் இருந்தது. அவரு வைத்தியத்துக்கு வாங்கின கடன்லயே இன்னும் இருபதாயிரம் பாக்கி இருக்கு; அதை அடைக்கணும். மாசாமாசம் சம்பாதிக்கிறதை மிச்சம் இல்லாமல் கொடுன்னு கேட்கறான் மகன். நான் என்னதான் பண்ணு வேன்? நேத்து வார்த்தைத் தடிச்சிடுச்சு. என் னைய அடிச்சுட்டான். நான் வெளியே வந்துட் டேன்!’’ என்று தேம்பித் தேம்பி அழுதாள். பரிதாப மாக இருந்தது.

‘‘நைட்டே வெளியே வந்துட்டியா அஜ்ஜி? இங்கேயே வந்திருக்கலாமே?’’ என்றாள் சாரதா.

‘‘ரொம்ப வேண்டியவங்க இருக்காங்க. அவங்க வீட்டுக்குப் போயிட்டேன்! நானும் ரொம்பப் பொறுமையா இருக்கறேன். ஆனால் ரொம்பவே படுத்தறாங்க!’’ என்று அழுதாள்.

தினமும் எங்கள் வீட்டில் குழந்தையைக் குளிப்பாட்டி முடிக்கும் பொழுது பதினொரு மணி ஆகிவிடும். வீட்டிற்குப் போய் மருமகள் வருவதற்குள் சமைத்து வேறு வைக்க வேண்டும் என்று ஓடுவாள். இந்த வயதில் இப்படி ஒரு மனுஷி

ஜெய்சக்தி



எவ்வளவுதான் உழைப் பாள்.

சாரதாவுக்குக் கோபம் கோபமாக வந்தது. கொஞ் சம் கோபமாகவே கேட் டாள். ‘‘சின்ன மகன்கிட்ட இருந்துக்கிட்டு இந்தப் பாடு படறதுக்குப் பேசாம பெரிய மகன்கிட்டயே போக லாமே?’’ என்று.

பெரிய மகன் நன்றாகப் படித்து நல்ல வேலையில் இருக்கிறான். அந்த மருமகளும் நல்லவள்தான் என்று அஜ்ஜி சாரதாவிடம் பல முறை சொல்லியிருக்கிறாள். அது நினைவில் வரவும்தான் அப்படிக் கேட்டாள்.

அஜ்ஜி புடவை முந்தானையில் முகத்தைத் துடைத்துக் கொண்டு சொன்னாள். ‘‘எப்படிப் போக முடியும்? நான் பத்து வருஷமா சம்பாதிச் சதையெல்லாம் சின்னவனுக்குத்தானே கொடுத் தேன். பெரியவன் வரத்தான் சொல்றான். ஆனா எந்த மூஞ்சியை வச்சுக்கிட்டுப் போவேன்?’’ என்று.

சாரதா திகைத்துப் போனாள். அஜ்ஜியிடம் இந்த விதமான சுயமரியாதையை எதிர்பார்க்க வில்லை. எவ்வளவோ சொன்னாலும் பதில் இதுதான் : ‘‘அங்கே போய் இருக்கும் பொழுது ‘எனக்குன்னு என்ன செஞ்சேன்னு’ அவன் கேட்டா நான் எங்கே போய் முட்டிக்கிறது?’’

சாரதாவுக்குச் சலிப்பாக இருந்தாலும் அஜ்ஜி யின் உணர்வுகளை மதித்தாள். ஆனால், மனம் மட்டும் யோசனையில் ஆழ்ந்திருந்தது.

பத்து நாள் போயிருக்கும். அன்றைக்கும் அஜ்ஜி அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக வந்து சேர்ந்தாள்.

சாரதா, அஜ்ஜியிடம் ‘‘அஜ்ஜி, பாப்பா தூங்குது. நீ போயிட்டு ஒரு மணி நேரம் கழிச்சு வந்துடு!’’ என்றாள்.

அஜ்ஜி கிளம்பியதற்குப் பிறகு ஜோதி வந்து, ‘‘ அத்தை, பாப்பா தூங்கலையே? ஏன் அப்படிச் சொல்லி அனுப்பிச்சீங்க?’’ என்றாள்.

சாரதா ஒருவிதமாகப் புன்னகைத்தாள். சற்று நேரம் கழித்து அஜ்ஜி வந்து சேர்ந்தாள். அஜ்ஜியை அமர வைத்துப் பேச்சுக் கொடுத்தாள் சாரதா.

அஜ்ஜி மறுபடியும் அழுகைக் குரலில் ஆரம்பித்தாள். ''ஏதோ அடுத்தவங்க இரக்கப்பட்டு வீட்டிலே இடம் கொடுத்தாலும் அவங்ககிட்டே வந்து சண்டை போடறான். அந்த வீட்டம்மா 'எங்க வீட்டுக்காரருக்குச் சத்தமே பிடிக்காது. நான் என்ன பண்றது, நீ கிளம்பு'ன்னு சொல்லிட்டாங்க'' என்றாள்.

''அப்புறம்?''

''அப்புறம் என்ன? மறுபடியும் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போய் சண்டைதான். ஏன்தான் உசிரோட இருக்கோம்னே தெரியலை.''

சாரதா மறுபடியும் ஆரம்பித்தாள்.

''ஏன் அஜ்ஜி? எதுக்கு இந்தப் பாடு, பேசாம பெரிய மகன்கிட்டே போயிடு!'' என்றாள்.

''எப்படிம்மா? நான் சம்பாதிச்ச பணம் அத்தனையும் இவனுக்குத்தானே கொட்டிக் கொடுத்தேன். பெரியவன் மஞ்சுநாத்துக்கு நான் எதுவுமே செய்யலை. அவனே கஷ்டப்பட்டுப் படிச்சான். எங்க வூட்டு அய்யாகூட அவனுக்கு எதுவும் செய்யலை. அதனாலதான் எங்க வூட்டு அய்யா வைத்தியத்துக்குக்கூட அவன்கிட்ட பணம் கேட்கலை. பணம் இருக்குன்னு சொல்லிட்டேன். இப்போ எப்படிப் போய் நிக்கறது?'' என்று அழுது கொண்டே திரும்பியவள் திகைத்துப் போனாள்.

அஜ்ஜியின் பெரியமகன் மஞ்சுநாத் நின்றுகொண்டிருந்தான். அஜ்ஜி அவனைப் பார்த்தவுடன் பொங்கிப் பொங்கி அழுதாள். மஞ்சுநாத் ஓடி வந்து கட்டிக் கொண்டான்.

''ஏம்மா? ஏம்மா? இப்படி வருத்திக்கறே? எங்கிட்டே வர வேண்டியதுதானே?'' என்று கண் கலங்கினான்.

''எப்படிடா வருவேன்? உனக்குன்னு நான் ஒண்ணுமே செய்யலையே?''

''அம்மா! என்னம்மா பேசறே? எனக்கு நீ எதுவுமே செய்யலையா? பத்து மாசம் என்னைச் சுமக்கலையா? நான் குடிச்ச மிச்ச பாலைத்தானே அவன் குடிச்சான். முதல் குழந்தையா இருந்ததனாலயே என்னமோ அப்படிப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தீங்களே? அதையெல்லாம் எந்தக் கணக்குல சேர்க்கறது? நீ எல்லாருக்கும் செஞ்சது போதும். இனிமே நாங்கதான் உனக்குச் செய்யணும். நான் நல்லாயிருக்கேன். கொஞ்சம் கோடி காட்டியிருக்கலாமே? சின்னவன் நல்லா வச்சிருக்கான்னு பொய் பொய்யா சொல்லியிருக்கியே? நிறைய விஷயங்களை மறைச்சுட்டியேம்மா!'' என்று அவனும் கண்ணீர்விட்டான். தாயும் மகனும் கட்டிக் கொண்டு அழுதார்கள்.

சாரதாவும் ஜோதியும் கண்கலங்கி நின்றார்கள். அழுது ஓய்ந்ததும் அஜ்ஜி சாரதா முகத்தைக் கேள்விக்குறியாய்ப் பார்த்தாள்.

சாரதா புன்னகையுடன் சொன்னாள். ''அன்னைக்கே உன்கிட்டே பெரிய பையனைப் பத்தி எங்கே வேலை செய்யறார் என்ன ஏதுன்னு விசாரிச்சேன் இல்லே? அதுக்கப்புறம் என் மகன்கிட்ட சொல்லித் தேடிக் கண்டுபிடிச்சோம். இங்கிருக்கிற நிலைமையெல்லாம் பத்தி ஃபோன்லே சொன்னேன். 'அம்மா எங்க வீட்டுக்கு வரும் போது நல்லா டிரஸ் பண்ணிக்கிட்டு வரும். நல்லாயிருக்கேன்னு சொல்லும். நானும் நம்பிட்டேன்' என்று ஃபோன்லயே அழுதாரு. ஒரு வாய்ப்புக்காகக் காத்திருந்தோம். இந்த முறை உன் சின்ன மகனோட சண்டை வந்தவுடனே அவருக்குத் தெரிவிச்சுட்டேன். அவரும் வந்துட்டாரு!'' என்று சிரித்தாள் சாரதா.

அதற்குப் பிறகு அஜ்ஜி பெரியமகனுடன் கிளம்பியதும், சின்னமகன் சாரதாவிடம் வந்து சண்டை போட்டதும் வேறு கதை. சாரதா அதையெல்லாம் சமாளித்தாள். ஜோதிகூட ''அத்தை எதுக்கு ரிஸ்க்? இவங்களோட எல்லாம் சண்டை போடணுமா?'' என்றாள்.

21600 என்பது என்ன?

ஆவுடையார் கோயில் கருவறை விதானத்தில் 21600 செப்பு ஆணிகள் அடிக்கப்பட்டுள்ளன. சிதம்பரம் நடராசப் பெருமான் ஆலய மேற்குக் கூரையில் 21600 தங்க ஓடுகள் வேயப்பட்டுள்ளன. வடலூர் வள்ளற்பெருமான் திருச்சன்னிதானத்தில் 21600 சங்கிலிக் கோர்வைகள் உள்ளன. இவை அனைத்தும் நாம் ஒவ்வொரு நாளும் வெளியிடும் 21600 மூச்சிற்குச் சாட்சியாக அமைந்துள்ளன.

– நெ. இராமன்



“பரவாயில்லம்மா! அஜ்ஜியோட சுயமரியாதையைப் பார்த்து எனக்கு ஆச்சரியமாப் போச்சு. ஆனாலும் வயசுன்னு ஒண்ணு இருக்கில்லே? மனசு கேட்கலை அதான். மஞ்சுநாத் நல்லவரா இருந்தது ஒரு வகையிலே உதவியா இருந்துச்சு. முதுமையோடவும் வறுமையோடவும் போராடறவங்க நிறையப் பேர் இருக்காங்க. அது ரொம்பக் கொடுமைம்மா. அத்தனை பேருக்கும் நம்மாலே உதவி செய்ய முடியலைன்னாக் கூட, என்னால முடிஞ்சது ஒருத்தருக்காவது உதவி செஞ்சேன்!” என்று சொன்ன சாரதா அறைக்குப் போனாள்.

அன்றிரவு! டைரியில் ‘அஜ்ஜியையும் பெரிய மகனையும் சேர்த்து வைத்தது நிறைவாக இருந்தது’ என்று எழுதினாள் சாரதா.

கடந்த எட்டு மாதங்களாக இந்தியாவை உலுக்கி வருகிற கொரோனாத் தொற்றுநோய் சுமார் 1 லட்சம் பேரை பலி கொண்டுவிட்டது. 75 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.



மூலமாகவும், உடற்பயிற்சி மூலமாகவும் குறிப்பாக மூச்சுப் பயிற்சி மூலமாகவும் நாம் பெறலாம்.

இந்த வகையில், எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கு உற்றத் துணையாக இருப்பது, ‘வைட்டமின் சி’–தான். வைட்டமின் சி புளிப்பு ருசியுள்ள

கொரோனாவை எதிர்க்க ஒரு புதிய ‘மிராக்கிள்’ பானம்

அமெரிக்காவிற்கு அடுத்து இந்தியாதான் கொரோனா பாதிக்கப்பட்ட தேசமாக உள்ளது. இதற்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. இதற்கான தடுப்பூசி அடுத்த வருடம் வரலாம் எனக் கூறப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில், இந்தக் கொரோனா நுண் கிருமியை அழிக்க நமக்குள்ள ஒரே வழி, நமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை வளர்ப்பதுதான். அந்த எதிர்ப்பு சக்தியின் (Resistant Power) மூலமாகத்தான் கொரோனாக் கிருமியை மட்டுமல்ல, எந்தக் கிருமியையும் நம்மால் அழிக்க முடியும்.

இந்த எதிர்ப்பு சக்தியை உரிய சத்துணவு



பழங்களில் அதிகமுள்ளது. குறிப்பாக நெல்லிக்கனி.

இந்தச் சூழ்நிலையில், **வைட்டமின் சி** பற்றி சக்தி குழுமங்களின் தலைவரான டாக்டர் ம. மாணிக்கம் அவர்கள், ஆய்வுகள் செய்து புற்றுநோயாளிகளுக்கு வைட்டமின் சி–யை வழங்கி, அவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கினார். இது 2013–இல் அவர் செய்த முயற்சி. அதற்குக் கிடைத்த முடிவுகள், புற்றுநோயாளிகளைக் குணப்படுத்துவதாக இருந்து வந்தது.

அந்த நிலையில், இந்தாண்டு கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்தது. கொரோனா வைரசால் பாதிக்கப்படுபவர்களுக்கு அதை அழிக்க, ஜிங்க் மற்றும்





வைட்டமின் சி ஆகியவை அதிகம் தேவை. மிராக்கிள் வைட்டமின்–சி பானத்தில் இவை சிறப்பாக உள்ளன.

இதைப் பற்றி டாக்டர் ம. மாணிக்கம் கூறுகையில், “மிராக்கிள் பானத்தில் உள்ள **லிப்போசமல் வைட்டமின் சி** *98* சதவீதம் சிதைவடையாமல் திசுக்களுக்குச் சென்றடைவதால், அதிக அளவில் நோய் எதிர்ப்பு சக்தியை அது உருவாக்குகிறது. புற்றுநோயாளிக்கு நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்ட இந்த ஊட்டச்சத்து பானம், கோவை சிங்காநல்லூர் இ.எஸ்.ஐ. கொரோனா சிறப்பு மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கொரோனா நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு, நல்ல பலனை அளிப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.


இந்தப் பானத்திலுள்ள லிப்போசமல் வைட்டமின்–சி, நேரிடையாக நமது செல்லில் ஆக்சிஜனாக மாறுவதால், நோயாளிகளுக்கு விரைவில் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகிறது.

கொரோனாவால் சுவை மற்றும் வாசனைத் திறனை இழந்தவர்கள், இந்த ஊட்டச்சத்துப் பானத்தை அருந்திய *5* நாள்களுக்குள் சுவை, வாசனை நுகர்வுத் திறனைத் திரும்பப் பெற்றுள்ளனர். மேலும் *8* அல்லது *9* நாள்களில் குணமடைந்து விடுகின்றனர்.

சிங்கப்பூர், அமெரிக்காவுக்கு மிராக்கிள் ஊட்டச்சத்து பானத்தின் மாதிரிகள் அனுப்பப்பட்டுள்ளன. அங்கு நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் பானமாக இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது” என்றார்.

– ந.நி.

கண்ணீர் அஞ்சலி!


திரு.ம. வீரபாகு

நெல்லையில் ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்த ம. வீரபாகு அவர்கள், தம் இளம் வயதில் ஆர்.எஸ்.எஸ்.–பால் ஈர்க்கப்பட்டு இந்து முன்னணியில் தன்னை இணைத்துக் கொண்டார். இந்த இயக்கத்தில், தன்னைச் சிறந்த போராளியாகச் செதுக்கிக் கொண்டார். நல்லதொரு சொற்பொழிவாளராக இந்துமதப் பிரச்சார நிகழ்ச்சிகளில் பங்கேற்றுத் தடம் பதித்தவர். நாடு முழுவதும் எமர்ஜென்சி அமல் படுத்தப்பட்டபோது, தனது பெயரை மாற்றிக் கொண்டு மாறுவேடங்களில் பணியாற்றியவர்.

கடந்த பத்தாண்டுகளாக "விஜய பாரதம்" தேசிய வார இதழின் ஆசிரியராகத் தனது பணியைச் சிறப்பாகச் செய்து வந்தார். இந்தப் பத்தாண்டுகளில் 600–க்கும் அதிகமான புதியவர்களை எழுத வைத்துள்ளார். அவர், கடந்த செப்டம்பர் 12 அன்று இயற்கை எய்தினார். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

– ஆ–ர்.

கண்ணீர் அஞ்சலி!


திரு. எஸ்.பி. பாலசுப்பிரமணியம்

1960–களின் பிற்பகுதியில் தமிழ்த் திரை இசை உலகில் அறிமுகமான மறைந்த திரைப் படப் பாடகர் திரு. எஸ்.பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் கடந்த 50 ஆண்டுகளாகத் தொடர்ந்து முன்னணிப் பாடகராகத் திகழ்ந்து வந்தார். இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட 16 மொழிகளில் சுமார் நாற்பதினாயிரம் பாடல்கள் பாடியவர். ஆறு முறை சிறந்த பின்னணிப் பாடகருக்கான தேசிய விருதினைப் பெற்றிருக்கிறார்.

இதுவரை தேசிய விருதினை நான்கு மொழிகளுக்குப் பெற்ற ஒரே திரைப்படப் பின்னணிப் பாடகர் இவர் ஒருவரே. இவர் தமிழக மற்றும் கர்நாடக அரசுகள் உள்ளிட்ட பல மாநில விருதுகளையும், ஆந்திர அரசின் நந்தி விருதினை 25 முறை பெற்றுச் சாதனைப் படைத்துள்ளார். அவர், உடல்நலக் குறைவு காரணமாகக் கடந்த செப்டம்பர் 25 அன்று இயற்கை எய்தினார். அந்த இசைக் குயிலின் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

– ஆ–ர்.

பொய்த் தூக்கம்



ஹரிஷ் சின்னராஜன்



கொடுப்பதும்
வாங்குவதும்
தவறென்று அறிந்து
கொண்டே
தவறாமல் தருகின்றோம் !

சொன்னதைச் செய்யாமல்
செய்ததைச் சொல்லாமல்
உத்தம புத்திரர்போல்
அரிதாரம் பூசிக் கொண்டு
அத்தனை மேடைகளில்
மொத்தமாய்ப் பொய்யுரைத்த
எத்தனை பொய்யர்களை
அரியணை ஏற்றி
வைத்தோம்!

வானமே விழுந்தாலும்
நம்மீது விழாவிட்டால்
நமக்கேன் வம்பு என்று
ஓரமாய் ஒதுங்கிச் செல்ல
வசதியாய்ப் பழகிக்
கொண்டோம்!

லஞ்சமும் ஊழலும்
பொய்மையும் தீமையும்
முட்செடியாய் இருந்தபோதே
அடியோடு களையாமல்

அற்ப லாபத்திற்காய்
ஆதரவாய் நீரூற்றி
விருட்சமாய் வளர்த்துவிட்டு

இன்று யாருக்கும் தெரியாமல்
எங்கேயோ ஓரிடத்தில்
திடீரென முளைத்தது போல்
திகைப்புடனே பார்க்கின்றோம்!

என்றாவது ஒரு நாள்
எங்கேயோ ஓரிடத்தில்
ஓர் அவதார புருஷன்
நிச்சயம் அவதரித்து
இவையெல்லாம்
மாற்றிடுவான்
என்று மனக்கோட்டை
கட்டாமல்

நாமெல்லாம் ஒன்றிணைந்து
சிறு துரும்பேனும்
கிள்ளிப் போட்டால்

அடுத்த தலைமுறைக்கேனும்
அழகிய பாரதத்தைப்
பெருமையாய்ப்
பரிசளிக்கலாம்!

இனியேனும்
பொய்த் தூக்கம்
கலைப்போமா?

ஆன்மிகம்



குணநல ஒழுக்கமே குமரன் வழிபாடு

உலகில் எந்த மொழிக்கும் இல்லாத ஒரு தனிப் பெருமை தமிழ்மொழிக்கு உண்டு. அது மொழிக்கென்று தனியாக ஒரு கடவுளைப் பெற்றிருப்பது ஆகும். தமிழ்க் கடவுளாக முருகப்பெருமான் விளங்குகிறார்.

குறிஞ்சி நிலத்துக் கடவுளாக விளங்கும் இவரை **“சேயோன் மேய மைவரை உலகமும்”** என்று தொல்காப்பியம் போற்றுகிறது. முருகனின் பன்னிரு கைகள் பன்னிரு உயிரெழுத்துகளையும், பதினெட்டுக் கண்கள் பதினெட்டு மெய்யெழுத்துகளையும், ஆயுதமாகிய வேல் ஆயுத எழுத்தையும் குறிக்கிறது என்பர். ‘**முருகு**’ என்ற பெயரானது தமிழ்மொழியில் மெல்லின, இடையின மற்றும் வல்லின எழுத்துக்களிலிருந்து எடுத்துச் சூட்டப்பட்டுள்ளது. அத்துடன் முருகப் பெருமானே இரண்டாவது தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவராகவும் விளங்கியுள்ளார்.

இவரைத் தமிழ்ச் சொற்காளால் போற்றாமல், திட்டினால்கூட நல்வாழ்வு தருவார் என்று அருணகிரிநாதர்,

“மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்பான் வெய்ய வாரணம்போல்
கைதான் இருபதுடையான் தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையான் பயந்த இலஞ்சியமே”

என அலங்காரம் செய்கிறார்.

இத்தகு கடவுள், கச்சியப்ப சிவாச்சாரியார் எழுதிய கந்தபுராணத்தின் முதற்பாடலின் முதற் சொல்லில் **“திகள் தசக்கர”** என்பதை **“திகட சக்கர”** என்று திருத்தியதாகவும் அதற்கான இலக்கண விதியைச் சொல்ல தொல்காப்பியம், நன்னூல் முதலிய நூல்கள் இடம் தராமலிருந்ததால் **“வீரசோழியம்”** என்ற நூலை வழங்கியதாகவும் வரலாறு கூறுகிறது.

மேலும், சிவபெருமானுக்குப் பிரணவ மந்திர உபதேசத்தையும் முருகன் தமிழ்மொழியில்தான் கூறியுள்ளார். இதனை,

“கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரிய
கொஞ்சித் தமிழால் பகர்வோனே”

என்று திருப்புகழ் பதிவு செய்கிறார்.

இதன்மூலம் முருகப்பெருமான் தனித் தமிழ்க் கடவுள் என்பது தெளிவாகிறது. மேலும் தமிழிலக்கிய வைப்பில் ‘**பாட்டும் தொகையும்**’ முதலிடம் பெறுகின்றன. அவற்றுள் பத்துப் பாட்டில் முதலாவதாக விளங்குவது திருமுருகாற்றுப் படை.

திருமுருகாற்றுப் படை முருகனின் ஆறுபடை வீடுகளைப் பற்றிப் பதிவு செய்துள்ளது. ஆறுபடை வீடுகளும் ஒவ்வொரு தனிச்சிறப்புப் பெற்றவையாகும். குடைவரைச் சிலைக்குத் திருப்பரங்குன்றமும், கடலின் அலைக்குத் திருச்செந்தூரும், குன்றான மலைக்குப் பழனியும், அமைதியான நிலைக்குத் திருத்தணியும், பாடம் கற்பிக்கும் கலைக்குச் சுவாமிமலையும், அழகிய சோலைக்குப் பழமுதிர்சோலையும் விளங்குகின்றன. அதில் முருகன் சூரபதுமனை தடித்ததை,

“பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்கு
சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்”

என்று நக்கீரர் பதிவு செய்கிறார். அப்படிச் சூரனைத் தடித்த நாளே **“சூரசம்ஹாரம்”** என்று கொண்டாடப்படுகிறது.

சூரபதுமன் வரலாற்றைக் கந்தபுராணமானது பின்வருமாறு கூறுகிறது. காசிப முனிவருக்கும் மாயை என்பவளுக்கும் பிறந்தவர்களே சூரபதுமன் உள்ளிட்ட அசுரர்கள். இவர்கள் கடுந்தவம் இயற்றி, சிவபெருமானிடம் **“தன் சக்தியல்லாது வேறு சக்திகளால் அழிவே இல்லை”** என்ற வரத்தைப் பெற்று 1008 அண்டங்களையும் 108 யுகங்கள் ஆண்டு வந்தனர்.

வரம்பெற்ற ஆணவத்தால் தேவர்களைத் துன்புறுத்தினர் அசுரர்கள். துன்பம் தாங்காத தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட, தனது நெற்றிக் கண்ணைத் திறந்து முருகனைப் பிறப்பித்தார். அதனை,

“அருவமும் உருவமும் ஆகி, அநாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பு

அது ஒரு மேனியாகி,
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்
பன்னிரண்டும் கொண்டே
ஒருதிருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன்
உலகம் உய்ய"

என்று கந்தபுராணம் சுட்டுகிறது.

இதில் முருகன் சிவபெருமானின் அவதாரமே என்பது புலனாகிறது. "**தோன்றினன்**" என்று குறிப்பிடாமல் "**உதித்தனன்**" என்று கூறுவது, மறைந்திருக்கும் ஒன்றையே வெளிப்படும்போது '**உதித்தல்**' என்று குறிப்பிடுவர். அவ்வாறு முருகன் சிவபெருமானின் ஆறாவது முகமாகத் தோன்றினான் என்பது வரலாறு. அழகாய் இருப்பதால் '**முருகன்**' என்றும் தருப்பை வனத்தில் தோன்றியதால் '**சரவணன்**' என்றும் கார்த்திகைப் பெண்பால் உண்டதால் '**கார்த்திகேயன்**' என்றும் ஆறுமுகம் உடையதால் '**சண்முகன்**' என்றும் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன.

இந்த முருகன், வளர்ந்து சூரனை வதம் செய்ய அன்னை, தந்தையரிடம் வேல்பெற்று வதம் செய்தது "**கந்தர் சஷ்டி**" என்று ஆறுநாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

இவ்விழா, திருத்தணியைத் தவிர மற்ற படைவீடுகளிலும் புகழ்ப்பெற்ற முருகன் ஆலயங்களிலும், மலேசியா பத்துமலை முருகன்கோயில், சிங்கப்பூர் ஈப்போ முருகன்கோயில், இலங்கை கதிர்காமம் முதலிய நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

இந்த விழாவின் ஆறாவது நாள் சூரபதுமன் தலைகீழான மாமர வடிவத்தில் வர, முருகன் வேலாயுதத்தால் பிளந்து சேவலும் மயிலுமாகக் கொண்டதை,

"மீறும் இலஞ்சிக் குறத்தியைக் கொண்ட
செவ்வேட் குறவன் முதல்வேட்டைக்குப் போநாள்
ஆறுநாட் கூடி ஒருகொக்குப் பட்டது
ஆகப்பட்ட கொக்கை அவித்தொரு சட்டியில்
சாறாக வைத்தபின் வேதப்பிராமணர் தாமும்
கொண்டார் சைவர் தாமும் கொண்டார்
பேறா முனிவரும் ஏற்றுக்கொண்டார் இதைப்
பிக்குச் சொல்லாமலே கொக்குப் படுக்கவே"

என்று திருக்குற்றாலக் குறவஞ்சி கூறுகிறது.

இதில் சூரனைக் '**கொக்கு**' என்று குறிப்பிடுவது மாமரம் என்ற பொருளிலாகும். அந்த மாமரமாகிய கொக்கை அறுந்த கோவாகிய முருகனையே சேவல் "**கொக்கு+அறு+கோ**" என்று

சிவ. சதீஸ்குமார்



கூவுகிறது என்பர் பெரியோர். இதுவே 'கொக்கறக்கோ' என ஆனது.

அனைத்து ஆயுதங்களும் அழிக்கக் கூடியவை. ஆனால் '**வேலாயுதம்**' மட்டும் காத்து நின்றது. இது தீமைபுரிந்த சூரனை அழிக்காமல் சேவலும் மயிலுமாக மாற்றியது. அதனால்தான் மனிதர்களுக்கு '**வேலாயுதம்**' என்று பெயர் வைக்கப்படுகிறது.

முருகனையே தனிப் பெருங்கடவுளாக வணங்கும் கௌமார சமயத்தில், வேலினைத் தனியே வழிபடுவது பழக்கத்தில் உள்ளது. இந்த வேலானது ஆழ்ந்து அகலமாகக் கூர்மையுடன் இருப்பது, மனிதனுக்கு அறிவு எப்படியிருக்க வேண்டும் என்பதன் குறியீடு ஆகும்.

சூரனை தன்மைமாற்றம் செய்த திருச்செந்தூரில் பன்னீர் இலையில் திருநீறு வழங்கப்படுகிறது. இந்த இலையானது வலிப்பு, காசம், கயம், குட்டம் முதலிய நோய்களைத் தீர்க்கும் மருத்துவத் தன்மையுடையது. தீராத வயிற்று வலியை இலைத் திருநீறு போக்கியதால், ஆதி சங்கரர் இங்கு '**சுப்ரமணிய புஜங்கம்**' என்ற நூலைப் பாடியுள்ளார். இவ்விலையிலுள்ள பன்னிரு நரம்புகள் முருகனின் பன்னிரு கைகளைக் குறிப்பனவாகும். இவ்விலையில் விபூதி பெறுவது முருகனின் பன்னிரு கைகளில் பெற்றதற்கு இணையாகக் கருதப்படுகிறது.

ஆறுநாள் விரதமானது குழந்தைப்பேற்றை நல்குவதாகும். "**சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்**" என்பது பழமொழி. ஆனால் இதன் உண்மை *விளக்கம் :* "**சஷ்டியில் இருந்தால் அகப்பையாகிய கருப்பையில் குழந்தை வரும்**" என்பது.

இந்த முருக வழிபாடு குழந்தையை மட்டுமே நல்காமல், நல்ல குணத்தையும் நல்குவதாக உள்ளது. எவ்வளவுதான் அறிவு இருந்தாலும் அது ஆக்குவதற்காகப் பயன்பட வேண்டும். அழிப்பதற்கு அல்ல என்பதை உணர்த்துகிறது.

முருகனிடம் என்ன வேண்ட வேண்டும் என்பதை பரிபாடல்...

"... ... ... யாம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல: - நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்"

என்கிறது. இவ்வாறான குணத்தையும் கொடுப்பதே குமரன் வழிபாடு. ●



தீபாவளி

இல. ராஜாராமநாதன்

முப்பது வருடங்களுக்கு முந்தைய
தீபாவளி தினங்கள்
என் நினைவில் வந்து போகின்றன...

சைக்கிளில் வரும் நடமாடும்
துணிக்கடையில் இருக்கும்
நான்கு நிறங்களில் ஏதாவது ஒன்றைத்
தேர்ந்தெடுக்கும் கட்டாயம் இன்று இல்லை...

ஊரில் இருக்கும் ஒரே தையற்கடையில்
தைக்கவேண்டிய கட்டாயம் இன்று இல்லை...

வீட்டில் சுடும் முறுக்கையும்
தயாரிக்கும் லட்டையும் தவிர
வேறு பலகாரங்கள்
சாப்பிட வேண்டிய கட்டாயம் இன்று இல்லை...

எண்ணெய் தேய்த்துக் குளிக்காமல் புதிய துணியை
உடுத்த வேண்டிய கட்டாயம் இன்று இல்லை...

ஐந்து ரூபாயில் வாங்கிய ஓலைவெடியை
எல்லோருடனும் சேர்ந்து
வெடிக்க வேண்டிய கட்டாயம் இன்று இல்லை...

புதிய படங்கள் பார்க்க தந்தையிடம் காசுக்குக்
கெஞ்ச வேண்டிய கட்டாயம் இன்று இல்லை...

தீபாவளித் துணியை
மறுநாள் பள்ளிக்கு அணிந்து செல்ல
பத்திரப்படுத்த வேண்டிய கட்டாயம் இன்று இல்லை...

தீபாவளிக்கு அடுத்துவரும்
கார்த்திகை தீப நாளில் மட்டுமே
மிச்சமிருக்கும் வெடியை
வெடிக்க வேண்டிய கட்டாயம் இன்று இல்லை...

வெளியூர் உறவினர்கள்
ஒரு நாளைக்கு முன்பே வந்து நம்மோடு
பண்டிகை கொண்டாட வேண்டிய
கட்டாயம் இன்று இல்லை...

இத்தனை கட்டாயங்கள் இன்று இல்லாவிட்டாலும்
அன்றைய மகிழ்ச்சியும்
விருந்தோம்பலும் விட்டுக்கொடுத்தலும்
கட்டாயம் இன்று இல்லை.



Registered with Registrar of Newspapers for India No. 42582/83
Licensed to post without Pre-payment under Regn. No. TN/WR/CBE/016/WPP/2018-20

Date of Publication
28.10.2020

Regd.No.CB/016/2018-20

OM SAKTHI - NOVEMBER - 2020

